Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

அதிபர் சாவேஸ்
மஹிந்தாவை
ஏன் ஆதரித்தார்?

APRIL 2013

# நாழிகை

NAZHIKAI
London
International Tamil Newsmagazine





தமிழ்நாடு

## பொறியில் பற்றிய தீ

மாணவர்களின் உண்ணாவிரதத்தில்
மாநிலம் முழுவதும் பரவிய எழுச்சி!

பஹ்ரவான் சிங்




Quality you can taste
Niru Europe Ltd, Unit11, Mitcham Industrial Estate, 85 Streatham Road, Mitcham, Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

**16** | இலங்கை
சர்வதேச ஊன்றுகோலில் தமிழர்கள்

**18** | இந்தியா
நரேந்திர மோடி
இந்தியாவின் அடுத்த பிரதமர்?

**28** | விருந்தினர் பக்கம்
ஏலத்தில் இந்தியா

**30** | நூல்
புலிகள் உணர்ந்திருந்தனரா?

**42** | விளையாட்டு - கிரிக்கெட்
சாதனைக் கோட்டையும் தாண்டிய பந்து



**22** | உலக விவகாரம்
ஹூகோ சாவேஸ்
இலங்கைக்கு ஆதரவாக ஏன் செயல்பட்டார்?



**08** | அட்டை செய்தி
தமிழ்நாடு
பொறியில் பற்றிய தீ

**46** | சினிமா
ஆதி பகவன்




**36** | சிறுகதை
அழியாத தடங்கள்

**48** | கால நதி




**33** | கலை
லண்டன் தியாகராஜ உற்சவம்




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: VIII, No: 2
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews Limited 123 Twyford Road Harrow Middx HA2 0SJ
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 728 2334 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
www.nazhikai.com

**Anual Subscription** (12 issues)**: UK** £22.00 **Europe** £30.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews Limited**
**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6 **Tel: 416 613 2770**

# இலங்கைத் தமிழர்களும் இந்தியாவும்

இந்திய தேசிய விடுதலைப் போராட்ட காலத்தில் தங்களது உணர்ச்சியிலும் ஆர்வத்திலும், இந்திய தேசிய இயக்கத்துடன் ஒன்றியிருந்தவர்கள் இலங்கைத் தமிழர்கள். விடுதலைப் போராட்ட செய்திகள் அவர்களின் தினசரி மூச்சாக இருந்தன. யாழ்ப்பாணத்தின் செல்வாக்குமிக்க இயக்கமாக விளங்கிய யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ், இந்திய தேசிய தலைவர்களுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தது. அதன் செயலாளராக பணிபுரிந்த ஹன்டி பேரின்பநாயகம், அசல் காந்தியவாதியாகவே திகழ்ந்தார். அந்த தொடர்பில், யாழ்ப்பாண மாணவர் காங்கிரசின் அழைப்பில், 1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்தார். சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும் கூட வந்தார்.

1931இல் நேரு குடும்பம் யாழ்ப்பாணம் வந்தது. அதற்கு சில மாதங்கள் முன்னதாக, கமலாதேவி சட்டோபாத்யாய யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது, உப்புச் சத்தியாக்கிரகம் பற்றியும், அதை முறியடிப்பதில் பிரிட்டிஷ் ஆட்சியினர் மேற்கொண்ட அடக்குமுறைகள்; அவற்றில் மக்கள் பட்ட துயரங்கள் பற்றியும் ஆக்ரோஷத்தோடு விபரித்தார். அதன் விளைவாக, அப்போது இலங்கையில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தார்கள். இது, இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளியாகும் இந்திய தேசிய தலைவர்களின் புகைப்படங்கள் தமிழர் இல்லங்களில் 'பிரேமி'மிட்டு, சுவர்களில் தொங்கின.

சுதந்திர இந்தியாமீது 1962இல் சீனா படையெடுத்தபோது, இலங்கையில் தமிழர்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழ் அரசுக் கட்சி, சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து, இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் தனது ஆதரவைத் தெரிவித்ததோடு, இலங்கை அரசு சீனாவைக் கண்டித்து, இந்தியாவுக்கு அதன் ஆதரவை அளிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தியது.

'தனது பாதுகாப்புக்கு போதிய ஆள் பலம் இந்தியாவிடம் இருப்பினும், மாண்புமிக்க கொள்கைகளுக்காகவே இந்தியா போரிடுவதால், மனித சுதந்திரத்துக்காக நடத்தப்படும் இப் புனித போரில் ஒரு சிறிதளவேனும் பங்கெடுக்க விரும்புவதனால், இப் போரில் பங்கெடுப்பதற்காக இலங்கை வாழ் தமிழ் பேசும் இளைஞர்களை தொண்டர்களாக சேரும்படி கட்சி அழைக்கிறது' என்றும் தமிழ் அரசுக் கட்சி அப்போது அறைகூவல் விடுத்தது.

1971இல் இந்தோ - பாகிஸ்தான் யுத்தத்தில், பாகிஸ்தான் விமானங்கள் இலங்கை வான்பரப்பினூடாக பறப்பதற்கும், பாகிஸ்தான் போர் விமானங்கள் இலங்கை விமானத் தளங்களில் எரிபொருள் நிரப்புவதற்கும் இலங்கை அரசு அநுமதித்தபோது, அதனைப் பாராளுமன்றத்தில் தமிழர்கள் வன்மையாக எதிர்த்துக் குரல் எழுப்பினார்கள்.

ஜே. ஆர். ஜயவர்த்தன ஆட்சிக்காலத்தில் பிரதமராகவிருந்த ஆர். பிரேமதாச, 'ஆசியான்' அமைப்புடன் இலங்கையையும் கூட்டுச் சேர்க்கும் ஓர் எண்ணத்தை வெளிப்படுத்தியபோது, தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை எப்போதும் இந்தியாவுக்கு ஆதரவாக, இந்தியாவையே பின்பற்றவேண்டும் என்றும் தமிழ் அரசுக் கட்சி எம்.பி.யான வி. தர்மலிங்கம் பாராளுமன்றத்தில் பலத்த கண்டனம் எழுப்பினார்.

இப்போது இந்தியாவில், தமிழ் நாட்டில் மாணவர்களும், பொதுமக்களும், பிரதான அரசியல் தலைவர்களும் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு வற்புறுத்தி மேற்கொள்ளும் தீவிர நடவடிக்கைகள் தமிழகம் தழுவி எழுந்தன. தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குறிப்பிடுவதுபோலவே, ஒரு 'தொப்புள் கொடி உறவின்' துடிப்பாக, இது அங்கு எழுகிறது. ஆனாலும், இத் தொப்புள் கொடி உறவுக்கும் அப்பால், இலங்கையில் தமிழர்கள், இந்தியாமீது நேசம் கொண்டிருந்தனர். அதனை, அப்போது இந்திய தலைவர்கள் புரிந்துகொண்டுமிருந்தனர்.

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொணர்ந்த தீர்மானத்தை மையமாகக் கொண்டு எழுந்த இந்த எழுச்சிப் பேரலையில், தமிழ்நாடு அரசின் தீர்மானங்களுக்கு மத்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித் என்ன கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், இந்தியாவின் தார்மீக பொறுப்பான ஒன்றை அவர் நிதானமாகவும் வற்புறுத்தியும் தெரிவித்திருக்கிறார்.

"இந்தியாவுக்கு அளித்த தெளிவான வாக்குறுதியின் இலக்குகளில் நடவடிக்கைகளைத் தொடரவைக்க, எவ்வளவு விரைவாகவும், எத்துணை தாக்கமாகவும் இலங்கையை வற்புறுத்துவது என்பதை நாம் தீவிரமாக சிந்திக்கிறோம்'' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் சார்ந்த, இலங்கையின் 13ஆவது அரசியலமைப்புத் திருத்த அமுலாக்கம் இந்த 'வாக்குறுதி' என்று அர்த்தப்படுத்த முடியும். முள்ளிவாய்க்காலுடன் தொடர்புபட்டு, இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னணியில், இது இந்தியாவின் தார்மீக பொறுப்பாகவே அமையும்.

இந்த 'யதார்த்தத்தை' வெல்லவைப்பதிலேதான் இப்போது தமிழ்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவு அவசியமானதாக அமையும். இலங்கைத் தமிழர்களின், 'கரணம் தப்பினால் மரணம்' என்ற தற்போதைய நிலையில், நிதானமான இச் சிந்தனையும் செயல்பாடும் மிக அவசியமானது. இலங்கை அரசு மேற்கொள்ளும் வெகு சாதுரியமான செயல்பாடுகளில், தமிழர்களுக்கான ஆதரவு நடவடிக்கைகள் சில, அவர்களுக்கு எதிரான ஆயுதங்களாக மாறும் அபாயம், இந்த நிதானத்தில் உணரப்படவேண்டும். ■

# உலகம்

## அச்சாகும் வேளையில்...



பிரிட்டன்

### மார்க்கிரெட் தச்சர் காலமானார்

# இரும்பு பிரதமர்

'இரும்பு நங்கை' என்று வர்ணிக்கப்பட்ட பிரிட்டனின் முதல் பெண் பிரதமர் மார்க்கிரெட் தச்சர், ஏப்ரல் 8ஆம் தேதி லண்டனில் காலமானார்.

கன்சர்வேட்டிவ் கட்சி பிரதமராக 1979இலிருந்து 1990 வரை பதவிவகித்த திருமதி தச்சர், சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக திகழ்ந்தபோதிலும், எதிரிகளாலும் கவரப்பட்டார்.

அரசுடைமையான பல தொழில் நிறுவனங்கள் இவரது ஆட்சிக்காலத்தில் தனியார் மயப்படுத்தப்பட்டதுடன், 1984 - 85 காலப்பகுதியில் சுரங்கத் தொழிலாளர்களின் பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தையும் இவர் எதிர்கொண்டார். 1982இல் போக்லாந்தில் ஆர்ஜன்ரைனாவின் ஆக்கிரமிப்புக்கெதிரான யுத்தத்தையும் வென்றார்.

மார்க்கிரெட் தச்சர், அயர்லாந்து பிரிவினைவாதிகளான 'ஐஆர்ஏ'யின் கொலைமுயற்யிசிலும் உயிர்தப்பினார். 1984இல் கட்சி மாநாட்டின்போது, இவர் தங்கியிருந்த பிரைற்றன் கிராண்ட் ஹோட்டல்மீது, இக் கொலைமுயற்சிக்கான குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஐரோப்பாவுடன் பிரிட்டன் இணைவதையும் பெரிதும் விரும்பாதவரான தச்சர், கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்தின் விழ்ச்சிக்குப் பின்னணியான சூத்திரதாரிகளுள் ஒருவராகவுமிருந்தார்.

மார்க்கிரெட் தச்சரின் பொருளாதார கொள்கைகளும் அரசியல் நடவடிக்கைகளும் இன்னமும் பெரும் விமர்சனங்களுக்குரியனவாகவே உள்ளன. வருமான உயர்வு தாழ்வின் தாக்கமும், சிலர் நலன்சார் நடவடிக்கைகளும், வட அயர்லாந்து யுத்தமும் இவ் விமர்சனங்களில் பிரதானமானவை. பிரிட்டிஷ் மக்களின் வாழ்வில் கடந்த 30 வருடங்களாக ஏதோவித தாக்கத்தை ஏற்படுத்தும் தச்சரின் நடவடிக்கைகள், மேலும் 30 ஆண்டுகளுக்கு நிலைக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

தச்சர் சீமாட்டிக்கு வயது 87.

## வட கொரியா

# அணு ஆயுத எச்சரிக்கை



ஐக்கிய நாடுகள் சபையினதும் மேலைத்தேய நாடுகளினதும் கடுமையான எச்சரிக்கைகள், அழுத்தங்களையும்மீறி வட கொரியா மீண்டும் ஒருதடவை அணுவாயுத சோதனையை மேற்கொண்டு, ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொண்ட அனைத்து ஒப்பந்தங்களையும் நிறுத்துவதாக வட கொரியா அறிவித்ததுடன், அணுவாயுத சோதனைகளையும் அது மேற்கொள்ளத்தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே, வட கொரியா கையிருப்பில் வைத்திருக்கும் ஏவுகணைகள் கண்டம் கடந்து கண்டம் தாக்கும் திறன்கொண்டவை. ஆயிரத்துக்கும் அதிகமான அத்தகைய ஏவுகணைகள் வட கொரியாவிடம் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இவற்றில், 6 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவைக் கடந்து, அமெரிக்காவை இலக்கு வைக்கும் திறன்கொண்ட ஏவுகணைகளும் அடங்குகின்றன.

இந்நிலையில், வட கொரிய வலயத்தில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கு அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி அங்கு மேகொள்ளும் பயணத்தை பெரும் நம்பிக்கையோடு மேற்குலகு பார்த்திருக்கிறது.

## தென் ஆபிரிக்கா

# மன்டேலா குணமடைகிறார்




அண்மைக்காலத்தில் இரண்டாவது தடவையாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மன்டேலா, உடல்நிலை தேறிய நிலையில் வீடுதிரும்பியுள்ளார். சுவாசப்பையில் ஏற்பட்ட கோளாறுகாரணமாக ஜோகனஸ்பேர்க் மருத்துவ மனையில் அவர் அநுமதிக்கப்பட்டிருந்தார்.

94 வயதாகும் நெல்சன் மன்டேலா மருத்துவ மனையில் அநுமதிக்கப்பட்ட செய்தி தென்னாபிரிக்கா மாத்திரமன்றி, முழு உலகின் கவனத்தையுமே ஈர்த்தது. தென்னாபிரிக்க சுதந்திர போராட்டத்தில் அவரின் நீண்ட சிறைவாசத்தின்போது, றொபென் தீவு சிறையில் அவருக்கு காச நோய் ஏற்பட்டு, அவரது சுவாசப்பை பலவீனமடைய ஆரம்பித்திருந்தது.

## மாலி

# பிரான்ஸ் தொடர்ந்தும் ஆயுத உதவி



ஆபிரிக்க நாடான மாலியில் இடைக்கால ஆட்சியைத் தக்கவைப்பதற்கு பிரான்ஸ், தொடர்ந்தும் ஆயுதம் மற்றும் பாதுகாப்பு உதவிகளை வழங்கும் என்று தெரிவித்துள்ளது. மாலி அரசை இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கு 4 ஆயிரத்துக்கும் அதிகமான படையினரை பிரான்ஸ் அனுப்பிவைத்திருந்தது.

அல்-கைடா அமைப்பினர் மாலியில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்கும் நோக்குடன் அனுப்பிவைத்ததாக கூறப்படும் இப் படையினரில் ஒருபகுதியினரை திருப்பி அழைப்பதற்கு பிரான்ஸ் முடிவுசெய்துள்ளபோதிலும், மாலியின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் பிரான்ஸ் மிகுந்த அவதானம் கொள்வதாகவும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் பவியஸ் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, மாலியில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் விதத்தில், விரைவில் அங்கு பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் பிரான்ஸ் வற்புறுத்துகிறது.

# சுவரொட்டி யுத்தம்

**பகுத்தறிவுப் பாசறையில் பிறந்தவையாக சொல்லிக்கொள்ளும் கட்சிகள், இறந்த சிறுவனை சுவரொட்டிகளில் இப்படி உயிர்ப்பிச்சை கேட்கச் செய்யவேண்டாமே**

இலங்கைத் தேயிலை, இலங்கை பிஸ்கட்டுகள், கொழும்புத் தேங்காய் எண்ணெய் போன்றவை ஒருகாலத்தில் இந்தியாவில் அதிகமாக வியாபாரம் ஆயின. இப்போது இங்கே பெரிய வியாபாரம், இலங்கை அரசியல். மேடைப் பேச்சுகளும், நடை பயணங்களும், உண்ணாவிரதங்களும், ஊர்வலங்களும் இலங்கைப் பிரச்னையைத் தீர்த்திருக்குமென்றால் எப்போதோ ஈழமோ, ஒன்றிணைந்த இலங்கையோ சாத்தியமாயிருக்கும்.

விளம்பரங்களினால் பயன் ஏதுமில்லை என்றாலும், நம்மவர்களின் நாடகம் தொடர்கிறது. இலங்கைக்குத்தான் இவற்றால் பயனில்லையே ஒழிய, தமிழக அரசியல் கட்சிகளுக்கு ஆதாயம் உண்டு; அல்லது, அப்படி இருப்பதாக கட்சித் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் இலங்கைப் பிரச்னை வாக்கு வேட்டைக்கு உதவவில்லை. இந்த வருடமோ அடுத்த வருடமோ நடைபெறக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்கு இலங்கை அரசியல் உதவக்கூடும்.

இலங்கைப் பிரச்னை தீர்வது தமிழக அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளைப் பொறுத்ததல்ல. குறிப்பாக, இப்போது மேற்கொள்ளப்படும் உத்திகள் எள் முனை அளவும் உதவாது. ஆனால், பொருளாதாரத்தைப் புறந்தள்ளி, மொழி, இனம் என்பதில் போலி அக்கறை காட்டி, மக்களை மயக்கும் அரசியல் கட்சிகளுக்கு இலங்கைப் பிரச்னை உதவும். அதனால்தான் இப்போது இது சூடு பிடித்திருக்கிறது. குறிப்பாக, பிரபாகரனின் மகன் இருந்த, இறந்த காட்சிப் புகைப்படங்கள், திராவிட கட்சிகளுக்கு வெகுவாக உதவுகின்றன. புதிய பிரச்சார உத்தி. நாங்கள் இதைச் செய்தோம் என்ற ஆக்கபூர்வமான அணுகுமுறை அல்ல, நீங்கள் இதைச் செய்யவில்லை என்றபடியான குற்றச்சாட்டுகளே.

பிரபாகரனின் மகன் தி. மு. க. வைப் பார்த்து கேட்பதுபோன்ற சுவரொட்டிகளை அ. இ. அ. தி. மு. க வும், அந்தச் சிறுவன் அ. இ. அ. தி. மு.

க. வைப் பார்த்துக் கேட்பதுபோன்ற சுவரொட்டிகளை தி. மு. க. வும் வெளியிட்டுள்ளன. தி. மு. க. மத்திய அமைச்சரவையிலிருந்து விலகியதும் அ. இ. அ. தி. மு. க. இந்த சுவரொட்டிப் போரைத் தொடங்கியது. முதல் சுவரொட்டியின் வாசகம்:

*"இத அப்பவே செய்திருந்தா<br>நா செத்திருக்க மாட்டேன்ல...<br>தாத்தா?<br>உயிர திரும்பத்<br>தா... தா..."*

இதற்கு பதிலடியாக தி. மு. க. ஒரு சுவரொட்யை வெளியிட்டது. அதன் வாசகம்:

"போர் என்றால் பொதுமக்கள் கொல்லப்படுவது சகஜம் என்று நீங்கள்<br>அன்று சொன்னதனால்தான் எனக்கு இந்த கதி.<br>என் உயிரைத் திருப்பித் தரமுடியுமா அம்மா?"

பகுத்தறிவுப் பாசறையில் பிறந்தவையாக சொல்லிக்கொள்ளும் கட்சிகள், இறந்த சிறுவனை சுவரொட்டிகளில் இப்படி உயிர்ப்பிச்சை கேட்கச் செய்யவேண்டாமே. சுவரொட்டி வாசகங்கள் இறந்தவர்களை உயிர்ப்பிக்குமா? இது பகுத்தறிவுக் கட்சிகளுக்குத் தெரியாததல்ல. இருப்பவர்களின் வாக்குகளைவிட, இறந்தவர்களின் வாக்குகளுக்கு இங்கு மதிப்பு அதிகம். இப்படி அநுதாப வாக்குகளைப் பெறுவதில் கட்சிகள் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல.

இறந்த அயல்நாட்டு பாலகனின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு அரசியல் கட்சிகள் இப்படி வியாபாரம் செய்யும்போது, பல வருஷங்களுக்கு முன்பு வெளியான கே. பாலசந்தரின் 'பொய்க்கால் குதிரைகள்' என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற ஒரு வசனமே நினைவுக்கு வருகிறது: *'The Country is full of posters and imposters.'* ■







நினைவுக்கு வரும்
கே. பாலசந்தரின்
'பொய்க்கால் குதிரைகள்'



# பொறியில் பற்றிய தீ

**ராஜீவ் காந்தி கொலையையடுத்து தமிழ்நாட்டில் அவனது தந்தை இழந்த பொது ஆதரவை, ஈழ விடுதலைக்காகவும் ஈழத் தமிழர்களுக்காகவும் பன்மடங்கு அதிகரித்த அளவில் பாலச்சந்திரன் இப்போது மீளப் பெற்றிருக்கிறான்**

பஹ்வான் சிங்




தென்தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்ட சிறு கிராமமொன்றில், ஒரு முஸ்லிம் தையல்காரருடனான சந்திப்பு எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. வீதியருகே, அவருடைய சிறிய ஓட்டுவீட்டின் வெளிப்பக்கமாக, பனை ஓலையால் வேயப்பட்ட பத்தியின்கீழ், தன்னுடைய தையல் இயந்திரத்தில் தனது வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தார். மற்றுமிரு பத்திரிகையாளர்களுடன், 1989 தமிழ்நாடு சட்டசபை தேர்தல் பிரசாரங்களை அவதானிக்க நான் சென்றிருந்தேன். வாக்காளர் மனோநிலையை அறிந்துகொள்வதற்காக சாதாரண மக்கள் பலருடன் நாம் உரையாடினோம்.

தன்னுடைய வேலையைச் சற்று நிறுத்திவிட்டு, எங்களுடன் சிறுதுநேரம் பேச மகிழ்ச்சியோடு அவர் சம்மதித்தார். குடிநீர் உள்பட அடிப்படைத் தேவைகளில் தன்னுடைய அச் சிறு கிராமம் உள்பட, முழு இராமநாதபுரம் மாவட்டமுமே எப்படி இன்னமும் பின்தங்கிய நிலையிலும் பற்றாக்



குறையுடனுமிருப்பதை அவர் விபரித்தார். அப்போது, அவருடைய இருக்கைக்குப் பின்னால் சுவரில் பிரபாகரனின் படத்துடனான விடுதலைப் புலிகளின் ‘கலண்டர்’ ஒன்றை நான் அவதானித்தேன். “நீங்கள் புலி ஆதரவாளரா, ஈழ யுத்தம் எப்படி முடியும் என்று நினைக்கிறீர்கள்?’’ என்று கேட்டேன்.

பதிலளிக்க அவர் ஒரு கணம்கூட தயங்கவில்லை. “அவங்க எங்களுட பிள்ளைங்க. நியாயமான போராட்டம்; நிச்சயமா வெல்லும். நாங்க வெல்ல வைப்போம்’’ என்றார்.

அந்த தையல்காரரின் உணர்வில் நான் நெகிழ்ந்துபோனேன். அவர்கள்மீதான அந்த பாசமும், அவர்களின் வெற்றியில் அவருக்கிருந்த திடமான நம்பிக்கையும் மிகவும் விசுவாசமானது. அந்த உணர்வை அப்போது தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பகிர்ந்துகொண்டிருந்ததும் எனக்கு தெரியும். அரசியல்வாதிகளென்று மாத்திரமன்றி, பெரும் படிப்பறிவு அற்ற அத் தையல்காரரிலிருந்து மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், கோடீஸ்வரர்களான வர்த்தகர்கள் என்று, மாநிலத்தின் பெரும்பாலான மக்கள் ஈழ போராட்டத்துக்கு ஆதரவாகவிருந்தார்கள்.

பின்னர், பொதுமக்களின் இந்த ஆதரவு அலையை அலட்சியமாகவும், எதிர்ப்பாகவும்கூட மாற்றிய துரதிருஷ்ட நிகழ்வு நடந்தது. ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொலைசெய்ய தேர்ந்தார்கள். ஸ்ரீபெரும்புதூரில் நிகழ்ந்த அக் கொலைக்குப் பின்னர் அந்த இராமநாதபுரம் தையல்காரரும் தனது மனதை மாற்றிக்கொண்டாரா என்பதை அறிய அவரை நான் பின்னர் சந்திக்கவில்லை. ஆனால், அவரும் பிரபாகரனின் கலண்டரை சுவரிலிருந்து உடனேயே அகற்றியிருப்பார் என்பது, அவரின் கூரைக்கடைக்கு சென்று பார்க்காமல், சென்னையிலிருந்தபடியே எனக்குத் தெரியும்.

அக் கொலைக்குப் பின்னர் பொதுமக்கள் ஆதரவை விடுதலைப் புலிகள் இழந்து, தமிழ்நாட்டின் சில சிறிய சமூக, அரசியல் குழுக்களிடமிருந்து கிடைத்த ஆதரவுடனேயே திருப்திகொள்ள நேர்ந்தது. தமிழக மீனவர்களிடமிருந்து எரிபொருளுக்கும், கருங்கல் ஒப்பந்தகாரரிடமிருந்து வெடிபொருள்களுக்கும், மொத்த விற்பனையாளர்களிடமிருந்து உணவுப் பொருள்களுக்கும் இரகசியமானமுறையில், எப்படி உபரி பணம் கொடுத்தார்களோ அதுபோலவே, தமிழ்நாட்டில் தமது ஆதரவுத் தளத்தை பேண இப் பிரசாரகர்கள் பலருக்கு கொடுப்பனவுகளையும் இவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்ததென்பது பொதுவாகவே புரிந்துகொள்ளக்கூடியது. ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் பொதுமக்கள் ஆதரவு மங்கியதில் ‘கியூ’ பிரிவு பொலீசாரின் கண்காணிப்பின் மத்தியில் தமிழ்நாட்டில் வேறு போர் முனைப்புக்கான உதவிகள் மிகவும் கடினமாகின. ஈழ தீவிரவாதிகளிடமிருந்து தூர விலகியிருப்பது உகந்ததும் பாதுகாப்பானதுமென்று தமிழ்நாட்டில் பலர் தீர்மானித்துக்கொண்டார்கள்.

பெரும்பாலும் அதனால்தான், ஈழ யுத்தம் 2008 பிற்பகுதியிலும் 2009 முற்பகுதியிலும் அதன் கொடூர உச்சத்தை அடைந்தபோது, ஈழ ஆதரவான அரசியல், சமூக அமைப்பு




**காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஒன்பது ஆண்டுகால உறவை முடித்துக் கொள்ள திராவிட முன்னேற்ற கழகம் மேற்கொண்ட தீர்மானம், தமிழ்நாட்டின் ஈழ எழுச்சிகளில் ஏற்பட்ட அதிமுக்கிய அரசியல் திருப்பமாகும்**

களைச் சார்ந்த சிலர் மட்டுமே வீதிகளில் இறங்கி, மனித சங்கிலி போராட்டங்களையும் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். அத்தோடு, முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பிணமாகி, பிரபாகரனும் கொலைசெய்யப்பட்டபோது, பொதுமக்கள் கொந்தளிப்பு பெருமளவில் இல்லாதுபோனதும் இதனால்தான். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சில எதிர்ப்பு நடவடிக்கைகள் தமிழகத்தில் நிகழ்ந்தது உண்மைதான். ஆனால், தமிழ்நாடு முழுவதும் இப்போது கண்ட கொந்தளிப்புடன் ஒப்பிடுகையில், அந்த எதிர்ப்புகள் ஒரு பொருட்டல்ல. தமிழ்நாடு இப்பொழுது முற்றிலும் உறைந்துபோன நிலையிலிருக்கிறது; அதே வேளை, பற்றி எரிகிறது. கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் அரசு உத்தரவையடுத்து மூடப்பட்டதில் அவற்றின் செயல்பாடுகள் உறைந்துபோயுள்ளன. சமூகத்தின் எல்லா பிரிவிலுமான, குறிப்பாக மாணவ சமூகத்தின் பரவலான எழுச்சிகளில் பற்றி எரிகிறது.

இந்த அனைத்து மக்கள் எழுச்சியின் மத்தியில் ஒரு சிறுவன். மாணவர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், விவசாயிகள், மனித உரிமைவாதிகள், குடும்ப பெண்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் என்று தமிழ்நாடு முழுவதும் எழும் கோபாவேச எழுச்சியின் உந்துசக்தியாக 12 வயதுச் சிறுவன் பாலச்சந்திரனின் சுவரொட்டிப் படங்கள் திகழ்கின்றன. ராஜீவ் காந்தி கொலையையடுத்து தமிழ்நாட்டில் அவரது தந்தை இழந்த பொது ஆதரவை, ஈழ விடுதலைக்காகவும் ஈழத் தமிழர்களுக்காக



வும் பன்மடங்கு அதிகரித்த அளவில் பாலச்சந்திரன் இப்போது மீளப் பெற்றிருக்கிறான். தமிழ்நாடு எங்கும் அவனது உருவம் மாணவ எழுச்சியாளர்களின் பதாகைகளில்; சுவர்களில் தெரிகிறது. ஒருவேளை, 1989இல் இராமநாதபுரம் கிராமத்தில் நான் சந்தித்த தையல்கார நண்பரும் இன்னமும் அங்கிருந்தால், அவரின் கடைச் சுவரிலும் இந்த சுவரொட்டி இருக்கும்.

பாலச்சந்திரன் 'பிஸ்கட்' ஒன்றை மெதுவாக மெல்லுவதும், பின்னர் மார்பில் ஐந்து குண்டுக் காயங்களுடன் இறந்து கிடப்பதுமான துயர காட்சிகளை உலுகம் முழுவதும் வெளிக்கொணர்ந்த 'சனல்-4' மற்றும் செய்தி நிறுவனங்களுக்கு தமிழ் மக்கள் நிச்சயம் நன்றியுடையவர்கள். சனல்-4 தொலைக்காட்சியின் 'இலங்கையின் கொலைக்களம்' தொடரில் அப் படங்களைப் பார்த்தபின்னர், வைர நெஞ்சங்களை மாத்திரமல்ல, மாறுபட்ட நெஞ்சங்களையும் தமிழ்நாட்டில் அவை அழவைத்தன. வகுப்புகளைப் பகிஷ்கரித்து தமது புதல்வர்களும் புதல்விகளும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை நிச்சயமாக விரும்பாத தாய்மார் இப்

**இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் ஜெயலலிதா தனது சீட்டை நன்றாகவே ஆடி, ஈழத் தமிழர்களின் விசுவாசத்துக்குரிய நட்புடையவராக மிளிர்கிறார். ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதிலிருந்து விடுதலைப் புலிகளை அவர்களின் தீவிரவாத நடவடிக்கைகளுக்காக ஜெயலலிதா எதிர்த்தாலும், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான தனது பிரச்சாரத்தில் அவர் உறுதியாகவே இருக்கிறார்**

போது, பாலசந்திரனுக்கும் அவனது ஈழத் தமிழர்களுக்கும் நீதி கிடைக்க, சென்று கிளர்ந்தெழுங்கள் என்று சொல்லி அனுப்புகிறார்கள். ஜெயலலிதா அரசு கல்லூரிகளை மாத்திரமன்றி, கல்லூரி விடுதிகளையும் மூடவிடுத்த உத்தரவுடன், மாணவர் எழுச்சிகள் விரைவாகவும் காத்திரமாகவும் பரவின. இப்போது, பரீட்சைகள் பின்போடப்பட்டு, அதனால் புதிய பட்டதாரிகளின் வேலைக்கான வாய்ப்புகள் பாதிப்புக்குள்ளாகலாம் என்பதால், பெற்றோரிடமிருந்தும் பேராசிரியர்களிடமிருந்தும் கல்லூரிகளை மீள ஆரம்பிப்பதற்கான வேண்டுகோள்கள் மெதுவாக எழுகின்றன. (பரீட்சைகள் பொதுவாக ஏப்ரல் - மே மாதங்களில் நடைபெறுகின்றன.)

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் (ஐ. மு. கூ) ஒன்பது ஆண்டுகால உறவை முடித்துக்கொள்ள திராவிட முன்னேற்ற கழகம் (தி. மு. க.) மேற்கொண்ட தீர்மானம், தமிழ்நாட்டின் ஈழ எழுச்சிகளில் ஏற்பட்ட அதி முக்கிய அரசியல் திருப்பமாகும். கட்சி தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் மார்ச் 19 வியாழக்கிழமை அவசரமாக நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி, நீடித்த குழப்பத்தின் ஈற்றில் முடிவை அறிவித்தார். "ஈழத் தமிழர்களுக்கு பயனளிக்காத ஒரு நிலை உருவாக்கப்பட்டுவிட்ட போது தி. மு. க. தொடர்ந்தும் அரசில் இணைந்திருப்பது தமிழ் இனத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, மத்திய அமைச்சரவையிலிருந்தும் கூட்டணியிலிருந்தும் விலக தி. மு. க. தீர்மானித்திருக்கிறது'' என்று, நிருபர்கள் நிறைத்திருந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கருணாநிதி அறிவித்தார்.

எனினும், ஈழத் தமிழர்கள்மீதான இனப் படுகொலைக்காக ராஜபக்ஷ அரசைக் கண்டித்தும், இலங்கையில் நிகழ்ந்த யுத்த குற்றங்களுக்கு ஒரு சர்வதேச, சுயாதீன விசாரணைக்கு கோரியும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொணர்ந்தால் தி. மு. க. தனது முடிவை மீள் பரிசீலிக்க தயார் என்று தெரிவித்து, காங்கிரசுடன் மீண்டும் நல்லிணக்கத்துக்கான கதவை திறந்தும் வைத்தார் கருணாநிதி. இது, நிச்சயமாக காங்கிரசுக்கு சாத்தியமற்ற ஒரு நிபந்தனையாகும். ஏனெனில், ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பில் அமெரிக்க அநுசரணையுடனான தீர்மானத்தை மென்மைப்படுத்துவதில் கொழும்புக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளை பிரதமரும் இந்திய வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளும் ஏற்கனவே மேற்கொண்டிருந்தனர். ஐ. நா. தீர்மானம் முதலில், யுத்த குற்றங்களுக்காக இலங்கை அரசுமீதான கண்டனத்தையும், சர்வதேச, சுயாதீன விசாரணை ஒன்றையும் வற்புறுத்தியது. அமெரிக்க ஆதரவு தீர்மானத்தில், எட்டு அங்கத்தவர்களைக்கொண்ட சர்வதேச குழுவொன்று இலங்கை சென்று முன்னைய குற்றங்களையும், தமிழ்ப் பகுதிகளிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தற்போது எழும் காணாமல்போதல், மாற்றுக் கருத்துக்களுக்கான ஒடுக்குதல்போன்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையும்பற்றி அறிந்துகொள்ளவும், இலங்கையில் ஜனநாயக அமைப்புகள் பாதுகாக்கப்படுவதையும், தமிழர்கள் சம உரிமையுடனும் கௌரவத்துடனும் வாழ்வதையும் உறுதிப்படுத்தும் எதிர்கால நடவடிக்கைகளுக்கான சிபாரிசுகளை வழங்குவதற்கும் கோரப்பட்டது.

ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பில் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு முன்னதாக, சர்வதேச குழு, மஹிந்த அரசாங்கத்தின் அநுமதியுடனும் ஒத்துழைப்புடனும் மட்டுமே இலங்கையுள் பிரவேசிக்கமுடியும் என்ற விதத்தில் அது மென்மைப்படுத்தப்பட்டதை இந்தியா உறுதிசெய்துகொண்டது. தனியொரு நாட்டைக் குறித்த தீர்மானமெதனையும் கொணரக்கூடாது என்பதும், சிபார்சு செய்யப்படும் எந்த நடவடிக்கையும் தலையீடாக தென்படக்கூடாது என்பதும் இந்தியாவின் நிலைப்பாடாகும். ஏனெனில், இலங்கைக்கு எதிராக அத்தகையதொரு தீர்மானமும் முடிவும் எடுக்கப்பட்டால், காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவைக் குறிவைக்கும் சில நாடுகளால் இதே முறை பின்பற்றப்பட இது ஏதுவாகலாம் என்ற எச்சரிக்கை இந்தியாவுக்கு உண்டு. அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்திருப்பதாக சென்னைக்கு செய்தி கிட்டியதும், தீர்மானம் தொடர்பில் தி. மு. க. திருப்தியடையவில்லை. கடந்த சில தினங்களாக திரைமறைவில் நிகழ்ந்த நடவடிக்கைகள் அதனை பெருமளவு சிதைத்துவிட்டன என்று கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் ஜெயலலிதா தனது சீட்டை நன்றாகவே ஆடி, ஈழத் தமிழர்களின் விசுவாசத்துக்குரிய நட்புடையவராக மிளிர்கிறார். ராஜபக்ஷ அரசாங்கம், யுத்தத்தில் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு பூரண புனர்வாழ்வும், இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் சம உரிமையும், பாதுகாப்புக்கு உத்தரவாதமும் அளிக்க தவறின், கொழும்புக்கு எதிராக பொருளாதார தடை விதிப்பதற்கான தீர்மானத்தை அவர் தமிழ்நாடு சட்டசபையில் முதன்முதலில் கொணர்ந்தார். குறிப்பாக, ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதிலிருந்து விடுதலைப் புலிகளை அவர்களின் தீவிரவாத நடவடிக்கைகளுக்காக ஜெயலலிதா எதிர்த்தாலும், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான தனது பிரச்சாரத்தில் அவர் உறுதியாகவே இருக்கிறார். இக்கட்டான இவ்வேளையில், நம்பிக்கையான உதவிக்கு உலக தமிழர்கள் ஜெயலலிதாவை இப்போது நாடுவதாக லண்டனிலிருந்து உலக தமிழர் பேரவை பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் என்னிடம் கூறினார். முதலமைச்சர் ஜெயலலிதா தமிழர்களுக்காக தொடர்ந்து ஆதரவளித்துவருகிறார். "எமது துயர வரலாற்றின் நெருக்கடி மிகுந்த இக் காலகட்டத்தில் அவர் உமக்கு உதவுவார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு'' என்று சுரேன் கூறினார்.

உண்மையில், இந்த ஆண்டு நவம்பரில் நடக்கவிருக்கும் பொதுநல நாடுகளின் தலைவர்கள் மாநாட்டைக் கொழும்புக்கு மாற்றான உகந்த இடமாக, சென்னையில் நடாத்துவதற்குக்கோர உலக தமிழர் பேரவை உள்பட பலர் முதலமைச்சர் ஜெயலலிதாவை கோருவதாகவும் உலக தமிழர் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

சுரேனும் அவரது உலக தமிழர் பேரவையும் மாத்திரமல்ல, மற்றும் பல நாடுகளில் வாழும் தமிழ் நண்பர்களும் பலர், ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக, நம்பிக்கையுடன் செயல்படுபவராக ஜெயலலிதாவைத் தாம் கருதுவதாக என்னிடம் தெரிவித்தனர். பெரும்பான்மையான தமிழ்நாட்டு மக்களிடமும் இவ்வித உணர்வே இருக்கிறது. ஆனால், முக்கியமானது என்னவெனில், உலக தமிழர்கள் ஒன்றிணைய வேண்டும். ஓர் உலக கூட்டை அவர்கள் உருவாக்கவேண்டும். அதன்மூலம், ஈழத் தமிழர் உரிமைகளுக்கான கோரிக்கைக்கு ஆதரவைத் திரட்டும் விதத்தில், பல்வேறு நாட்டு அரசுகளுடனும் பேசவேண்டும்.

தொடரும் மாணவர் எழுச்சி, 2014இல் நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்ற தேர்தலில் ஜெயலலிதாவுக்கு மிகப்பெருமளவில் உதவலாம் என்று தமிழ்நாட்டில் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். ஏனெனில், புதிய வாக்கா


ளர்களாக வாக்குரிமைபெறும் இம்மாணவர்கள், இறுதிக் கட்ட போரில் ராஜபக்ஷ அரசுக்கு உதவிபுரிந்து, ஈழத் தமிழர்களுக்கு காங்கிரஸ் தலைமை நம்பிக்கைத் துரோகமிழைத்ததுமாத்திரமன்றி, பின்னர், ஐ. நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவின் தீர்மானத்தை நீர்க்கச்செய்து முடமாக்கியதிலும் காங்கிரஸ் கட்சிமீது மிகுந்த ஆத்திரமுற்றிருக்கிறார்கள். அத்துடன், ஈழத் தமிழர்களுக்கு உதவ புது டில்லி அழுத்தங்களை ஏற்படுத்துவதில் எதுவும் செய்யாததில் தி. மு. க. மீதும் அதிருப்திகொண்டிருக்கிறார்கள். வேறு வழியில்லாததிலேயே கூட்டணியுடனான உறவை தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி துண்டிக்க தீர்மானித்ததாக கட்சியின் தீவிர ஆதரவாளர்களையும் கட்சி உறுப்பினர்களையும் தவிர, மக்கள் பலர் நினைக்கிறார்கள். கூட்டணியிலிருந்து வெளிநடப்புச்செய்யும் தனது கோரிக்கைக்கு கருணாநிதி உடன்படாவிடின், தான் அரசியல் அஞ்ஞாதவாசம் செய்ய நேரும் என்று மகன் ஸ்டாலின் பயமுறுத்தினார். ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இடம்பெறும் நடவடிக்கைகளில் மக்கள், குறிப்பாக மாணவர்கள் தி. மு. க. வுக்கு எதிராக பெருமளவில் திரும்புகிறார்கள். இந் நிலையில், தொடர்ந்தும் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்திருப்பது தமிழ்நாட்டு அரசியலில் தி. மு. க. வை அரசியல் சாக்கடைக்கே கொண்டு செல்லும் என்று ஸ்டாலின், தந்தைக்கு கூறினார். நிதி அமைச்சர் ப. சிதம்பரம், பாதுகாப்பு அமைச்சர் ஏ. கே. அந்தோனி, சுகாதார அமைச்சர் குலாம் நபி அஸாட் ஆகிய மூவரடங் கிய காங்கிரஸ், ஐ. மு. கூட்டணி தூதுக்குழு, ராஜபக்ஷ அரசுடனான இந்தியாவின் உறவைத் துச்சமாக்கி, ஜெனிவாவில் தமிழர்களுக்கு ஆதரவளிக்க காங்கிரஸ் தலைமை உ: ன்படுமென்று, கருணாநிதிக்கு ஆறுதலளிக்கும் எந்த உத்தரவாதத்தையும் அளிக்கமுடியவில்லை.

சுவாரஷ்யமான விதத்தில், கருணாநிதி கூட்டணியுடனான உறவைத் துண்டித்த 48 மணி நேரத்துள் இந்தியாவின் உயர் புலனாய்வு முகவர்களான சிபிஐ, ஸ்டாலினின் இல்லத்தை சோதனையிட்டது. வரி செலுத்தாமல், தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு கார்கள் தொடர்பிலான பெரும் ஊழல் விசாரணையின் ஓர் அங்கமே இதுவெனினும், கூட்டணியிலிருந்து விலகும் கட்சியின் தீர்மானத்துக்கான பழிவாங்கல் நடவடிக்கையாகவே இந்த சிபிஐ சோதனையை நடாத்தியதாக ஸ்டாலினும் தி. மு. க. தொண்டர்களும் காங்கிரஸ் தலைமைமீது குற்றம் சுமத்தினார்கள். அமைச்சர் சிதம்பரம், சிபிஐ நடவடிக்கையை வன்மையாக கண்டிப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்ததோடு, சம்பந்தப்பட்ட மத்திய அரசு அமைச்சரிடம் இச்சோதனை நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் தெரிவித்தார். குறிப்பாக, கடைசி பாராளுமன்ற தேர்தலில் தான் தெரிவாவதற்கு தி. மு. க. தலைவர் அளித்த ஆதரவையடுத்து, காங்கிரசில் சிதம்பரம் கருணாநிதியின் தீவிர ஆதரவாளராக விளங்குகிறார். சிபிஐ சோதனையை பகிரங்கமாக கண்டிப்பதன்மூலம், காங்கிரசுடனான உறவு அற்றுப்போனாலும் தனக்கும் கருணாநிதிக்குமிடையிலான தனிப்பட்ட நட்பு நிச்சயம் தொடரும் என்ற செய்தியை சிதம்பரம் இதன்மூலம் தெரிவித்திருக்கிறார். இதனால், அவரது சிவகங்கைத் தொகுதியில், அடுத்த ஆண்டு அவரின் வெற்றியை உறுதிப்படுத்தமுடியும்.

தற்போதைய நிலையில், தேர்தல் வெற்றி சிதம்பரத்துக்கும் அவரது காங்கிரஸ் கட்சிக்கும் கடினமான ஓர் இலக்காகவே இருக்கும். மக்கள் விரைவில் மறந்துவிடுவார்கள்தான்; 2014 தேர்தலுக்கு முன்னதாக, காலப்போக்கில் பாலச்சந்திரனின் படங்களும் மங்கிவிடலாம். அத்துடன், வேறு பிரச்னைகள் அரசியல் அரங்கை நிறைக்கலாம். தமிழ் நாட்டில் விலைவாசி உயர்வு, மின் பற்றாக்குறை, கட்டுமானப் பிரச்னைகள் எதிர்வரும் மாதங்களில் மக்கள் கவனத்தை ஈர்க்கலாம். ஆனால், மாணவர்கள் இவ்விவகாரத்தில் பெருமளவில் ஈடுபட்டதிலிருந்தும், அரசியலிலும் அரசியல்வாதிகளுடனும் அவர்கள் சேராததிலிருந்தும் ஈழ எழுச்சி வெகு காலம் மக்கள் மனங்களில் ஆழமாக பதிந்திருக்கும் என்றே பொதுவில் உணரப்படுகிறது.

ஈழத் தமிழரின் நீதிக்கான பிரசாரத்தை மாணவர்கள் மிகவும் கண்ணியமான விதத்தில் கொண்டுசெல்கிறார்கள். மாநிலம் தழுவிய அவர்களின் போராட்டம் சென்னையின் கீர்த்திமிக்க லொயோலா கல்லூரியின் எட்டு மாணவர்கள் தொடங்கிய சாகும்வரை உண்ணாவிரதத்துடன் ஆரம்பித்தது. சாவதைவிட, உன்னதமான நீங்கள் உயிருடன் வாழ்ந்து, ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை தொடர்வது மேலானதாகும் என, பல தரப்பிலிருந்தும் எழுந்த கோரிக்கைகளையடுத்து மார்ச் 11ஆம் தேதி, நான்கு நாள்கள் தொடர்ந்த தமது உண்ணாவிரதத்தை அவர்கள் நிறுத்தினார்கள். ஆனால், இந்த எட்டுப்பேர் ஏற்றிய பொறி, மாநிலம் முழுவதும் காட்டுத் தீயாக பற்றி எரிந்தது. பல்வேறு கல்லூரிகளினதும் பல்கலைக்கழகங்களினதும் மாணவர்கள், பெரும்பாலும் பெண்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தார்கள். வீதிகளையும் புகையிரத பாதைகளையும் மறித்தார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவிகளை எரித்தார்கள். இவர்களது எழுச்சி பொதுவில் அமைதியாகவும் ஒழுங்கு, கட்டுப்பாட்டுடனுமே அமைந்தது. அதிலும் முக்கியமாக, தங்கள் போராட்டத்தை திசைதிருப்பிவிடவல்ல அரசியல்வாதிகளின் கைப்பாவைகளாகிவிட மறுத்தார்கள். உண்மையில், தமிழ்நாடு முன்னாள் காங்கிரஸ் தலைவர் கே. வி. தங்கபாலு, லொயோலா கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதத்தின்போது அங்கு சென்று, காங்கிரஸ் கட்சி எப்போதும் ஈழத் தமிழர்களுக்காக அவர்களோடு நிற்கிறது என்று உரிமைகோரி பேசமுனைந்தபோது, மாணவர்கள் அவர்மீது காலணிகளை வீசியதில், அவர் அவ்விடத்தை விட்டு அகன்றார். அனைத்து அரசியல்வாதிகளிடமிருந்தும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் விலகி, சுதந்திரமாக எமது எழுச்சியை நாம் வழிநடத்திச் செல்வாம் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்று, லோயோலா மாணவர் தலைவர் தெரிவித்தார்.

எல்லா மாணவர் ஆர்ப்பாட்டங்களிலும் அரசியல்வாதிகள்மீதான இந்த வெறுப்பு தொடர்ந்து வெளிப்பட்டது. இவ்விதத்தில், பொதுமக்கள் ஆதரவை மாணவர்கள் பெருமளவில் பெற்றிருக்கிறார்கள். வீடுகளில் பெரியவர்கள் இவர்களுக்கு அளித்த உற்சாகம் சொல்லவேண்டியதல்ல. டெல்லியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு எதிரான இவர்களின் சுலோகங்கள் தினமும் ஓங்கி ஒலிக்கின்றன. நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகளில் காங்கிரஸ் பல மாநிலங்களில் தனது செல்வாக்கை இழக்கையில், தமிழ் நாட்டின் 39 ஆசனங்களும் பாண்டிச்சேரியின் ஓர் ஆசனமும் 2014இல் நடைபெறவிருக்கும் அடுத்த தேர்தலில் அரசாங்கத்தை அமைப்பதற்கு மிகவும் முக்கியமானவையாக அமையும். காங்கிரசுடனும் கூட்டணியுடனும் உறவைத் துறந்தாலும், தி. மு. க. வுக்கு அந்த உறவு ஒரு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்ததாகவும் இல்லை. ஏனெனில், தி. மு. க. வின் முடிவு காலங்கடந்தது என்று பலர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள். ■




Accomodates up to 650 with complete onsite parking facility for more than 150 cars

G&G Event Specialists Ltd. Snakey Lane, Feltham, Hounslow, TW13 7NA. 07788560001. www.nakshatrahall.com




# சர்வதேச ஊன்றுகோலில் இலங்கைத் தமிழர்கள்

**அத்துமீறிய குடியேற்றங்கள், காணிகள் அபகரிப்பு, இராணுவ தளங்களின் விஸ்தரிப்பு போன்றவை, வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் தமிழர் தாயகமென்ற அடிச்சுவட்டையே இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளாக அமைந்துள்ளன**

தண்டாயுதன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா நிறைவேற்றியுள்ள தீர்மானம் சர்வதேச உறவுகள் தொடர்பில் இலங்கையின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது என்றே சொல்லலாம். அதேசமயம், யுத்த குற்றச்சாட்டுக்கள், சர்வதேச விசாரணை என்று அமெரிக்க பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களின்மூலம், இலங்கையைத் தட்டிக்கேட்பதற்கு ஒரு சக்தி எப்போதும் இருந்துகொண்டேயிருக்கிறது என்பதையும் ஜெனிவா தீர்மானம் எடுத்துரைத்திருக்கிறது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்திருந்தது. இதன்பின்னர், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முழு உலகையும் வெற்றிகொண்டதுபோலவே தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது. இலங்கை அரசின் யுத்த வெற்றி, மறுபுறத்தே இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நிகழ்ந்த பாரிய யுத்த குற்றங்களை மூடிமறைத்துவிடுவதாகவும் இருந்தது.

ஆயினும், 'தன்வினை தன்னைச் சுடும்' என்பதுபோல, இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்பட்ட விபரிக்கமுடியாத மனித அவலங்களை ராஜபக்ஷ அரசின் இராணுவத்தில் அங்கம்வகித்த படைத்தரப்பினரில் ஒரு சாராரே உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளனர். பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்ட அரிய தகவல்கள் முதல்கொண்டு, இப்போது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகர

னின் இளைய புதல்வர் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது வரையிலான படங்களோடு கூடிய தகவல்கள், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது களத்திலிருந்த படைத்தரப்பினராலேயே அழுத்தம் திருத்தமாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் அமெரிக்காவின் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது, இறுதிக்கட்ட யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற அவலங்கள் 'சனல்-4' தொலைக்காட்சி வாயிலாக உலகின் கவனத்தை ஈர்த்திருந்தது. ஆனால், இந்த தடவை ஜெனிவாவில் அமெரிக்காவின் பிரேரணை கொணரப்பட்டபோது, பாலச்சந்திர னின் மரணம் முழு உலகையுமே உலுப்பிவிடுவதாக அமைந்தது. அப் பாலகன் படுபாதகமான முறையில் கொல்லப்பட்ட சம்பவம் எந்தவொரு கல்நெஞ்சையும் உருக வைப்பதாகவே உள்ளது.

கொல்லப்படுவதற்கு சில நிமிடங்கள் முன்பாக தனக்கு என்ன நேரப்போகிறதென்பதையே அறியாது, அப்பாவித்தனமாக அச் சிறுவன் அமர்ந்திருக்கின்ற காட்சி; அதன்பின்னர், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோடு அவன் சடலமாக கிடக்கும் காட்சி என்பவை கொடூரத்தின் உச்சநிலையை எடுத்துக் காட்டுமாப்போல் உள்ளன.

பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படம் தமிழ்நாட்டில் ஓர் 'ஆவி உலக சஞ்சாரத்தையே' ஏற்படுத்திவிட்டிருந்தது. அத்துடன், ஒரு பேரலையாக தமிழக இளைஞர் சமூகத்தையும் கிளர்ந்தெழ வைத்திருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் தமிழருக்கெதிரான வன்முறை யென்பது ஒரு தொடர்கதையாகவே தொடர்கிறது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன்கூட, அமெரிக்க 'ரைம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில், இலங்கையில் பாணந்துறைப் பகுதியில் இந்துக் கோவில் ஒன்றில் குருக்கள் ஒருவர் உயிரோடு தீமூட்டிக் கொல்லப்பட்ட சம்பவம்பற்றிய தகவலே தனது மனதில் ஆழப்பதிந்து, தமிழரின் பாதுகாப்பு குறித்து சிந்திக்க உந்தியதாக குறிப்பிட்டிருந்தார்.

பிரபாகரன் அப் பேட்டியில் குறிப்பிட்ட சம்பவம் 1958ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது இடம்பெற்ற ஒரு மோசமான சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இலங்கைத் தமிழர்களின் ஆயுத போராட்டமென்பது பன்னெடுங்கால அடக்குமுறைகள், ஏமாற்றங்கள் என்பவற்றின் விளைவாகவே தோன்றியிருந்தது. ஆயினும், சுயநலம், பரந்த சிந்தையின்மை, போட்டி மனப்பான்மை, அரசியல் ராஜதந்திரமின்மை, ஒருவழிப்போக்கு என்பவை காரணமாக, இலங்கைத் தமிழரின் ஆயுத போராட்டம் எவ்வித நற்பயனையும் தராது, வேரோடு சாய்ந்துள்ளதை அவதானிக்கலாம்.

மூன்று தசாப்த காலமாக தொடர்ந்த போராட்டத்தில் பல இராணுவ ரீதியிலான வெற்றிகள் கிட்டியிருக்கலாம். ஆனால், அவ் வெற்றிகளை ஈட்டுவதற்கு மேற்கொண்ட எண்ணிலடங்கா உயிர்த்தியாகங்கள் யாவும் பயனற்றுப்போய், வடக்கு - கிழக்கு பிரதேசம் தமிழர் தாயகமாக பரிணமிப்பதற்கு பதிலாக சுடுகாடாக மாறியிருக்கிறது. பல்வேறு உரிமைகளுக்காக நடாத்தப்பட்ட போராட்டம், ஓர் அங்குலமளவுக்குக்கூட நகரமுடியாது, வரலாறு காணாத தோல்வியை தழுவியுள்ளது.

இன்று, வடக்கு - கிழக்கில் காணப்படும் அதிக அளவிலான இராணுவ பிரசன்னம், அத்துமீறிய குடியேற்றங்கள், காணிகள் அபகரிப்பு, இராணுவ தளங்களின் விஸ்தரிப்பு போன்றவை, வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் தமிழர் தாயகமென்ற அடிச்சுவட்டையே இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளாக அமைந்துள்ளன. தாயக கோட்பாடு என்ற அடிப்படையில், எவற்றுக்காக போராட்டம் நடாத்தப்பட்டதோ அவை யாவற்றையும் இழந்து, பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறிய கதையாகவே இலங்கைத் தமிழர் விவகாரம் மாற்றங்கண்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் திரும்புமிடமெல்லாம் புனர்நிர்மாணம், மீள் குடியேற்றம் என்ற வகையில் பலதரப்பட்ட நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. ஆயினும், இவை யாவும் திட்டமிட்ட முறையில் வடக்கு - கிழக்கு தமிழரின் குடிப்பரம்பலை முறியடிப்பதாகவும், அவர்களது பூர்வீக பூமியை நன்கு திட்டமிட்ட முறையில் சுற்றிவளைப்பதாகவுமே தெரிகின்றன. யுத்தத்துக்குப் பின்னரான அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு அரசோடு வடக்கு - கிழக்கில் இணைந்திருக்கின்ற தமிழ், முஸ்லீம் கட்சிகளும் துணை நிற்கின்றன.


யாழ்ப்பாண குடாநாட்டின் வடபுறமான வலிகாமம் வடக்கில் உள்ள நில புலன்கள் படையினரால் நன்கு திட்டமிட்டு அபகரிக்கப்பட்டுவருகின்றன. வலிகாமம் வடக்கில் வாழ்ந்த மக்களே, வடக்கே யுத்தம் ஆரம்பித்த காலத்தில் முதலாவதாக இடம்பெயர்ந்த மக்களாவர். இவர்கள், உறுதியாக கட்டப்பட்ட தமது வீடுகள் மற்றும் தாம் செழிப்போடு விவசாயம்செய்த விளைநிலங்கள் ஆகியவற்றை கைவிட்டு இடம்பெயர்ந்திருந்தனர். ஆயினும், இப் பிரதேச மக்கள் யுத்தம் முடிவுக்கு வந்தபின்னரும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாத நிலையே நீடிக்கிறது.

வலிகாமம் வடக்கே காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி இராணுவதள விஸ்தரிப்பு என்ற போர்வையில் இப்பகுதி மக்களின் நிலபுலன்கள் படைத்தரப்பினரால் நன்கு திட்டமிட்ட முறையில் சூறையாடப்பட்டுவருகின்றன.

யுத்தத்தின்போது இடம்பெயர்ந்தோர், புலம்பெயர்ந்தோர் என, யாழ் குடாநாட்டையும் வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளையும்விட்டு வெளியேறியோரது எண்ணிக்கை மிகவும் அதிகமானதாகும். இதன்காரணமாக வடக்கு - கிழக்கின் குடிப்பரம்பல் மிகப் பெரும் அளவில் குறைவடைந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாவட்டங்களிலுள்ள தேர்தல் தொகுதிகளில் பாராளுமன்ற இருக்கைகளைக்கூட குறைத்துவிடுமளவுக்கு வாக்காளர் பட்டியலில் வாக்காளர் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

இதன்காரணமாக, இனரீதியிலான ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதற்கு அரசு தரப்புக்கு அபரிமிதமான சந்தர்ப்பங்களை யுத்த தோல்விகள்மூலமும், ஒழுங்கற்ற அரசியல் சிந்தனைகள் மூலமும் வடக்கு - கிழக்கு தமிழர்கள் தாரை வார்த்துக் கொடுத்துள்ளதை இப்போது அவதானிக்க முடிகிறது.

இத்தகைய பின்னணியில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர், சர்வதேசத்தின் அநுசரணையைப் பெரிதும் நாடும் நிலை ஒன்று துளிர்விட்டுள்ளது. கொழும்பிலிருந்து வெளியாகும் 'சுடரொளி' பத்திரிகைக்கு திரு சம்பந்தன் அளித்துள்ள பேட்டியில், இனிவரும் காலத்தில் சர்வதேச அநுசரணையோடு மாத்திரமே பேச்சுக்களில் ஈடுபட தீர்மானித்திருப்பதாக கூறியுள்ளார். இக் கருத்தானது, இலங்கைத் தமிழர்கள், இனிவருங் காலங்களில் அரசியல் அரங்கில் சுயமாக எழுந்திருப்பதைவிட, சர்வதேச சமூகம் என்ற ஊன்றுகோலையே சார்ந்திருக்கவேண்டியதை கோடிட்டு காட்டுவதாக இருக்கிறது. ■



## நரேந்திர மோடி

# இந்தியாவின் அடுத்த பிரதமர்?

**பிரதமர் போட்டியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமல், குஜராத்துடனேயே தனது எல்லையை வரையறுத்துக்கொண்ட நரேந்திர மோடியை காங்கிரஸ்தான் படிப்படியாக பிரதமர் நாற்காலியை நோக்கித் தள்ளிக்கொண்டிருக்கிறது**

**சங்கரன்**

பாரதிய ஜனதா தேசியக் கவுன்சில் கூட்ட நிகழ்வுகளைப் பார்த்தபோது, அக்கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிதான் என்பது பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. தேசிய ஜனநாயக கூட்டணியினருக்கும் (தே. ஜ. கூ) பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க) தொண்டர்களுக்கும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் நம்பிக்கையை இது கொடுத்திருக்கிறது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (ஐ. மு. கூ) அரசுமீதான அடுக்கடுக்கான ஊழல் குற்றச்சாட்டுகள், நிர்வாகத் திறனின்மை, விலைவாசி ஏற்றம், மக்கள் அதிருப்தி அனைத்துமே பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு சாதகமாக இருந்துவருகின்றன. ஆனாலும், காங்கிரசுக்கு இணையான உட்கட்சிக் குழப்பங்களும், உயர் மட்டத் தலைவர்களுக்கு இடையிலான போட்டி, பொறாமைகளும், உள்குத்துகளும் அக்கட்சியை பலவீனப்படுத்தி, ஐ. மு. கூட்டணிக்கு எதிரான மக்களின் மாற்றத்தைத் தனக்கு ஆதரவாக திரட்ட இயலாத நிலை இருந்துவந்தது. இச்சூழ்நிலை யில், பா. ஜ. க. வுக்கும், தேசிய ஜனநாயக கூட்டணியினருக்கும், நடுத்தர மக்களுக்கும் ஓர் இரட்சகராக நரேந்திர மோடி தெரிகிறார்.

குஜராத்தில் 2002ஆம் ஆண்டு மோடி முதலமைச்சராக இருந்தபோது முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த கலவரங்களையடுத்து, நாட்டிலும் சர்வதேச அளவிலும் இரத்தக் கறையுடையவராகப் பார்க்கப்பட்ட மோடி, தற்போது வளர்ச்சி அரசியலின் வெற்றி அடையாளமாகப் பார்க்கப்படுகிறார். தொழில் வளர்ச்சி, சமூக வளர்ச்சிக் குறியீடுகள், கல்வி, வேளாண்மை, ஆற்றல், தன்னிறைவு என அனைத்துப் பரிமாணங்களிலும் குஜராத் வரலாறு காணாத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. மோடி முன்மொழிந்த வளர்ச்சி அரசியல் இன்று அவரை மூன்றாவது முறையும் முதலமைச்சராக ஆக்கியுள்ளது. அத்துடன், இந்திய மாநில அரசியலில் சாதிய செல்வாக்கு, ஆளுமைக் கவர்ச்சி, குடும்ப வாரிசுரிமை அனைத்தையும் தாண்டி, வளர்ச்சித் திட்டங்களை முன்வைத்து மக்களைக் கவரமுடியும் என்ற நிலையை நரேந்திர மோடி உருவாக்கி

யுள்ளார். நரேந்திர மோடியைத் தொடர்ந்து பீஹார், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரா என்று அனைத்து மாநிலங்களிலும் மக்கள் நலனை அடிப்படையாக கொண்ட வளர்ச்சி அரசியல் முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, தன்மீது அதிகரித்துவரும் ஊழல் அவப்பெயரைத் தடுக்கவும், செயலற்ற அரசு என்ற விமர்சனத்தை மூடிமறைக்கவும் மும்பை தீவிரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட அஜ்மல் காஸப்பையும், நாடாளுமன்றத் தாக்குதலில் தொடர்புடையதாக கூறப்படும் அப்சல் குருவையும் அவசரஅவசரமாக தூக்கில் போட்டது. இந்த நடவடிக்கைகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தொடர்பான அதிருப்தியையும், விரக்தியையும் தற்காலிகமாக மறக்கச்செய்திருக்கலாம். ஆனாலும், ஆட்சியின் மீதான அதிருப்தி அத்தனை விரைவில் மறைந்துவிடமாட்டாது.

உலக அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளதாக காரணம் காட்டி, பெற்றோல் மற்றும் டீசல் விலையை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தொடர்ந்து உயர்த்திவருகிறது. ஐ. மு. கூ. அரசு 2004இல் பதவியேற்றபோது பெற்றோல் விலை லீட்டருக்கு ரூ 37.84 ஆகவும், டீசல் விலை லீட்டருக்கு ரூ 26.28 ஆகவும் இருந்தது. கடந்த எட்டு ஆண்டுகளில் இவை 120 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றன. ஒவ்வொருமுறையும் பெற்றோல், டீசல் விலை உயர்வுக்கு கச்சா எண்ணெய் விலையேற்றம்தான் காரணம் என்று அரசு கூறுகிறது. இந்தியாவைவிட மற்றைய நாடுகளில் பெற்றோல் விலை குறைவாகவே உள்ளது.

2ஜி அலைக்கற்றை ஊழல், நிலக்கரி ஊழல், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஊழல் என்று, அடுக்கடுக்கான ஊழல் விவகாரங்களில் இந்த ஆட்சி மீதான வெறுப்பு மக்களிடம் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

'பணம் மரத்தில் முளைக்காது' என்று ஈவிரக்கமின்றி கிண்டல்செய்த பிரதமர் மன்மோகன் சிங்கின் அலட்சியத்தை மக்கள் மறக்கமாட்டார்கள்.

1990க்கு பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கலால் இந்திய பொருளாதாரம் வேகமாக வளர்ந்து, நகர்மயமாதலும் அதிகரித்த நிலையில், நடுத்தரவர்க்க மக்களின் வாக்குகள் இன்று 33 சதவீதமாக உயர்ந்துள்ளது. அவர்களது வாக்குகளை அத்தனை இலகுவில் எந்த கட்சியும் புறக்கணிக்க முடியாது. நகரங்களில் நிலவும் வேலை வாய்ப்பின்மை, விலைவாசி ஏற்றத்தால் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியாத நிலை என்பன அடுத்த பொதுத் தேர்தலின் மிகமுக்கிய பிரச்னைகளாக இருக்கும். அப்படிப்பட்ட சூழலில், விளைவுகள் காங்கிரஸ் தலைமையிலான ஐ. மு. கூ. வுக்கு சாதகமாக இருக்கப்போவதில்லை.

விவசாயிகள் கடன் 52 ஆயிரம் கோடி ரூபாயை ரத்துசெய்த திட்ட அமலாக்கத்திலும் பெரும் ஊழல்கள் நடந்திருக்க வாய்ப்புகள் உள்ளன வென்றும் மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத்துறை தகவல்களை வெளியிட்டுள்ளது. 34 லட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் புறக்கணிக் கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியா கியுள்ளன. ஐ. மு. கூ. ஆட்சியில்தான் வண்ண வண்ண மயமாக எத்தனை யெத்தனை ஊழல்கள்?

மத்தியில் இரண்டாவது முறையாக ஆட்சி செய்துவரும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் கீழ், நிர்வாகம் என்பது நடக்கிறதா என்ற சந்தேகம் மக்களுக்கு எழுந்துள்ள நிலையில், நரேந்திர மோடிபோன்ற வலுவான தலைவரை மக்கள் எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, அடுக்கடுக்காக அலைபோல எழுந்துவரும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள், விலைவாசியைக் கட்டுப்படுத்தவே இயலாத கையாலாகாத்தனம் ஆகியவை எதிர்க்கட்சிக்கு சாதகமாக ஆகியுள்ளது. இந்தியாவில் வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தினர், மன்மோகன் சிங் போன்ற வலுவற்ற பிரதமரைப் பார்த்து விரக்தி அடைந்துள்ளனர். அவர்கள், நரேந்திர மோடிபோன்ற உறுதியான, தூய்மையான ஒருவர் பிரதமர் பதவிக்கு வரவேண்டும் என்று விரும்புவதும் கண்கூடாக தெரிகிறது.

இதேபோன்ற சூழல்தான் 1998இல் அடல் பிகாரி வாஜ்பாய் இந்தியாவின் முதல் பா. ஜ. க. பிரதமராக பதவியில் அமர்வதற்கும் வாய்ப்பாக அமைந்தது.

நரேந்திர மோடிக்குச் சூழ்நிலை சாதகமாக இருந்தாலும் அவரைப் பிரதமராக்குவதில் பா. ஜ. க. வின் உயர் மட்டத் தலைவர்கள் இன்னும் தயக்கத்துடனேயே உள்ளனர். வாஜ்பாய் காலத்திலிருந்து இலவு காத்திருக்கும் எல். கே. அத்வானி, பிரதமர் நாற்காலியை மோடி தட்டிப் பறிப்பார் என்பதை இன்னும் ஜீரணிக்க முடியாதவராகவே உள்ளார். ஆனாலும், ஐ. மு. கூ. மீதான மக்களின் அதிருப்தி இதே நிலையில் தொடருமானால் நரேந்திர மோடியை அதிகாரபூர்வமாக பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதைத் தவிர பா. ஜ. க. வுக்கு வேறுவழி இல்லை. ஏனெனில், மக்களின் அதிருப்தியைப் பயன்படுத்தி அரசுக்கு எதிரான வாக்குகளைச் சேகரிக்கக்கூடிய வலுவான ஆளுமை படைத்த ஒருவர் தேவைப்படுகிறார். இன்றைய நிலையில் இந்த அம்சத்தில் பா. ஜ. க. வில் மோடிக்கு இணையாக யாரையும் சொல்லமுடியவில்லை.


அத்வானி மூத்த தலைவராகவும் பலராலும் மதிக்கப்படும் தலைவராகவும் இருந்தாலும், அவரது வயது அவருக்கு எதிரியாக இருக்கிறது. தவிர, கட்சியின்மீது அவருக்கு முன்பு இருந்த பிடி இன்று இருப்பதாக தெரியவில்லை. அடுத்த மட்டத் தலைவர்களில் யாரையும் மோடியின் பிரபல்யத்துடனும் வலிமையுடனும் ஒப்பிடவே முடியாது. தவிர, மோடிதான் அடுத்த பிரதமர் என்று இப்போதே பல மட்டங்களிலும் பேச்சு எழுந்துவிட்டது.

வெளிப்படையாக பிரதமர் போட்டியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமல், குஜராத்துடனேயே தனது எல்லையை வரையறுத்துக்கொண்ட நரேந்திர மோடியைக் காங்கிரஸ்தான் படிப்படியாக பிரதமர் நாற்காலியை நோக்கித் தள்ளிக்கொண்டிருக்கிறது என்று தோன்றுகிறது.

பா. ஜ. க. வில் இருக்கும் உள்குழப்பங்கள் மற்றும் தலைவர்களுக்கு இடையேயுள்ள போட்டிகளைக் கைவிட்டு, தேசிய ஜனநாயக கூட்டணியை ஆட்சிக்குக் கொண்டுவர நரேந்திர மோடி முன்வந்துவிட்டார் என்றே தோன்றுகிறது. தேசிய செயற்குழுவில் அவர் பேசியதிலிருந்தே அதை உணர முடிந்தது.

“நம்முடைய அனைத்து சக்தியையும் கட்சியின் வளர்ச்சிக்காக செலவழிக்க உறுதியேற்கவேண்டும். பா. ஜ. க. வும் அதன் சின்னமான தாமரையும் தான் இந்த தேசத்தைக் காப்பாற்றும் வல்லமை உடையவை. தனிப்பட்ட நபர்களோ, தனிப்பட்ட தலைவர்களோ இங்கே முக்கியம் அல்ல; குறிக்கோள்தான் அனைத்தையும்விடப் பெரிது. மக்களை ஏமாற்றுவதற்கு நமக்கு எந்த உரிமையும் கிடையாது'' என்று கூறியிருக்கிறார் மோடி.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும் மக்களை ஏமாற்றாமல் மோடியை பிரதமராக்கி விட்டுத்தான் பதவியிறங்கும் என்று தோன்றுகிறது. ■


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909





வெனிசூலா அதிபர் ஹுகோ சாவேஸ்

# இலங்கைக்கு ஆதரவாக ஏன் செயல்பட்டார்?



## சீனா தலைமையிலான, மாற்று உலக ஒழுங்குக்கான அரசியலின் ஒரு வெளிப்பாடுதான் சாவேஸின் ராஜபக்ஷ ஆதரவு நிலைப்பாடு

**செ. ச. செந்தில்நாதன்**

மறைந்த வெனிசூலா அதிப
ஹ்யூகோ சாவேஸுக்கு அஞ்
சலி செலுத்தப்போய் நண்ப
ஒருவரிடம் மாட்டிக்கொண்டேன்
ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்த, இனப்
டுகொலையின்போது ஈழ மக்களுக்கு
எதிராக நின்ற ஓர் அதிபரின் மரண
துக்கு ஏன் இரங்கல் தெரிவிக்கவேண்
டும் என்று அந்த நண்பர் கேட்டா
காலை 'பேஸ்புக்'கில் பார்த்தால், ப
ரும் இவ்வாறான கேள்விகளை எழு

பியிருந்தார்கள்.

தமிழீழத்துக்கு எதிராக சாவேஸ் ஏன் நின்றார்?

நாம் வாழும் இந்தப் பொன்னான காலத்தில், உலகில் நிலவும் அவலமான ஓர் உலக அரசியல் போக்கின் பிரதிநிதியாக இருந்ததால்தான் சாவேஸ் ராஜபக்ஷவை உச்சிமுகர்ந்தார். சீனா தலைமையிலான, மாற்று உலக ஒழுங்குக்கான அரசியலின் ஒரு வெளிப்பாடுதான் சாவேஸின் ராஜபக்ஷ ஆதரவு நிலைப்பாடு.

சாவேஸ்போன்ற ஒரு 'கம்யூனிஸ்ட்', கியூபா போன்ற ஒரு 'கம்யூனிஸ்ட் நாடு' எப்படி இலங்கைக்கு ஆதரவாக நிலைப்பாடு எடுத்திருக்க முடியும் என்று பலரும் அதிர்ச்சியடைந்து பேசுகிறார்கள். சாவேஸ் ஒரு கம்யூனிஸ்டும் அல்ல; கியூபா ஒரு கம்யூனிஸ்ட் நாடும் அல்ல என்கிற உண்மை ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால், கியூபாவும் வெனிசூலாவும் இலங்கையை ஆதரிக்கவேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி சந்தேகமேயில்லாமல் எழுகிறது.

'ஒரிஜினல்' ஏகாதிபத்தியவாதிகளான அமெரிக்கர்களும் தெற்காசியாவின் பிராந்திய வல்லரசான இந்தியாவும் ராஜபக்ஷ பக்கம் நிற்கிறதென்றால் அதில் ஆச்சரியமில்லை. இந்தியாவுக்கு எதிராக இலங்கையை பயன்படுத்திக்கொள்வதற்காக சீனாவும் பாகிஸ்தானும் ராஜபக்ஷ ஆதரவு நிலையில் இருப்பதையும் புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால், எங்கோ இருக்கும் ஈரானும் கியூபாவும் ரஷ்யாவும் வெனிசூலாவும் ஏன் ராஜபக்ஷவை ஆதரித்தன? ஒரு மிகப்பெரிய இனப்படுகொலையைச்செய்த போர்க் குற்றவாளியாக கருதப்படும் அவருக்கு ஏன் பாராட்டு தெரிவித்தன?

கடந்த இருபது ஆண்டுகளாக உலக அரசியலில் அமெரிக்காவின் ஒற்றை துருவ உலகமயமாதலுக்கு எதிராக, பல்துருவ உலக அரசியலை கட்டமைக்க முயன்ற நாடுகளில் சீனா, ரஷ்யா, வெனிசூலா, துருக்கி, பிரேசில், இந்தியா போன்றவை முக்கியமானவை. இதில், சீனாவின் இடம் மிகவும் விசேஷம். ஏனெனில், அமெரிக்காவுக்கு ஈடுகொடுக்கக்கூடிய புதிய வல்லரசு என்கிற பலம் சீனாவுக்கு மட்டுமே இன்று இருக்கிறது. சீனாவும், இது தன்னுடைய நூற்றாண்டு என்கிற நம்பிக்கையில், உலக அரசியலில் தீவிரமாக களமிறங்கியது. உலகில் தனக்கென ஓர் அணியை உருவாக்குவதில் சீனா முயற்சிசெய்தபோது, அந்த அணிக்கான ஓர் அரசியல் கோட்பாட்டையும் முன்வைக்கவேண்டியிருந்தது.

சுதந்திரம், மனித உரிமைகள், ஜனநாயகம் என்கிற வார்த்தைகள் மூலமும், நாகரீக உலகம் என்ற அடையாளத்தின் மூலமும்தான் அமெரிக்கா தன்னுடைய உலக அரசியலை உருவாக்கி வைத்திருந்தது. (சோஷலிசம், மூன்றாம் உலக ஒற்றுமை, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கிற முழக்கங்களின் அடிப்படையில் முன்னாள் சோவியத் யூனியன் தனது உலக அரசியலை உருவாக்கி வைத்திருந்ததை அறிவோம்.) அமெரிக்காவுக்கு எதிராக சீனாவுக்கும் ஓர் அரசியல் கோட்பாடு தேவைப்பட்டது. அமெரிக்க எதிர்ப்பு என்பது மிகவும் சுலபமாக விற்கப்படக்கூடிய சரக்கு என்பதால் சீனா அதை முதலில் எடுத்துக்கொண்டது. ஆனால், அதுமட்டும் போதவில்லை. அப்போது, 'அரசு மைய வாதம்' என்கிற ஒரு புதிய கோட்பாட்டை தனது கோட்பாடாக சீனா உருவாக்கியிருந்தது.

அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளை எடுப்பதில் அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் சந்தைதான் மையமாகவிருக்கிறது என்றால், சீனாவில் அரசுதான் மையமாக இருக்கிறது. அமெரிக்காவின் நிலையை 'வாஷிங்டன் கருத்தொருமிப்பு' என்றும், சீனாவின் பாணியை 'பீஜிங் கருத்தொருமிப்பு' என்றும் ராஜதந்திர வட்டாரத்தில் பேசப்படும். இதைச் சுருக்கமாக, 'அரசு மையவாதம்' என்று கூறலாம்.

அரசு மையவாதம் எப்போதும் ஆட்சியாளர்களுக்கு பிடிக்கும். ஏனெனில், ஜனநாயகம், சுதந்திரம் போன்ற 'பிரச்னைகள்' அதில் இல்லை. சிங்கப்பூரிலிருந்து டுபாய்வரை அரசு மையவாதம்தான் மிகவும் கவர்ச்சிகரமான ஒன்றாக நெடுங்காலமாக இருந்துவருகிறது. எனவே, எந்தெந்த நாடுகளில் ஆட்சியாளர்கள் தங்கள் பிடிகளை விடாமல் எதேச்சாதிகார ஆட்சியை செலுத்த விரும்புகிறார்களோ அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு தருவதாக சீனா கைநீட்டியது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்தளாவிய ஆதிக்கத்துக்கு எந்த கேடும் வராமல், அதேசமயம் முதலாளித்துவத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வல்லரசாக உயரும் உத்தியில் சீனா ஏற்கனவே வெற்றிபெற்றிருந்தது. அதன்படி, ஒரேசமயத்தில் அதிகார மையங்களாகவும் பில்லியனர்களாகவும் இருக்கும் கலையில்






**அமெரிக்க எதிர்ப்பு என்கிற பெயரில் ஆசியாவில் சீன - ரஷ்ய - ஈரான் கூட்டணி, அமெரிக்க - இந்திய - ஜப்பான் கூட்டணிக்கு எதிராக நடத்தும் அரசியலின் ஒரு பகுதிதான் இது. 2009இல் முள்ளிவாய்க்காலில் அரங்கேறியது, இருபெரும் உலக அரசியல் சக்திகளுக்கு இடையிலான பலப்பரீட்சையே**

சீன கம்யூனிஸ்ட் தலைவர்கள் எப்படி புதிய பிரபுக்களாக ஆனார்கள் என்பதெல்லாம் தனிக்கதை. இன்றைய சீன தலைவர்கள் பலர், வாரிசு அரசியல்வாதிகள் என்பதையும் நாம் அறிவோம். சீனாவில் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் இடமே இல்லை. சாதாரண பாராளுமன்ற ஜனநாயகத்தில் மக்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைக்கூட ஏற்காமல், ஆசிய விழுமியம் என்ற பெயரில் புதிய பிரபுத்துவ ஆட்சியைத்தான் கம்யூனிஸ்ட் ஆட்சி என்ற பெயரில் சீனா நடைமுறைப்படுத்திக் கொண்டுவருகிறது. இந்த சர்வாதிகார அரசியல்தான் உலக அரங்கில் இப்போது சீனாவின் 'ஹொட் எக்ஸ்போர்ட் அயிட்டம்'

ஆசியாவிலும் உலகின் பல பகுதிகளிலும் உள்ள அரசு மையவாதிகளுக்கும் சர்வாதிகாரிகளுக்கும் ஜனநாயகம், மனித உரிமை என்றாலே அவை அமெரிக்க சரக்குகள் எனக்கூறி நிராகரிக்கும் ஜனநாயக விரோதிகளுக்கும், முஸ்லீம் நாடுகளில் உள்ள காலிபேட் அரசியல் ஆதரவாளர்களுக்கும் சீனா உருவாக்கிய பீஜிங் கருத்தொருமிப்பு மிகவும் பிடித்திருந்தது. இத்தகைய சர்வாதிகாரிகளை முட்டுக்கொடுத்து நிறுத்துவதற்கு சீனாவும் தயாராகவிருக்கிறது. அத்துடன், சீனாவே ஒரு பெரும்பான்மை இனவாத நாடுதான் என்பதால் ரஷ்யா, இலங்கை, பர்மா, ஈரான் போன்ற பேரினவாத சமூகங்களில் சீனாவுக்கு நல்ல வரவேற்புமுண்டு.

வல்லரசுப்போட்டி களத்தில், 'உலக சர்வாதிகாரிகளே ஒன்று சேருங்கள்' என்ற முழக்கத்தின் அடிப்படையில் தான், சீனா களமிறங்கி பத்தாண்டுக

ளுக்கும் மேலாகிவிட்டது. எனவே, ஆசியாவில் - குறிப்பாக, மத்திய ஆசியாவில் அமெரிக்காவின் ஆதிக்கம் வந்துவிடக்கூடாது எனக் கருதிய விளடிமிர் புட்டினின் ரஷ்யாவும், முகமது அகமதிநெஜாடின் ஈரானும் சீனாவுடன் கைகோர்த்தன. அமெரிக்க எதிர்ப்பு என்கிற அடிப்படையில் மட்டும் இவர்கள் ஒன்றுசேரவில்லை. உள்நாட்டில் எந்தவிதமான ஜனநாயக அரசியலும் உருவாகிவிடக்கூடாது என்பதிலும், தத்தம் எதேச்சாதிகார அரசுகள் அல்லது அரசு முறைமைகள் அப்படியே தொடரவேண்டும் என்பதிலும் இவர்கள் மிகவும் குறிக்கோளாக இருக்கிறார்கள். ஜனநாயகம் என்பதே அமெரிக்க சதி எனக் கருதும் இந்த மூன்று நாட்டுத் தலைமைகளும், தங்கள் நாடுகளில் மிகமோசமான மனித உரிமை மீறல்களைச் செய்துவருபவை.

அமெரிக்காவும் மேற்குலகமும் தங்கள் நலன்களுக்காக 'ஜனநாயக முகமூடி' போட்டுக்கொண்டு களத்தில் இறங்கும்போது, சீனாவும் ரஷ்யாவும் ஈரானும் 'ஏகாதிபத்திய எதிர்ப்பு முகமூடி' போட்டுக்கொண்டே இறங்குகின்றன; இதுதான் நிஜம். அதனால்தான், இவ்வளவு போட்டிகளுக்கும் இடையில் சீனா அமெரிக்காவின் 'நம்பர் 1' வர்த்தக கூட்டாளியாக தொடர்ந்து நீடிக்கிறது. ரஷ்யாவில் அமெரிக்க முதலீடு தடையின்றி தொடர்கிறது. (ஈரான் மட்டுமே விதிவிலக்கு. அதற்குக் காரணம், மேற்காசிய அரசியலும் இஸ்ரேலும்.)

இவர்களுக்கு மத்திய ஆசியாவில் முதலில் வெற்றி கிடைத்தது. சீனாவும் ரஷ்யாவும் ஈரானும் சேர்ந்து பலப்படுத்திவரும் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பு என்கிற கூட்டமைப்பே அடிப்படையில் யூரேஷியா கண்டத்தின் மிகப்பெரிய சர்வாதிகார நாடுகளின் கூட்டமைப்பாகும். மத்திய ஆசியாவின் முன்னாள் சோவியத் குடியரசுகள் (கஜகஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான் போன்றவை) பலவும் இந்த அணிக்குள் சேரும் நிர்ப்பந்தமும் உருவானது. பாகிஸ்தானும் அன்போடு கைநீட்டியது. தெற்காசியாவில் அமெரிக்கா ஆதரவு நிலையெடுத்த இந்தியா, இந்த அணியில் பெரிதும் பங்கேற்கவில்லை; விருப்பு காட்டவுமில்லை.

வல்லரசுப் போட்டியில் அமெரிக்காவுக்கு எதிராக இருப்பதையே ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலாக பசப்பி (ஆனால், அமெரிக்காவுடனான பொருளாதார உறவுகளில் மட்டும் எந்த மாற்றமுமின்றி) சீனா செய்துவரும் போலி ஏகாதிபத்திய எதிர்ப்பு வெற்றிபெற்றிருக்கிறது. அமெரிக்க எதிர்ப்பு என்கிற கவர்ச்சிகரமான அரசியல் முழக்கத்துடனும், ஏராளமான பொருளாதார பலத்துடனும் புறப்பட்ட சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் ஆசியாவின் பிற பகுதிகளில் பல தோழர்கள் கிடைத்தார்கள். சீனாவுக்கு வட கொரியாவும் மியன்மாரும் உற்ற துணைவர்களாக இருப்பதற்கு அதுவே காரணம். அடுத்ததாக, ராஜபக்ஷவின் இலங்கை. இந்தியாவைக் குறிவைப்பதற்காகத்தான் சீனா ராஜபக்ஷவுக்கு உதவுகிறது என்றே எல்லோரும் நினைக்கிறார்கள். அது உண்மைதான் என்றாலும், அது முழுமையான காரணம் அல்ல.

தெற்காசியாவில் அமெரிக்காவின் பலத்தைச் சிதறடிக்கும் முயற்சியில் சீன - ரஷ்ய - ஈரான் கூட்டணியின் நலன்களை பேணுதல் என்கிற முயற்சிக்கு வசதியாக ராஜபக்ஷ இவர்களுக்குக் கிடைத்தார். முத்துச்சரக் கொள்கை எனப்படும் சீன அரசின் இந்திய பெருங்கடல் பிரதேச பாதுகாப்பு கொள்கைக்கு நடுநாயகமாக ராஜபக்ஷ அமைந்தார். எனவே, அதற்குப் பிரதிபலனாக ராஜபக்ஷவுக்கு இந்த சீன - ரஷ்ய - ஈரான் கூட்டணி உதவிசெய்ய தயாராக இருந்தது. புலிகளையும், ஒரு லட்சம் தமிழர்களையும் கொல்ல வேண்டும் என ராஜபக்ஷ விரும்பிய போது, உடனடியாக ஆயுதங்களையும் ஆசீர்வாதங்களையும் அரசியல் பாதுகாப்பையும் சீனாவும் அதன் கூட்டணி நாடுகளும் அளித்தன. யுத்தத்துக்குப் பிறகு எல்லா அரசியல் அரங்குகளிலும் இலங்கைக்கு ஆதரவாக அவை துணைநின்றன. ஷாங்காய் கூட்டுறவு அமைப்பில் இலங்கைக்கு அதன் சக்திக்கும் பலத்துக்கும் விஞ்சிய அளவில் 'டயலாக் பார்ட்னர்' என்கிற அந்தஸ்தும் கிடைத்தது.

சீனா, ராஜபக்ஷவுக்கு ஆதரவு அளிப்பதில் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளமுடியும். ஆனால், ரஷ்யாவும் ஈரானும் ஏன் ராஜபக்ஷவுக்கு துணையாக நின்றன என்ற கேள்விக்கான பதில் இங்கேதான் இருக்கிறது. அமெரிக்க எதிர்ப்பு என்கிற பெயரில் ஆசியாவில் சீன - ரஷ்ய - ஈரான் கூட்டணி அமெரிக்க - இந்திய - ஜப்பான் கூட்டணிக்கு எதிராக நடத்தும் அரசியலின் ஒரு பகுதிதான் இது. 2009இல் முள்ளிவாய்க்காலில் அரங்கேறியது, இருபெரும் உலக அரசியல் சக்திகளுக்கிடையிலான பலப்பரீட்சையே.

இந்த அரசியல் பின்புலத்தில்தான் லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க எதிர்ப்பு என்கிற நியாயமான அரசியல் புரிந்துவந்த கியூபாவும் வெனிசுலாவும் 'தங்கள் நலன் கருதி' ராஜபக்ஷவுக்கு துணைபோயின. ஏற்கனவே சீனா, ரஷ்யா, ஈரான் ஆகியவை உருவாக்கி வந்த போலியான மாற்று உலக ஒழுங்கில் இந்த நாடுகளும் இடம்பெற்றிருந்தன. அந்த சர்வாதிகார கூட்டத்தில் இலங்கை நுழைந்தபோது, அதன் தலைவரை அவர்கள் கைகூப்பி வரவேற்றார்கள்.

தன் நாட்டின் விடுதலைக்காக போராடுவதற்கு ஒருவர் சோஷலிஸ்டாகவோ கம்யூனிஸ்டாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தேசியவாதிகளாகவே இருந்தால் போதுமானது என்பதுதான் லெனினிய பாலபாடம். ஆனால், சாவேஸும் காஸ்ட்ரோவும், கம்யூனிசத்தை எப்போதோ குழிதோண்டிப் புதைத்துவிட்ட சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் வால்பிடித்தமை, பச்சையான சுயநல அரசியல். இதில் பாட்டாளி வர்க்க சர்வதேசியமோ வேறுஎதுவுமோ இல்லை.


இந்த அரசியல்தான் லத்தீன் அமெரிக்காவில் சாவேஸின் கண்களை மறைத்தது. அவரும் சீன பாணி எதேச்சாதிகார போக்கினை உடையவர். அவர் 'விஷயம் தெரியாமல்' ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்துவிடவில்லை. அதைத் தெரிந்தேதான் செய்தார்.

ஆனாலும், அவருக்கு நாம் செவ்வஞ்சலி செலுத்துகிறோம் என்றால் இதை ஒரு பிறழ்ச்சி எனக் கருதி, விட்டுவிடவேண்டும் என்பதனால்தான். என்ன இருப்பினும், அமெரிக்க கண்டத்திலேயே அமெரிக்காவுக்கு எதிரான அரசியலை வெற்றிகரமாக நடாத்தியவர் என்பதாலும், வெனிசுலாவின் மக்களுக்கு பெரும் நன்மைகளைச் செய்தவர் என்பதாலும், லத்தீன் அமெரிக்காவில் 21ஆம் நூற்றாண்டு சோஷலிசம் என்கிற கருத்தாக்கத்தை பரப்பியவர் என்பதாலும் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம். இடதுசாரி அரசியலுக்கு எதிர்காலம் இல்லை என்று அமெரிக்க லிபரல் தத்துவ ஞானிகள் கூறிய காலத்தில், ஒரு நாட்டை அல்ல, ஒரு கண்டத்தை இடது பக்கம் நகர்த்தியவர் என்பதால் சாவேஸின் தாக்கம் காஸ்ட்ரோவின் தாக்கத்தையும்விட, சே குவேராவின் தாக்கத்தையும்விட மிகவும் வலுவான ஒன்றாகவே எதிர்காலத்தில் இருக்கும். ■





6, 7, 8 Nageswaran Road, Opp. Panagal Park, T. Nagar, Chennai 600 017.
P: +91 44 24343344 www.nallijewellers.com



**ஆர். நடராஜன்**

அமெரிக்க தூதரக முன்னாள் அரசியல் ஆலோசகர்,
சென்னை

# ஏலத்தில் தேர்தலை நடத்தினால் இந்தியா செழிக்கும்

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறவேண்டும் என்பது தேர்தல் ஆணைய அட்டவணை. இருந்தாலும், தேர்தல்கள் தம் வசதிக்கு என்று நினைக்கும் அரசியல்வாதிகள் அதைச் சற்று முன்னதாகவே நடத்தலாம். நாடே அவர்களுடையது; அவர்களை யார், என்ன கேட்கமுடியும்? இருந்தாலும், சிலசமயங்களில் பாவம் இந்த அரசியல்வாதிகள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

கட்சியை நடத்த, தொடர்ந்து தலைவராக இருக்க; அவர்கள் உழைக்க வேண்டும், சம்பாதிக்கவேண்டும். முரண்டுபிடிக்கும் இரண்டாம் நிலைத் தலைவர்களை சமாதானப்படுத்த வேண்டும். தூற்றிக்கொண்டு அவர்கள் வெளியே போனால் தேர்தலில் அவர்களுடன் கூட்டணி காணவேண்டும், விவாகரத்து செய்த மனைவியுடன் வாழ்வதுபோல. இத்துடன், இன்னும் பல தலைமுறைகளுக்குத் தாக்குப்பிடிப்பதுபோல் குடும்பத்துக்கு சொத்து சேர்க்கவேண்டும். பினாமி வியாபாரம், தொழில் செய்யவேண்டும். அதிகாரிகளை அனுசரித்தோ, மிரட்டியோ ஆட்சியை நடத்தவேண்டும். வாரிசுகளை சமாதானப்படுத்தவேண்டும். கூட்டணி உடைந்தால் ஊழல் சமாச்சாரங்களை வெளியேவராதபடி பார்த்துக்கொண்டு, வழக்கு விசாரணையை சந்திக்கவேண்டும். பிரிந்தவரிடமே சரணடைந்து, சேர்த்த சொத்தைக் காப்பாற்றவேண்டும். வழக்குகளிலிருந்து விடுபட்டாகவேண்டும். பொழுதுபோகாத கிழவன்களும் கிழவிகளும் ஊழல், கறுப்புப்பணம் என்று பொது மேடைகளில் பேசினால் தம் பத்திரிகைகளில், சொந்தத் தொலைக்காட்சியில் அதுபற்றி யார் மூலமாகவாவது விளக்கம் தரவேண்டும்.

இவ்வளவுதூரம் சிரமப்படாமல் நம்மவர்கள் ஆட்சி நடத்த சில யோசனைகளை சொல்ல விரும்புகிறேன். ஒரு காலத்தில், தலைமறைவுக் கொள்ளையர்களுக்கும் பிடிபடாத கொலையாளிகளுக்குமே தலைக்கு இவ்வளவு

**'வேலை' என்ற ஒன்று இருந்தால், அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அது ஏல முறையின் மூலம்தான் பெறப்படவேண்டும் என்று சட்டத்தை மாற்றவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது**

**கட்சித் தலைமைக்கு பணம் கொடுத்து 'சீட்' கேட்கும் அளவுக்கு பணத்தில் முன்னேறிவிட்டவர்களுக்கு ஏலமுறை சரியானதே**

**தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் ஏழைகள் இல்லை. ஜெயித்த பிறகு, அவரது சொந்த பந்தங்கள் யாரும் பல தலைமுறைகளுக்கு ஏழைகளாக இருக்கவும்மாட்டார்கள்**

என்று விலைவைக்கப்பட்டது. இப்போது, அப்படி கிரிக்கட் வீரர்களுக்கு விலைவைக்கப்படுகிறது. இன்னார் இன்ன தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டார் என்று பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் செய்தி வெளியாகிறது. இது ஒரு கேவலமான நிலைமை என்று யாரும் நினைப்பதில்லை. இவருக்கு அளிக்கப்பட்ட தொகை கூடுதல், இவருக்கு குறைவு என்ற விமர்சனங்கள் பத்திரிகைகளில் வெளிவரலாம். கிரிக்கெட்டின் முதல் எதிரி நான். அதுபற்றி அலட்டிக்கொள்வதில்லை. இருந்தாலும், எதிரிகளிடமிருந்தும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்தும் கறக்க வேண்டியனவற்றைக் கறக்கவேண்டும் என்ற நியதிப்படி, கிரிக்கெட் உலகத்தின் ஏலத்தின் மூலம் கறந்த பாடங்களை தருகிறேன் அரசியல்வாதிகளுக்காக, அதிகாரிகளுக்காக, நமக்காக, நாட்டுக்காக.

சட்டசபைகளுக்குச் சராசரியாக 200 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இத்தேர்தலை நடத்த அதிகாரிகள் பட்டாளம் அதிக நேரம் செலவிட, அரசாங்கம் பணத்தைச் செலவிடுகிறது. அரசியல்வாதிகள் கணக்குக் காட்டாமல், அதிகாரிகளின் கண்களில் படாமல் பணம் செலவிடவேண்டும். தேர்தலில் அப்படி யாராவது பிடிபட்டால் தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்படுவதில்லை, வேட்பாளர் தகுதி நீக்கம் செய்யப்படுவதில்லை. வெற்றி தோல்வி சம்பந்தமான வழக்குகளின் தீர்ப்புகள் சட்டசபை முடியும் காலம்வரை வெளிவருவதில்லை.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் யாரை மந்திரிகளாக்குவது, யாரை வாரியத் தலைவர்களாக்குவது, அவர்கள் எப்போது எப்படி நீக்குவது என்பதெல்லாம் பெரிய பிரச்னைகளாகிவிட்டன. அதனால், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஏலமுறையைப் பின்பற்றலாம். ஒவ்வொரு கட்சியும் வேட்பாளராக விரும்புபவர்களை அழைத்து, அந்தத் தொகுதியின் பரப்பளவு, தொழிற்சாலைகள், இயற்கை வசதிகள் இவற்றைக் கணக்கிட்டு, குறைந்தபட்சத் தொகையை நிர்ணயித்து, ஏலம் கேட்கவைக்கலாம். அதிக தொகை கேட்பவர்களை கட்சி வேட்பாளர்களாக அறிவிக்கும்.

ஒவ்வொரு கட்சியும் தொகுதிக்கு ஒருவர் என்று ஏலத்தில் தேர்ந்தெடுத்த பிறகு, தேர்தல் ஆணையம் அவர்களை அழைத்து அவர்களில் யார் அதிக தொகை தருவார்கள் என்று ஏலம் நடத்தி, அவர் தேர்தலில் வென்றதாக அறிவிக்கலாம். இப்படித் தேர்தல் ஆணையம் நடத்திய ஏலத்தில் வென்றவர்களை கட்சித் தலைமை அழைத்து மந்திரியாக விரும்புபவர்கள் யார் என்று கேட்டு அதற்கு ஏலம் நடத்தும். பணம்தானே குறி! மந்திரி சொந்தக் கட்சிக்காரராக இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. இலாகாக்களின் செழிப்பு, உத்தேச வரவு வழிமுறைகளை வைத்து குறைந்த பட்சத்தொகை நிர்ணயம் செய்யவேண்டும். யார் அதிக தொகையில் இலாகாவை ஏலம் எடுக்கிறார்களோ அவருக்கு அந்த இலாகா ஒதுக்கப்படவேண்டும்.

துறைகளின் வருமானத்துக்கேற்ற ஏலத்தொகை நிர்ணயிக்கப்படும். துறைக்கேற்ற படிப்பு, அநுபவம் இருக்கவேண்டிய அவசியமில்லை. படிப்பு ஓர் இடைஞ்சல்; அநுபவம் ஒரு குழப்பம். ஆக, இப்படியே மந்திரி சபையை அமைத்துவிடலாம். கட்சித் தலைவரோ, தலைவியோ அந்த முதல்வர் அல்லது பிரதமராகலாம். அதற்கு ஏலமில்லை.

பொதுவாக மந்திரிகளின் பி.ஏ.க்கள்மீது அதிக குற்றச்சாட்டுகள் எழுவதால், அந்தப் பதவிகளும் ஏலமுறை மூலமே நிரப்பப்படும். இதில் யாரும் வருத்தப்படுவதற்கில்லை. பொறாமைப் படுவதற்கில்லை. ஒத்துவராததனால் அதிகாரிகள் மாற்றப்படுகிறார்கள். முதல்வர், பிரதமர், மந்திரிகளுக்கு உதவியாளர்கள், மற்றும் செயலாளராக வரவிரும்புபவர்கள் தங்கள் பதவிக்கான ஏலத்தில் பங்கு பெறலாம். எந்த இலாகாவில் என்னென்ன செய்தால் எவ்வளவு சம்பாதிக்கமுடியும் என்பது அதிகார வர்க்கத்துக்கு தெரியுமாதலால், அவர்களிடம் சரியான தொகை பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டு ஏலம் கேட்டு லாபம் காணலாம்.

'சர்வீஸ் கமிஷன்' என்ற அமைப்பை ஒழித்துவிட்டு, ஏல கமிஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தி அரசு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கலாம். வினாத்தாள் வெளியானது, சரியான மார்க் போடப்படவில்லை என்ற விதமான குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லை. அதிக பணம், உயர்ந்த வேலை என்றபடி நீதி, நியாயம் காக்கப்படும். நீதி மற்றும் காவல் துறைகளுக்கும் கல்வித் துறைக்கும் இப்படி நியமனம் நடைபெறுவது நல்லது. கையில் பெட்டியை வைத்துக்கொண்டு, யாருக்கு எவ்வளவு கொடுத்து துணைவேந்தர்

**... எல்லாத் தேர்தல்களும் அரசியல்வாதிகளுக்காகவே. எனவே, மக்களாகிய நாம் சேர்ந்து சொல்வோம் வாருங்கள்,**

**"இந்தியா ஒரு தரம்,**
**இந்தியா இரண்டு தரம்,**
**இந்தியா மூன்..."**

பதவியைப் பெறுவது என்று அலையும் கல்வியாளர்கள் இனி நேரடி ஏலமுறையில் பங்குபெறலாம். இப்படி 'வேலை' என்ற ஒன்று இருந்தால், அரசாங்கத்தைப்பொறுத்தவரை, அது ஏலமுறையின் மூலம்தான் பெறப்பட வேண்டும் என்று சட்டத்தை மாற்ற வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. இதில் கிண்டல், கேலி இல்லை, எல்லாமே நிஜம். நண்பர்களே.

சரி, ஏலத்தில் எம். எல். ஏக்கள், எம். பிக்கள், அதிகாரிகள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். அந்தப் பணத்தை என்ன செய்வது? கட்சித் தலைமை வேட்பாளர்கள் தம்மிடம் கொடுத்த தொகையில் பத்து சதவிகிதத்தை கமிஷனாக எடுத்துக்கொண்டு மீதியை அரசு கஜானாவில் கட்டிவிடவேண்டும். அது அரசுக்கு வருமானம். சரி, பணம்கொடுத்துப் பதவி வாங்கியவர்கள் அதை மீட்பது, மேற்கொண்டு லாபம் பெறுவது எப்படி?

'வி. ஏ. ஓ. (கிராம நிர்வாக சேவை) தேர்வில் வெற்றிபெறுவது எப்படி?', 'நுழைவுத் தேர்வில் வெற்றிபெறுவது எப்படி?' என்ற தலைப்புகளில் புத்தகங்களை வெளியிடும் பதிப்பகங்கள் ஓய்வு பெற்ற அதிகாரிகள், ஓய்வுபெற்ற அரசியல்வாதிகள் - தவறு, தவறு, அரசியல்வாதிகள் ஓய்வுபெறுவதில்லை - இவர்களைக் கொண்டு எந்தெந்த துறைகளில் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்பது பற்றி புத்தகங்கள் எழுதச் செய்து வெளியிடலாம். ஊழல் குற்றச்சாடு வழக்குகளில் தண்டனை பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து எழுதச் செய்யலாம். அனுபவம் பேசினால் ஆதாயம் அதிகம்.

ஏலத்தில் பதவிகளைப் பெறுபவர்கள் போட்ட பணத்தை எடுக்கவேண்டும்; லாபமும் பெறவேண்டும். அது எப்படி? பொதுமக்கள், வியாபாரிகள், தொழிலதிபர்கள் எதற்கு இருக்கிறார்கள்? அவர்களுக்கும் காரியம் ஆக வேண்டும். அவர்களும் கொடுக்கத் தயார். அவர்களது ஒரே புகார், காசை வாங்கிக்கொண்டு காரியம் செய்துதராமல் ஏமாற்றிவிடாதீர்கள் என்பதே. ஏலத்தில் பதவியைப் பெறும் எம். எல். ஏக்கள், எம். பிக்கள், மந்திரிகள் இதை மட்டும் கவனத்தில்கொண்டால் போதும். அதேநேரம், அவர்களுக்கு இன்னொரு நிபந்தனையும் உண்டு. வீட்டுக்குக் குழாய் இணைப்பு, மின் இணைப்பு, சாக்கடை நீர் அகற்றுதல், கோயில்களில் செருப்பு பாதுகாப்பு, நடைபாதைக் கடைகளில் மாமூல் வசூலிப்பு போன்றவற்றை ஊராட்சி அமைப்புகளின் உறுப்பினர்களான வார்டு கவுன்சிலர்களிடம் விட்டுவிட வேண்டும். அது அவர்களது உரிமை. ஏதோ தம் சக்திக்கு தகுந்தமாதிரி அவர்களும் சம்பாதிக்கவேண்டாமா? மேலும், அவர்களும் ஏலமுறை மூலம் தானே பதவிகளை பெறுகிறார்கள். தேர்தல் என்றால் கோயில் தர்மகத்தா உள்பட எல்லாருமே ஏலமுறையில் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

வரலாற்றின்மூலம் படிப்பினைகளைப் பெறலாம் என்பதனால், வாசகர்களுக்காக ஒரு வரலாற்றுத் தகவல் இந்த ஏல முறை நம் நாட்டுக்கு புதிதல்ல. இருபது வருடங்களுக்கு முன்பு கர்நாடக மாநிலம் பெல்காம் மாவட்டத்தில், கல்லோல என்ற கிராமத்தில் கிராம சபை உறுப்பினர்கள் இப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கிராமசபைக்கு மொத்தம் 32 வார்டுகள். தேர்தல் அறிவிக்கப்பட்டதும் முக்கிய புள்ளிகள் ஒன்றுகூடி தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களை அழைத்தார்கள். ஏலம் நடத்துகிறோம், அதில் யார் அதிக தொகை தருகிறார்களோ அவர்கள்தான் வேட்பாளர்கள்; ஒரு வார்டுக்கு ஒருவர் என்று ஏலம் உறுதிசெய்யப்படும் என்றார்கள். போட்டியிட விரும்பியவர்கள், ஏலம் வேண்டாம், ஒரு குறிப்பிட்ட தொகையைச் சொல்லுங்கள், அதைக் கட்டிவிடுகிறோம் என்கிறார்கள். அப்படியே செய்தார்கள்; வென்றார்கள்.

கல்லோல கிரமத்தில் மட்டும் எல்லா வார்டுகளுக்கும் கவுன்சிலர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டது எப்படி என்பதை அறிய அங்கே சென்ற சர்ஜூ கட்கர் என்ற ஓர் ஆங்கில பத்திரிகை நிருபர் அதைச் செய்தியாக்கினார். அப்போது தெரியவந்தன மேற்சொன்ன விபரங்கள்.

"சரி, இப்போது காசு கொடுத்து ஜெயித்தவர்கள் உங்களிடம் லஞ்சம் வாங்காமல் இருப்பார்களா'' என்று அவர் கேட்டதற்கு அந்தக் கிராமத்தில் பெரியவர் சொன்னார், "எங்களுக்கு எதுவும் கொடுக்காவிட்டாலும் இவர்கள் லஞ்சம் வாங்கத்தான் போகிறார்கள். கிராமத்தின் பொது நலனுக்காக அந்தப் பணத்தை வங்கியில் செலுத்தியிருக்கிறோம்'' என்றார்.

'அது சரி, அரசாங்கம் பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடியினர் என்பதற்குச் சலுகைகள் தருகிறதே, நீங்களும் அப் பணத்தில் ஏதாவது சலுகைகாட்டியிருக்கலாமே' என்று கேட்கப்பட்ட போது, 'அதனால்தான், பொதுத் தொகுதிகளுக்கு ரூ. 20 ஆயிரம், பிற்படுத்தப் பட்டவர்களுக்கு ரூ. 15 ஆயிரம், பழங்குடியினருக்கு ரூ. 10 ஆயிரம் என்று முடிவானது. இந்தவகையில் ரூ. 4.55 லட்சம் திரட்டப்பட்டது. வார்டுக்கு ஒருவர் என்று போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்' என்று தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு பெரியவர் சொன்னார், "இவர்கள் பதவிக்கு வந்ததும் வேலை செய்துதருவதில் சொந்தம், நட்பு என்று பாராமல், கறக்கவேண்டியதைக் கறந்துவிடுகிறார்களே, இவர்களுக்கு ஏன் தள்ளுபடி என்று நினைத்தாலும், வெவ்வேறு கட்டணங்களை நிர்ணயித்தோம். பார்க்கப்போனால், எல்லா வார்டுகளையும் சம அளவு தொகைக்கு ஏலம் விட்டிருந்தால் கூடுதல் பணம் கிடைத்திருக்கும்.''

இந்த விவரங்கள் அந்த ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்ததும், மாநில தேர்தல் ஆணையர் பி. எஸ். நாகராஜ் தேர்தல் முடிவுகளை நிறுத்திவைத்தார். முறையான தேர்தல் அது என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. "இப்படியெல்லாம் செய்தால் ஏழைகள் தேர்தலில் போட்டியிடமுடியாது' என்று காரணம் சொன்னார்.

அது அந்தக் காலம். இப்போது, தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் ஏழைகள் இல்லை. ஜெயித்த பிறகு, அவரது சொந்த பந்தங்கள் யாரும் பல தலைமுறைகளுக்கு ஏழைகளாக இருக்கவும்மாட்டார்கள்.

கட்சித் தலைமைக்கு பணம் கொடுத்து 'சீட்' கேட்கும் அளவுக்கு பணத்தில் முன்னேறிவிட்டவர்களுக்கு ஏலமுறை சரியானதே. இதனால் நாட்டில் ஊழல் ஒழியும், கறுப்புப் பணம் இருக்காது, எங்கும் பாலாறும் தேனாறும் ஓடும். ஆனால், ஒரேயொரு ஆபத்து இருக்கிறது. நாடு நெடுக ஒரு முறை இப்படி ஏலமுறையில் தேர்தல் நடந்தால், அதில் இப்போது நம்மை ஆளும் அயல் சக்தி திரும்பவும் வெற்றி பெற்றால், இந்தியாவை ஒட்டுமொத்தமாக ஏதாவது ஓர் அயல்நாட்டுக்கு ஏலம் விட்டுவிடாது என்று சொல்ல முடியுமா? அப்போதும் மக்களாகிய நாம் சும்மாவே இருப்போம். ஏனென்றால், எல்லாத் தேர்தல்களும் அரசியல்வாதிகளுக்காகவே.

எனவே, மக்களாகிய நாம் சேர்ந்து சொல்வோம் வாருங்கள், "இந்தியா ஒரு தரம், இந்தியா இரண்டு தரம், இந்தியா மூன்...'' ■


பிரான்சிஸ் ஹரிசன்

# பேரழிவின் விளிம்பில் மக்கள் இருந்ததை புலிகள் உணர்ந்திருந்தனரா?

**அரசை எதிர்க்கும் வலிமை புலிகளுக்கு இருக்கிறது என்று, கடைசிவரை அவர்களுடன் இருந்து மாண்டுபோன தமிழர்களின் வரலாறு**

**பிங்காட்சன்**






இலங்கையில் போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகப்போகின்றன. அந்தக் கொடிய போர் ஏற்படுத்திய வடுக்கள்; இல்லை, ரணங்கள் இன்னமும் அப்படியே இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவு அளிப்பதா வேண்டாமா என்று இந்திய அரசு கடும் ஆலோசனை செய்து ஈற்றில், தீர்மானத்தை மென்மைப்படுத்தி ஆதரித்தது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் (தி. மு. க.) 'டெசோ' என்ற ஈழத் தமிழர் ஆதரவு இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பித்து, இந்திய அரசுக்கு அழுத்தம்கொடுக்க முயன்று வருகிறது. 'குதிரை போனபின் லாயத்தைப் பூட்டுவதுபோல' என்று அடிக்கடி தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறுவது போல, இது காலம் கடந்த செயல் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். டில்லியில் நடந்த டெசோ மாநாடு பிசுபிசுத்துப்போனது. மார்ச் 12ஆம் தேதி அறிவிக்கப்பட்ட கடை அடைப்பும் தோல்வியே கண்டது. இப்போது, ஐ. நா. தீர்மானத்தின் பின் மத்திய அரசிலிருந்து தி. மு. க. விலகியிருக்கிறது.

ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் 2009ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம்வரை கொன்றுகுவிக்கப்பட்டபோது - இலங்கை அரசுப் படைகளால் அழித்து ஒழிக்கப்பட்டபோது, சர்வதேச சமுதாயமும் இந்தியாவும் கருணாநிதியும் அதைக்கண்டுகொள்ளாமல் வாளாவிருந்துவிட்டு, இப்போது புலம்பிப் பிதற்றுவது ஏன்? என்ற கேள்வி பலரிடம் எழுகிறது.

பிரிட்டனில் 'சனல்-4' தொலைக்காட்சி ஒளிபரப்பிய இரண்டு ஆவண திரைப்படங்கள் போரின்போது நடந்த வன்கொடுமைகளை வெளிச்சம்போட்டுக் காட்டின. லட்சம்பேர் போர்ப் பகுதிகளில் கொன்றழிக்கப்பட்டிருக்கலாம் என்று அநுமானிக்கப்படுகிறது. அந்த காலகட்டத்தில், போர்ப் பகுதிகளில் நிகழ்ந்தது என்ன என்பதை வெளி உலகம் அறியவில்லை; செய்தியாளர்கள் அங்கே அநுமதிக்கப்படவில்லை; ஐ. நா. சபை, செஞ்சிலுவைச் சங்கம் போன்றவை வெளியேற்றப்பட்டுவிட்டன. இந் நிலையில், உண்மையில் அங்கு நிகழ்ந்தது என்ன என்பதை *'Still Counting the Dead'* என்ற இந் நூல் விளக்குகிறது.

இந் நூலின் ஆசிரியர் பிரான்சிஸ் ஹரிசன், பிபிசியின் நிருபராக இலங்கையில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியவர். இடையில், 2002 முதல் சிறிதுகாலம் அமைதி நிலவியபோது, அங்கே பணியாற்றியதால் விடுதலைப் புலிகளில் முக்கியமானவர்களிடமும் அவர் பழகியவர். பிபிசி நிருபர் என்பதால் பிபிசிக்கே உரிய நடுநிலைமை, பக்க சார்பின்மையை இந்த நூலில் காணமுடிகிறது.

உலகம் முழுவதும் சுற்றித்திரிந்து செய்திகளைச் சேகரித்திருக்கிறார் பிரான்சிஸ் ஹரிசன். வெங்கொடுமைச் சாக்காடாக விளங்கிய கிளிநொச்சி, முள்ளிவாய்க்கால்போன்ற பகுதிகளில் போரின்போது சொல்லொணாத் துயரங்களை அநுபவித்து, தப்பிச் சென்று வெளிநாடுகளில் குடியேறிவாழும் பலரைச் சந்தித்து, போரின்போது அவர்கள் கண்ட கொடுமைகளை - மரணங்களை - நெஞ்சம் பதைக்கும் சம்பவங்களை அவர்கள் வாயிலாகவே கேட்டு எழுதிய நூல் இது.

ஓர் அரசு தன்னுடைய மக்களைத் தேடித்தேடிச் சென்று அழித்து ஒழித்தது.

மருத்துவர், போருடன் சம்பந்தமில்லாத மளிகைக் கடைக்காரர், கத்தோலிக்க கன்னியாஸ்திரி, இயக்கத்திலிருந்து போரிட்ட விடுதலைப்புலி இயக்க இளைஞர், சேவை அமைப்பின் பணிப்பாளர், பத்திரிகையாளர், இப்படிப் பலர் சரணடைந்து, பின்னர் தப்பித்து நாட்டைவிட்டு வெளியறேியவர்கள் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழும் நோர்வே, கனடா, அவுஸ்திரேலியா, இங்கி

லாந்து ஆகிய இடங்களுக்கு சென்று, அவர்களைப் பேட்டி கண்டு இந்த நூலை அவர் எழுதியுள்ளார். இவர்களுடைய உண்மைப் பெயர்களை வெளியிடாமல் வேறு பெயர்களில் குறிப்பிடுவதாக பிரான்சிஸ் ஹரிசன் கூறுகிறார். உண்மைப் பெயர் வெளியிடப்பட்டால் இன்னமும் இலங்கையில் வாழும் அவர்களுடைய உறவினர்கள் அரச படைகளால் இன்னலுக்கு ஆளாகக்கூடும் என்பதுதான் இதற்குக் காரணம் என்கிறார்.

ஹரிசனுக்கு விடுதலைப் புலிகளிடையே அதிகம் பழக்கமானவர் புலித்தேவன். போர் உக்கிரமாக நடந்துகொண்டிருந்த கடைசி மாதங்களில் புலித்தேவனுடன் 'ஸ்கைப்' மூலம் தொடர்புகொண்டிருந்தார்.

"புலிகள் ஒவ்வோர் ஊராக இழந்து பின்வாங்கிக்கொண்டிருந்தார்கள். இனிப் போவதற்கு கடலைத் தவிர வேறு இடம் இல்லை என்ற நிலையில், அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்; நீங்கள் ஏன் சரணடைந்துவிடக்கூடாது என்று கேட்டேன். சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலையையே அவர்கள் கெட்டியாக பற்றிக்கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தெளிவானது'' என்கிறார் அவர்.

புலித்தேவன் எந்த முடிவுக்கும் வரமுடியாமல், குழப்பத்தில் இருந்தார் என்று தோன்றியது. அவருடைய இயக்கம் தன் தலைவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சாதாரண பொதுசனங்களையும் குழந்தைகளையும் பெண்களையும் பலிகொடுத்துவந்ததை அவர் உணர்ந்திருந்தாலும், இயக்கத்துக்கு எதிரான முரண்பட்ட கருத்து எதையும் அவர் தெரிவிக்கவில்லை என்று கூறும் ஹரிசன், புலிகள் தங்களை நம்பியிருந்த மக்களை மனித கேடயங்களாக பயன்படுத்திவந்தனர் என்றும் கருதுகிறார்.

'சன்டே ரைம்ஸ்' நிருபர் மேரி கொல்வின் மூலமாக சர்வதேச சமுதாயத்திடம் உதவிகோரியவேளையில் நடேசன் விதித்த நிபந்தனைகளைப் பார்க்கும்போது, மக்கள் பேரழிவின் விளிம்பில் இருந்ததை அவர்கள் உண்மையில் உணர்ந்திருந்தனரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்கிறார்.

இறுதியில், புலித்தேவனும் நடேசனும் சரணடைய முன்வந்தபோது, இவர்கள் சரணடைவதை இலங்கை அரசை ஏற்கச்செய்வது மிகவும் கடினம் என்று ஐ. நா. செயலாளரின் சிறப்புத் தூதர் விஜய் நம்பியார் கூறினாராம். சரணடைவதற்கு முன், றோகன் சந்திரநேரு என்ற பாராளுமன்ற உறுப்பினருக்கும் அமெரிக்கா, நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கும் தாங்கள் சரணடையப்போகும் நேரத்தையும் அவர்கள் தெரிவித்தனர். இவர்களுடைய கண்காணிப்பின்கீழ் சரணடையவேண்டும் என்பது அவர்களின் விருப்பம். ஆனால், சரணடைவதை மேற்பார்வையிடக்கூட விஜய் நம்பியார் தயாராக இல்லை. சரணடைந்த விடுதலைப் புலிகள் பத்திரமாக இருப்பார்கள் என்று ராஜபக்ஷ தம்மிடம் கூறியதாகவும் எனவே, தான் அங்கு வருவதற்கு தேவையில்லை என்றும் அவர் கூறிவிட்டார்.

சரணடைவதற்கு சற்று முன்னர் நடேசன் லண்டனிலுள்ள தன் சகோதரரிடம் பேசினார். போரில் படுகாயமடைந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் தம்முடன் இருப்பதாக நடேசன் கூறினார். புலித்தேவனும் நடேசனும் உண்மையில், சரணடைய முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்றே கருதப்படுகிறது.

லோகீசன் ஒரு பத்திரிகையாளர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் பணியாற்றியவர். தோல்வி என்பதையே அறியாத இயக்கம் என்று கருதப்பட்டுவந்த புலிகள், தோற்று ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் பல்லாயிரக்கணக்கான மக்களும் சென்றுகொண்டிருந்தனர். ஒருபக்கம், நெருங்கிவரும் அரசுப் படை. மேலிருந்து குண்டு மழை. மறுபக்கம், கடல் மட்டுமே. தாகம் தீர்க்க தண்ணீர் இல்லை. உணவுக்கு கடும் பஞ்சம். எங்கெங்கு நோக்கினாலும் உயிரற்ற சடலங்கள். இரத்த ஆறு. மருத்துவமனைகளுக்கு அருகில் குண்டுவீச்சு ஏற்படுத்திய பள்ளங்கள். வெள்ளைக் கொடியைப் பிடித்தவண்ணமே உயிரிழந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள். சிதறிக் கிடக்கும் மனித உறுப்புக்கள். மரண ஓலம்.

புலிகள் இவர்களை மனித கேடயமாகப் பயன்படுத்தினர் என்பதை மறுக்கிறார் லோகீசன். தன் தந்தை, மனைவி, குழந்தையுடன் லோகீசன் தப்பிச் செல்கிறார். வழியில் அவர் கண்ட காட்சியை விவரிக்கிறார்.

மருத்துவமனைக்கு டிராக்டர் ஒன்று காயமடைந்தவர்களை ஏற்றிவருகிறது. ஒரு பெண்மணி தலையிலிருந்தும் கழுத்திலிருந்தும் இரத்தம் வடிய, "எங்கே என் குழந்தை; எங்கே என் குழந்தை'' என்று கதறுகிறார். ஒரு மூதாட்டி அவளுடைய இரண்டு மாதமேயான குழந்தையை அவள் அருகில் கொண்டுவருகிறாள். அந்தப் பெண் தன் மார்பகங்களைத் திறந்து, அந்தக் குழந்தைக்குப் பாலூட்டுகிறாள். நெடு நேரமாக பட்டினிகிடந்த குழந்தை அவளது முலையைச் சுவைத்துக்கொண்டிருக்கும்போதே அவள் உயிர் பிரிகிறது. அதன் பின்னரும் குழந்தை பால்குடிக்க முயன்றுகொண்டிருந்தது.

இதைப்போன்ற காட்சிகள் இந்த நூலில் ஏராளமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

மருத்துவ உதவியின்றி, காயமுற்ற பலர் செத்துக்கொண்டிருந்தனர். தப்பித்து ஓடியவர்களிடம் "அண்ணா, காப்பாத்துங்கோ'' என்று கெஞ்சிக்கொண்டவர்கள் பலர்.

"அண்ணா, உங்க 'சயனைட்' குப்பியைத் தந்துவிட்டுப் போங்கோ'' என்று கதறுபவர்கள் பலர்.


டாக்டர் நிரன், நூலாசிரியரிடம் பேசும்போது பலமுறை கண்ணீர் சிந்துகிறார். நெஞ்சடைக்க, அவரால் பேச முடியவில்லை. அவர் பணியாற்றிய மருத்துவமனைக்கு சில அடி தூரத்திலேயே குண்டுகள் வீழ்ந்து மக்கள் சிதறி மடிந்துள்ளனர். அவருடைய நர்ஸ் அவர் கண் முன்னரேயே குண்டுபட்டு இறந்துபோனார். அவருடைய சக டாக்டர்களில் பலர் உயிரிழந்தனர்.


இப்படி, பல நிகழ்வுகளை நேரில் கண்டவர்கள் சரணடைந்து, பின்னர் இராணுவத்துக்கும் அவர்களுடன் சேர்ந்திருந்த தமிழருக்கும் லஞ்சம் கொடுத்து தப்பித்து, வெளிநாட்டில் அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

நோர்வேயில் வாழ்ந்த தமிழர் ஒருவர் 2005ஆம் ஆண்டு இலங்கை திரும்பி, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து பணியாற்றி, பின் சரணடைந்து தப்பித்து வெளியேறி, மீண்டும் நோர்வே வந்துவிட்டார். முன்னணியில் நின்று போரிட்டவர், முகாம்களில் தன்னைச் சித்திரவதை செய்தவர்களில் தமிழர்களும் இருந்தனர் என்ற கதையை கூறுகிறார்.

இந்த நூல் மிகச் சிறந்த ஆவணம். சர்வ வல்லமையுடைய அரசை; படைபலம், பணபலம், பதவிபலம் கொண்ட அரசை; சர்வதேச ஒத்துழைப்பை உடைய அரசை எதிர்த்துப் போரிட்டு, வெற்றிபெறும் வலிமை விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது என்று, அவர்களுடன் கடைசிவரை இருந்து மாண்டுபோன அப்பாவித் தமிழர்களின் வரலாற்று ஆவணம் இது. ■

# காரைக்குடி 'ரசம்'





சரஸ்வதி பாக்கியராசா அரங்கேற்றிய மாணவன் அகிலேஷ் ஶ்ரீகுமார். ஒரு கட்டை சுதியில் பாடும்போது குரலில் கீழ் பஞ்சமம் பேசுகிறது. சுத்தமாக பிடிக்கிறான்; ஆச்சரியம்.

நல்ல ஞானமும் ஆர்வமும் இருக்கிறது. ராகம் - தானம் - பல்லவியில் சுரங்கள் பாடும்போது தாளத்தில் கச்சிதமாக பாடினான். நல்ல தாள ஞானமும் இருக்கிறது.

வயலின், மிருதங்கத்தையும் நன்கு ரசித்துக்கொண்டு, கச்சேரியை தானே நிர்வகித்து பாடினான்.

நல்ல பக்கவாத்தியங்கள். கரஹரப்பிரியா, சண்முகப்பிரியா பிரதான ராகங்கள். மற்றைய உருப்படிகளில் ஓர் அரை நிமிடம் ராகம் பாடினால், வயலினில் ஞானசுந்தரம் அந்த ராகத்தை அதற்குள்ளேயே அற்புதமாக முழுமையாக கொணர்ந்துவிடுகிறார். மிக நன்றாக வாசித்தார்.

இந்தியாவில், மிருதங்கத்தில் பலர் தனியாவர்த்தனமெல்லாம் மிக சிறப்பாக வாசிக்கிறார்கள். ஆனால், பாட்டுக்கு சிறப்பூட்டி வாசிப்பவர்கள் குறைவு. அகிலேஷுக்கு மிருதங்கம் வாசித்த சதீஷ்குமார் இந்தியாவில் இன்று பாட்டுக்கு மெருகு கொடுக்கின்ற ஒரு மிருதங்க வித்வான்.

இந்த அநுசரணையெல்லாம் கிடைத்தது. கேள்வி ஞானத்திலும் மிகுந்த கவனம் செலுத்தினால் முன்னுக்குவரமுடியும்.

ஞானசுந்தரம் தன்னுடைய 'ராகசுதா' நிகழ்ச்சியில் வீணை, வயலின், பாட்டு, மிருதங்கம் மற்றும் சில வாத்தியங்களை இணைத்து, ஒரு 'வாத்திய சங்கமம்' நிகழ்ச்சியை அளித்தார். ஒரு பெரிய மேதையிடம் குருகுலவாசம் செய்தவர் அவர் என்பதை அது துல்லியமாக உணர்த்தியது.

முதலில் பஞ்சரத்தின கீர்த்தனை. அப்புறம், சியாமா சாஸ்திரிகளின் பைரவி ஸ்வரஜதி. கடைசியில், அவருடைய வாத்தியார் லால்குடி ஜெயராமனின் தில்லானா.

பஞ்சரத்தின கீர்த்தனை இப்போது பொதுவாக அரங்கேற்றங்களிலேயே எல்லோரும் பாடுகிறார்கள். குருவிடம் கற்றுக்கொண்டு, ஸ்வர வரிசைகளைப் பார்த்து பாடிவிடலாம். ஆனால், சியாமா சாஸ்திரிகள் கிருதிகள் அப்படியல்ல. பாடுவது, வாசிப்பது அவ்வளவு எளிதானதல்ல. பெரும் வித்வான்கள்கூட தயங்குவார்கள். சுயமான, நல்ல ஞானம் வேண்டும்.

சியாமா சாஸ்திரிகள் உருப்படியில் பைரவி என்றால் அது பைரவியாகத்தான் இருக்கமுடியும். அப்படியிருக்க, அந்த பைரவி ஸ்வரஜதியை துணிச்சலோடு எடுத்து, அழகாக கையாண்டார்கள். வேறு பலரின் மாணவர்களை ஒன்றிணைத்து, ஞானசுந்தரம் அந்தவிதமாக அதனை அளித்தது அபூர்வமானதாகவே இருந்தது.

முப்பத்தைந்து வருடங்கள். எம். எல். வசந்தகுமாரியுடன் அமெரிக்க - கனடா சுற்றுப்பயணத்தில் எம். எல். வி. யின் பாட்டுக்கும், அவருடைய புதல்வி ஶ்ரீவித்யாவின் நடனத்துக்கும் இணைந்து வாசித்தபின்னர், கன்னியாகுமாரியின் வாசிப்பை யாழ்ப்பாணம், ஸ்கந்தவரோதய கல்லூரி பழைய மாணவர்களின் 'ஆலாபனா' நிகழ்ச்சியில் கேட்டேன்.

கத்ரி கோபால்நாத், கன்னியாகுமாரி சக்ஷபோன் - வயலின்.

கை, நன்கு கனிந்துபோயிருக்கிறது.

எந்தெந்த இடத்தில், எப்படி வாசிக்வேண்டும் என்பதை நன்கு புரிந்துகொண்டு பிரமாதமாக வாசிக்கிறார். அது, நிகழ்ச்சியைத் தூக்கிக் கொடுக்கிறது.

தெரிந்த, பழக்கமான உருப்படிகளாகவிருந்தாலும், சக்ஷபோன் வாத்தியத்தில் அவை காதில் வீழ்கிறபோது அதன் தொனி ஒரு மகிழ்வைத் தருகிறது.

பாலசந்தர் மிருதங்கம், தணிகைவேல் தவில், மற்றும் தபேலா எல்லாம் இருந்தாலும், எந்த இடத்தில் எதைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற கத்ரி கோபால்நாத்தின் ஞானம் பெரிது. ராகமாலிகைகளிலெல்லாம் எந்த ராகத்துக்கு எந்த வாத்தியம் உகந்ததோ அப்படியே பிரித்துவிட்டார்; மிக நன்றாகவிருந்தது.

லண்டனில் நடக்கும் இசை, நடன நிகழ்ச்சிகளில் இங்கு வசிக்கும் முதிர்ந்த மிருதங்க வித்வான் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி சிலசமயங்களில் சில வார்த்தைகள் பேசுகிறார். அப்போது, அந் நிகழ்ச்சிகளைக் கேட்ட, பார்த்த பயனாக அப் பேச்சு நிறைகிறது.

சில சமயங்களில், எளிதில் புரிந்துவிடாத சில 'சங்கதி'களும் அதில் இருக்கும். ஆனாலும், பக்குவமாக இருக்கும்.

அவரைப் பார்க்கும், பேசும் வழக்கத்தில், இந் நிகழ்ச்சிகளின் பின்னர் அவருடனான அசைமீட்டல் துணுக்குகள் இவை.

**- மாலி**

லண்டன் தியாகராஜ உற்சவம்

# காவேரியில் பெருகி பரவும் கலைவளம்



திருவையாறு என்றதும் நினைவுக்கு வருபவை இரண்டு விடயங்கள். ஒன்று; அங்குள்ள அழகான ஐயாறப்பன் திருக்கோவில். மற்றையது, சற்குரு தியாகராஜ சுவாமிகள் சமாதி.

இரண்டையும் நேரிலே பார்த்து தரிசித்தவர்களுக்கு அவற்றின் அந்த அருமை தெரியும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இசை மும்மூர்த்திகளான தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் திருவாரூர்ப் பிறந்தவர்கள். பெற்றோருடன் திருவையாறு சென்று வாழ்ந்தவர் தியாகராஜ சுவாமிகள். ஏனோ அவருக்கு மட்டும் ஆண்டுதோறும் ஐந்து நாள்கள்வரை விழா எடுக்கிறார்கள்.

தியாகராஜ உற்சவம் என்றவுடன், இசைப் பிரியர்களுக்கு திருவையாறு விழாக் காட்சி கண்முன் விரியும். பணத்துக்கும் புகழுக்குமன்றி, இறைவனை அநுதினமும் உபாசனை செய்த தியாகராஜர் சந்நிதியில் பல வித்வான்கள் வந்து, பய பக்தியோடு இசைவேள்வி செய்வது கண்ணுக்கும் காதுக்கும் ஓர் அரிய விருந்து. காலையிலிருந்து இரவு வரை, பத்து நிமிடம், பதினைந்து நிமிடம், இருபது நிமிடம் என்று, கலைஞர் தரத்துக்கேற்ப நேரம் கொடுப்பார்கள். கலைஞர்களும் கூடியவரை அந்த நேரத்துள் சில தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடுவார்கள்.

அந்த சம்பிரதாயத்தைப் பின்பற்றி இவ்வாண்டு இங்கிலாந்தில் ஒரு தியாகராஜ உற்சவம் நடந்தது. *Lanc Franc School* மண்டபத்தில் பெப்ரவரி 24ஆம் தேதி காலை 10 மணியிலிருந்து மாலை 9 மணிவரை இந்த விழா நடைபெற்றது. பூசை, வழிபாட்டுடன் ஆரம்பமான விழாவில் பல இசை ஆசிரியர்களின் மாணவர்கள் பங்கேற்று ஆராதனை நிகழ்த்தினார்கள். பாட்டு, வயலின், புல்லாங்குழல், வீணை என

**இந் நிகழ்ச்சிபற்றி கேள்விப்பட்டபோது மனதில் எழுந்த பல கேள்விகள் அர்த்தமற்றவை**




வந்த மாணவர் வழங்கிய இசை பிரமாதமாக இருந்தது. மாணவர்களும் பத்தியோடு பவ்யமாக வந்து தத்தம் பங்களிப்பைச் செய்தார்கள். மாலையில், மீண்டும் ஒரு பூசை வழிபாட்டின் பின், தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த திரு ஸ்ரீராம் கங்காதரனின் இசை ஒலித்தது. அவருக்கு பக்கவாத்தியமாக திரு துரை பாலசுப்பிரமணியம் வயலின், திரு பத்ரி சதீஷ்குமார் மிருதங்கம், திரு ஆர். என். பிரகாஷ் கடம் வாசித்தார்கள்.


சுமார் 30 நிமிடங்கள் நடந்த இந்த நிகழ்வு மனதை நிறைக்கும் நிகழ்வாக அமைந்தது. கல்யாணியில் கம்பீரமாக ஆரம்பித்து, மிக அருமையான தனியாவர்த்தனத்துடன் நிறைவுற்றது. அதைத் தொடர்ந்து திருவையாற்றிலே நிறைவுநாள் நடப்பதுபோலவே மண்டபத்துள் இருபுறமும் பெரிய கலைஞர்முதல் வளரும் கலைஞர்வரை இருந்து, பஞ்சரத்தின கீர்த்தனைகள் பாடினர்.



முதலில் இந்த நிகழ்ச்சிபற்றிக் கேள்விப்பட்டபோது இது சரிவருமா? நாள் முழுக்க இந்த நாட்டுக் குளிரில் இருந்து இசை கேட்பார்களா? சிறுவர்கள் பலர் வந்து பங்கெடுப்பார்களா? பெற்றோர் பள்ளிப் படிப்பைவிட்டு பிள்ளைகளை அழைத்துவருவார்களா? இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் பக்கவாத்தியம் உண்டா? என்று பல கேள்விகள் மனதிலே எழுந்தன. ஆனால், அவை எல்லாமே அர்த்தம் அற்றவை என்பதை அன்றைய விழா நிரூபித்துவிட்டது.

இன்னோர் ஆச்சரியம், திருவையாறுபோலவே மதிய உணவு மட்டும் என்று இன்றி, நாள் முழுவதும் இலவசமாக உணவு அளிக்கப்பட்டது. வந்தவர்களை சூடாக, சுவையாக விருந்தோம்பிய பாங்கு அது.

இங்கிலாந்தில் எத்தனையோ இசை ஆசிரியர்கள், திறமைமிக்க மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே பலரை அன்று காணவில்லை. அவர்களுக்கு இவ்விழா பற்றித் தெரியாமல் இருந்திருக்கலாம். அவர்களும் அடுத்த அடுத்த ஆண்டுகளில் வரும் விழாக்களில் பங்கேற்றுச் சிறப்பித்தால் இன்னும் நன்றாக இருக்கும்.



விழாவுக்குப் போகும்போது இன்னொரு பயமும் மனதில் இருந்தது. குளிரில் நாள்முழுக்க இருந்து வீடு திரும்பும்போது உடல் வலி இருக்குமே என்பதுதான். ஆனால், ஆன்மீக இசை கேட்டதும் மனவழுத்தம் இன்றி ஆனந்தமாக இருந்ததும் எவ்வித வேதனையையும் அணுக விடவில்லை. இசையின் சிறப்பே இதுதானோ?

படங்கள்: சாந்தன்

– ஹிந்தோளம்

# அழியாத தடங்கள்

"இவ்வளவு காலமுந்தான் போக்குவரத்துச் சீரில்லையெண்டு தட்டிக் கழிச்சாய். இந்த முறையாவது கோயில் திருவிழாவுக்கு நீ ஊருக்கு வந்தால் என்ன?''

புதுவருடப் பிறப்பிலன்று கைபேசியில் என்னை அழைத்தபோது, நண்பன் சிவகுமார்தான் அந்த ஆலோசனையை முதலில் முன்வைத்தான்.

கொழும்புக்கு வந்துசேர்ந்து முப்பது வருடங்கள் முழுதாக முடிந்துவிட்டன. கணக்கியல் கல்விகற்ற ஆரம்ப நாள்களில் விடுமுறைகள் தோதாக அமையாததாலும், கையில் பணம் புரளாததாலும் ஆனித்திருவிழாவுக்கு ஊர்செல்வதற்கு வாய்ப்புக்கள் அவ்வளவாக அமையாதுபோயிற்று. மணம் முடித்து பிள்ளைகள், உயர் பதவிகள்போன்ற பேறுகள்பெற்று, தலைநகரே தஞ்சமென 'செற்றில்' ஆன பிற்பட்ட காலகட்டங்களில், நாட்டு நிலைமை அசாதாரணங் காட்டிற்று. அதனால், எங்களூர் ஆலய மஹோற்சவம் எனக்கு கனவாய்ப்போனது... ஏதோ உண்மைதான்.

"வந்திருக்க வேறையெந்த இடமும் ஒழுங்குபண்ணவேண்டாம். எங்கடை வீட்டிலையே வசதியாத் தங்கியிருக்கலாம்'' எனும் நண்பனின் அன்பான ஏற்பாட்டையும், என் கைபேசிக்குத் தொடராக வந்த 'எஸ்எம்எஸ்' அழைப்புகளையும் நிராகரிக்கமுடியாது, கொழும்பில் குடும்பத்தினரை விட்டுவிட்டு, இப்போது வெறுமனே நான் மட்டும் திருவிழா தரிசனத்துக்கென ஊர்வந்திருக்கிறேன்.

இன்று, ஆறாந் திருவிழா. அந்த நாள்களில் என்றால், இன்றுதான் பூங்காவனம். வீதியெங்கும் வளையல் கடைகளும், விண்ணுயர்ந்த நாலைந்து சிகரங்களுமாய் ஊரே திரண்டு வந்திருக்கும். நல்லையாவின் ஒலிபெருக்கியில் உச்சஸ்தாயியில் ஒலிக்கும் சீர்காழியின் பக்திப் பாடல்கள் தேகத்துக்கு புத்துணர்வூட்டும். ஆறுமுகப்பா கடை முதல் மாவில் வாய்க்கால்வரை வீதியெங்கணும் 'நொங்கும்' இளநீரும், புதிதாய் முளைத்த கம்பங்களில் குலை தள்ளி நிற்கும். சவுக்கு மரங்கள் பக்தர்களுக்கு சாமரம் வீசும்.

ஆனால்... இன்று, அந்நிய முகங்களும் அறியாத சனங்களுமாய்... கோயிலும் சூழலும்கூட திருவிழாவுக்கான களை ஏதுமின்றி... ஏதோ வேள்விக்காய் தயாராகி நிற்பதுபோல்...

"முன்னைமாதிரியில்லை... இப்ப திருவிழா கோயில் பூசைகளோடை சரி. இரவும் கலை நிகழ்ச்சிகள் ஒண்டுமில்லை. எல்லாம் வீண்செலவெண்டு உபயகாரர் கையை விட்டுட்டினம்.''

ஆலயத்தை தரிசித்துவிட்டு வெளிவீதியில் இறங்கியபோது சேட்டை அணிந்தவாறே சிவகுமார் கூறினான்.

அழகிய இராஜகோபுரம், பூங்காவன உற்சவத்துக்கு ஏதுவாக மண்டபத்துடன்கூடிய நிரந்தர நந்தவனம், கோயிலின் வடகிழக்கே தேர்முட்டியுடன் உரசியவாறிருந்த அந்தியேட்டி மடமிருந்த இடத்தில், புதுப்பொலிவுடன், ஏதோ ஒரு பெயரைத் தாங்கியவாறே, வெக்கை வீசிக்கொண்டு அன்னதான மடம்... என, கோயிலின் 'மப்' சற்று மாறித்தான் இருக்கிறது.

"பத்து நாளும் மத்தியானம் அன்னதானம் குடுப்பினம்... தானமெண்டால் முன்னைமாதிரி 'ரேக் எவே' இல்லை... மடத்திலையே பந்திவைத்து சோறு போடுவினம்.'' எனக்கு சிவகுமார் சொல்பவை எல்லாம் புதிதாகவே இருந்தன.

"கலியாண மண்டபம், இந்தமாதிரி மடத்திலை அன்னதானம் எண்டு, கொழும்பு லெவலுக்கு இப்ப எல்லாம் மாறீட்டுதுபோல சிவா...'' எனது ஆதங்கத்தை தெரிவித்துக்கொண்டேன்.

"பின்னை... மாறுதல்கள் இல்லாமல் நெடுகவும் ஒரே மாதிரியே இருக்கிறது?'' என்றவன், அன்னதான மடத்தினை நோட்டமிட்டவாறே தொடர்ந்து சொன்னான், "இப்ப கொஞ்ச நேரத்தாலை முதலாம் பந்தி வைப்பினம்.''

"அப்ப இருந்து சாப்பிட்டுட்டுப் போவம் சிவா.''

"உன்ரை விரும்பம் அதுதானெண்டால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், 'வைவ்' வீட்டிலை சமைச்சு வைச்சிருக்கிறா எல்லோ? எதுக்கும் அவவுக்கும் ஒருக்கால் சொல்லுவம்'' என்றவாறே, தனது செல்போனில் நம்பரை அழுத்தியவாறே என்னைவிட்டு சற்று விலகி, மடத்துக்குப் பின்னால்... பூங்கொல்லைப் பக்கமாக செல்கிறான் சிவகுமார்.

இப்போது நான் தனித்து விடப்படுகிறேன்.



''உவர் பொடிப்பயல்... இந்த முறை எங்கடை பூங்காவனத் திருவிழாவுக்கு தான்தான் தெற்பை போடவேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிற்கிறாராம்...

''நல்லா அறிஞ்சுதான் கேட்கிறன்... அதிலை என்னடா மச்சான் தப்பு?''

இத்தனை ஆண்டுகளாக, இருபத்தெட்டு வருடங்களாக திருவிழா என் கனவாகிப்போனமைக்கு மேற்சொன்ன காரணங்களைவிட மனக்கிளர்ச்சிமிக்க இன்னொரு காரணமும் உண்டு.

*1983*ஆம் ஆண்டு, நண்பர்கள் ஒவ்வொருவரும் திக்கொன்றாய் தத்தம் துறைகளில் காலூன்றிய காலம் அது.

''இந்தமுறை திருவிழாவுக்கு ஒண்டா எல்லாரும் ஊரிலை சந்திக்க வேணும்.'' வெள்ளவத்தை நெல்சன் பிளேசில் கட்டை ரவி தங்கியிருந்த 'கராஜி'ல் வைத்து, ஒரு ஞாயிறு மாலைப் பொழுதில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. மொறட்டுவவில் படித்த கந்தவேளின் விருப்பத்துக்கிணங்க, பேராதனையில் படித்த விக்கிக்கும் அஞ்சல் அட்டை அனுப்பப்பட்டது. அதன்பிரகாரம், கொடியேற்றத்திலன்றே நண்பர்களுள் பெரும்பாலானோர் ஊரில் கூடிவிட்டோம். எப்படியோ தகவல் அறிந்து, மட்டக்களப்பில் படிப்பித்துக்கொண்டிருந்த தவராசனும் பத்து நாள் லீவைப்போடுவிட்டு பறந்துவந்து சேர்ந்தான்.

கொடியேற்றத்தன்று இரவு மையல் பொழுதில் கோவிலின் வடகிழக்கே அமைந்த அந்தியேட்டி மடத்தடியில், வரவேற்பறையைப் பழிக்குமாப்போல் நிலத்தில் அடுக்கப்பட்டிருக்கும் கற்றூண் இருக்கையில், நண்பர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினோம். தங்கள்தங்கள் தொழில் அனுபவங்களை, புதிதாகச் சந்தித்த மனிதர்களின் பழக்கவழக்கங்களை, பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த 'றாகிங்' அனுபவங்களை... ஆளுக்காள் பரிமாறிக்கொண்டிருந்தோம்.

அப்போதுதான் இடைமறித்தவாறே உச்சஸ்தாயியில் யோகலிங்கம் அதைச் சொன்னான். என்னைப்போலவே அவனும் 'சார்டெட்' படித்தவாறே கொம்பனி ஒன்றில் 'எக்கவுண்ஸ் கிளார்க்' காக வேலைபார்த்துக்கொண்

டிருந்தான். "எல்லாரும் வந்து நிற்கிறம்; ஒரு பார்ட்டி போட்டால் என்ன?''

"நல்ல ஐடியா மச்சான்.'' கண்களில் மகிழ்ச்சி மின்ன, சிவகுமார் அதை ஆமோதித்தான். எங்களூர் பள்ளிக்கூடத்தில் அப்போதுதான் பயிலுநர் ஆசிரிய நியமனம் பெற்றிருந்த இதே கிளைப்பனையடி சிவகுமார்தான் அவன். எங்களுடன் இன்னுமொரு சிவகுமார் படித்ததால் இவன் 'கிளைப்பனையடி சிவகுமார்' என அழைக்கப்படலாயினான்.

"இது திருவிழா சீசன். அதோடை, நாங்களெல்லாரும் திருவிழாவுக்காகத்தான் இங்கை வந்து நிற்கிறம். பார்ட்டி வைக்கிறது நல்லாயில்லை.''

'அபச்சாரம், அபச்சாரம்' என்பது போல், அடக்க ஒடுக்கத்துடன் கந்தவேள் சொன்னான். இடையே, கோயிலடியைத் திரும்பிப் பார்த்து, வெகுளித்தனமாக கன்னத்திலும் போட்டுக் கொண்டான்.

ஒருசிலர் எதிர்த்தாலும், பெரும்பாலானோரின் விருப்பத்துக்கிணங்க பார்ட்டி வைப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"ஊரிலை கொடியேறினதாலை தூர இடத்திலை எங்கையாலும் பார்ட்டியை ஒழுங்குசெய்வம்.'' தவராசன் சகலருக்கும் அமைவானதாக ஓர் ஆலோசனையை முன்வைத்தான்.

பார்ட்டியை எதிர்த்துநின்ற கந்தவேள், குணட்டி போன்றோரும் 'பன்ராஸ்ரிக் ஐடியா' என தவராசனின் ஆலோசனைகளுக்கு கைலாகு கொடுத்து உடன்பட்டனர்.

கிழக்கூரில் ஐந்தாங் கட்டையடியில் விக்கியின் அக்காவீடு பார்ட்டிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. அவனது அக்காவும் குடும்பத்தாரும் திருவிழாவுக்கென எங்களூருக்கு வந்திருப்பதால், வெறும் வீடாக இருந்ததில் அது எமக்கு வசதியாகப்போயிற்று.

மூன்றாம் திருவிழாவிலன்று பார்ட்டி வைப்பதாக முடிவானது. பார்ட்டிக்கு தேவையான பொருள்களை ஒவ்வொருவரும் தாங்களாகப் பொறுப்பேற்றுக்கொண்டனர். தான் இரண்டு பெரிய 'கானி'ல் பனங்கள்ளு கொண்டுவருவதாக வடலித்திடல் ராசன் முந்திக்கொண்டான். அவனது தகப்பன் சூரன் சீவல் தொழில் செய்வதால் அது அவனுக்கு சுலபமாயிற்று. கல்லோயாச் சாராயம் கொண்டுவரும் பொறுப்பு தவராசனுக்கு உரித்தாயிற்று. மூன்று கோழிகள் தான் தருவதாக விக்கி சொன்னான். தகப்பனாரின் பண்ணையிலிருந்து அதைத் திருடிக் கொண்டுவந்தானா அல்லது கேட்டு, வேண்டிவந்தானா என்பது எமக்கு அப்பாற்பட்ட விடயம். தட்டை வடையும், மிக்சர் பக்கெட்டும், கறி சமைக்க மிளகாய்த்தூளும் என் பங்களிப்பாக அமைந்தது. இப்படியாக, அத்தனை பேருக்கும் பொறுப்புக்கள் பகிரப்பட்டன.

மூன்றாம் நாள் அதிகாலையிலேயே பத்துப்பேரும் ஐந்தாங் கட்டைக்கு புறப்பட்டுவிட்டோம். எத்தனை சைக்கிளில் சென்றோம் என்பது நினைவில் இல்லாவிட்டாலும், என்னுடன் குணட்டி 'டபிள்பெடல்' போட்டு வந்ததுமட்டும் நன்றாக ஞாபகத்தில் உள்ளது. ஆனைவிழுந்தான் சுடலை கழிந்ததும் அடிக்குரல் எடுத்து காத்தான் கூத்துப் பாடல்களை பாட ஆரம்பித்த கட்டை ரவி, ஐந்தாங் கட்டைச் சந்தி வந்தபின்புதான் அமைதியானான். கட்டை ரவியின் பாட்டுக்கு இடையிடையே ராசன் தனது வாயால் உடுக்கடித்து, சுருதி சேர்த்துவந்தான்.

ஐந்தாம் கட்டைச் சந்தியில் நாவற்காட்டுப் பக்கமாக விக்கியின் அக்கா வீடு இருந்தது. சந்தியால் கிழக்கே திரும்பி கடற்கரைக்குச் செல்லும் மக்கிப் பாதையில் கால்கட்டை தூரமளவில் சைக்கிள் ஓடவேண்டியிருந்தது. வீதியின் இரு பக்கமும் நொச்சி மரங்கள் நெருக்கிக்கொண்டும் மணம் வீசிக்கொண்டும் நின்றன.

மக்கிப் பாதை மறைய, குண்டும் குழியும் நிறைந்த வண்டில் பாதை விரிந்து சென்றது. அப் பாதையில் மூன்று வளவுகள் தாண்டிச் செல்ல, பாதையை மறைக்குமாப்போல் தேமா மரம் ஒன்று குடைவிரித்து நின்றது. அதன் பின்னால், காற்றில் ஒலி எழுப்பியவாறே ஒரு தகரக் கடை தென்பட்டது. அதனை முகப்பாகக்கொண்டு 'குவார்டேர்சை' பழிக்குமாப்போல் ஒரு வீடு அமைந்திருந்தது, 'ஆனந்த நிகேதனம்' என சுவரில் அழகாக எழுதப்பட்டவாறே...

தகரக் கடையின் வெளிவிறாந்தையில் குறுக்காகப் போடப்பட்ட வாங்கியில் அமர்ந்திருந்தவாறே 'சிவனே' என பீடி புகைத்துக்கொண்டிருந்தார் ஒருவர். அசப்பில் பார்த்தால், எம். ஜி. ஆர். படங்களில் வரும் எஸ். ஏ. அசோகன் போல இருந்தார். கள்ளுக் 'கான்'கள், உயிர்க் கோழிகள் மற்றும் பெரும் பொதிகள் சகிதம் குழுமமாகச்சென்ற எம்மைக்கண்டு அவர் சற்று அதிர்ந்துதான் போனார்.

விக்கி விடயத்தை எடுத்துக்கூறிய பின்னர், 'ஓ, அதுவே சங்கதி?' என சாதாரண நிலைக்கு திரும்பினார். அத்தோடு நின்றுவிடாது, கள்ளுக் கான்களை 'கரியரி'லிருந்து இறக்குவதற்கும், பொதிகளை வீட்டினுள் எடுத்துச் செல்வதற்கும் ஒத்தாசை செய்தார். அவரது தும்புக்கட்டைபோன்ற மீசை நன்றாக வெளுத்திருந்தது. அதிலிருந்து குப்பென வீசிய பீடி நெடி வயிற்றைக் குமட்டவைத்தது. நடக்கும்போது தொடையில் கட்டுவந்து உடைத்த வலியில் நடப்பவரைப்போல், தாண்டித்தாண்டி நடந்தார்.

வீடு வலு விசாலமாக இருந்தது. பெரிய ஹோல்; இரண்டு அறைகள்; சமையலறையோடு ஒட்டியபடி, கோவில் வசந்த மண்டபத்துக்கு அருகே இருப்பதையொத்த சிறிய கிணறு.

"தம்பிமார்... நான் கடையிலை நிற்கவேணும், போப்போறன்... என்ன உதவி தேவையெண்டாலும் தயங்காமல் வந்து கேளுங்கோடியவை.'' தனது தொந்தியைத் தடவியவாறே தகரக்கடைக்காரர் கூறினார். அவரது பார்வை கள்ளுக் கானிலேயே இருந்தது.

"அண்ணை, உங்கடை கடையிலை சிகரட் எடுக்கலாமோ?'' சங்கோசமேதுமின்றி கட்டை ரவி கேட்டான்.

"நல்ல காலமடி... நேற்றுத்தான் ஒரு பண்டில் வேண்டிவைச்சனான். எத்தினை பெட்டியடி தேவை?''

"இப்போதைக்கு மூண்டு பக்கேட் தாங்கோண்ணை. பிறகு பார்த்து எடுப்பம்.''

சிகரெட்டுக்கான பணத்தினைப் பெற்றுக்கொண்டு அவர் சென்றதும் அன்றைய நிகழ்ச்சிநிரலை கட்டை ரவி முன்வைத்தான். அதில் முக்கிய சில நிபந்தனைகள் அவனால் அடிக்கோடிட்டு காட்டப்பட்டன. முதலாவது, கோழியை அறுத்து சமையல் செய்யுமட்டிலும் கள்ளுக்'கான்' பக்கமோ அல்லது சாராயப் போத்தலடிக்கோ எவரும் போகக்கூடாது. இரண்டாவது, மூக்குமுட்டக் குடித்து எவரும் 'டவுண்' ஆகிவிடக்கூடாது. மூன்றாவது, மிக முக்கியமானது; வெறி ஏறிய பின் எவரும் 'கெட்ட' வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது. இறுதியாக, வாந்தி எடுப்பதோ அல்லது போதை ஏறியவர்களுக்கு தேசிக்காய்வைத்து தோய வார்ப்பதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

எல்லோரும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாக ஆமோதித்தார்கள்.

கொண்டுவந்த இரண்டு 'கான்'களையும் சாராயப் போத்தல்களையும் ஹோல்மூலையில் ராசன் அடுக்கிவைத்தபோது, எங்கோ நின்ற விக்கி ஓடிவந்து அவற்றினை விழுந்து கும்பிட்டான்.

முதல் பக்கெட் சிகரெட் சகலருக்கும் பரிமாறப்பட்டது. கந்தவேள் மட்டும் தனக்கு இருமல்வரும் என்றுகூறி, திரும்பவும் கட்டை ரவியிடமே பக்குவமாக அதை ஒப்படைத்துவிட்டான். அதை வாங்கி தனது காதில் சொருகிவிட்டு, புகை தள்ளியவாறே கட்டை ரவி கோழிகளைத் தூக்க இடம் தேடிக்கொண்டிருந்தான்.

பிற்பகல் நான்கு மணிவரை குழப்பம் இல்லாது, நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே பார்ட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது. கள்ளையும் சாராயத்தையும் கலந்தடித்ததில் வயிற்றைக் குமட்டி நடு ஹோலில் யோகலிங்கம் வாந்தியெடுத்ததிலிருந்தே 'மீறல்கள்' ஆரம்பமாயின. ஹோலை கழுவும்போது கிளர்ந்த நெடியை நுகர்ந்தபோது, கட்டை ரவிக்கு வாயில் வந்த 'கெட்ட' வார்த்தைகளை அடக்கமுடியாமல்போயிற்று.

எல்லைமீறிப்போவோரை கந்தவேளும் நானுமாகக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தோம். தகரக்கடைக்காரரும் உதவிக்கு வந்தார். ஆறு, ஆறரை மணியளவில் எனக்கும் தலை சுற்றுமாப்போல் இருந்தது. பின்னர் நடந்தவற்றை...

இரவு பத்து மணியளவில் பார்ட்டி உச்சக் கட்டத்தை அடைந்ததாகவும் கட்டை ரவி நிறை வெறியில் கழுமரம் ஏறுவதாக் கூறிச்சென்று தோமா மரத்தில் ஏறி விழுந்ததாகவும் மறுநாள் காலை தகரக்கடைக்காரர் சொல்ல அறிந்துகொண்டோம்.

அன்றைய பார்ட்டியின் ஆட்டநாயகனாக குணட்டியே தெரிவுசெய்யப்பட்டதாகவும் அவனைக் கட்டுப்படுத்தமுடியாது தகரக்கடைக்காரர் கடையை இழுத்து மூடிவிட்டுவந்து, காவடிக்கு செடில் பிடிப்பவரைப்போல குணட்டிக்குப் பின்னால் அவனைப் பிடித்துக்கொண்டு திரிந்ததாகவும், இறுதியில் தலையில் தேசிக்காய் வைத்து நடுநிசியில் தோயவார்த்த பின்பே அவன் அடங்கியதாகவும் பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

இனி, கோயில் தீர்த்தம் முடியுமட்டிலும் கோயிலோடையே திரிவதாக அவ்விடத்திலேயே சகலரும் சங்கற்பம் செய்துகொண்டோம்.

எங்கள் காலங்களில் பூங்காவனத் திருவிழா ஆறாம் நாளிலும், வைரவர் மடை தீர்த்தத்துக்கு மறுநாளும் நிகழும். பின் நாள்களில், பூங்காவனத் திருவிழா தீர்த்தத்துக்கு மறுநாளுக்கு மாற்றப்பட்டதாக கொழும்புக்கு வரும் நண்பர்கள் கூறக்கேள்விப்பட்டிருக்கிறேன்.

பத்து நாள் திருவிழாக்களுள் பூங்காவனத் திருவிழாவிலன்றும் எட்டாம் நாள் வரும் சப்பரத் திருவிழாவிலன்றுமே இரவு நிகழ்ச்சிகள் களைகட்டும்.

பூங்காவனத் திருவிழாவை 'பொடியளின்ரை திருவிழா' என்றுதான் எங்களூரில் சொல்லுவார்கள். முதல் வருடம் 'அட்வான்ஸ் லெவல்' பரீட்சை எழுதிய 'ஊர்ப் பொடியளே' நடப்பாண்டுத் திருவிழாவை பொறுப்பேற்றுச் செய்வர். ஊர் முழுக்க வீடுவீடாகச்சென்று பணம் சேர்த்து, திருவிழாவுக்குச் செலவுசெய்யவேண்டும். அந்த இளைஞர்கள் கூட்டம்கூடி, திருவிழாவில் தங்கள் பிரதிநிதியாக அன்று தெற்பை அணிவதற்கு ஒருவரை ஏகமனதாக தெரிவுசெய்வார்கள். அந்தவகையில்... அந்த வருடம் தெற்பை அணியுமாறு விழாக்குழு இளைஞர்கள் ஏகமனதாக குணட்டியைக் கேட்டுக்கொண்டார்கள்.

குணட்டிக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தால் எமக்கும் அன்று முழுவதும் கோவிலில் ராஜமரியாதை. மேளசெட்டிற்கும் பாட்டுக் கோஷ்டிக்கும் தயாரிக்கப்பட்ட விதவிதமான பலகார வகைகள் எமக்கும் மூன்று வேளையும் குருக்களின் வாசஸ்தலத்தில்வைத்துப் பரிமாறப்பட்டன. தவிரவும், வேளா வேளைக்கு கொழும்புச்சோடா, உளுந்துவடை என, சிற்றுண்டி வகையறாக்கள் வேறு.

அன்று பூங்காவனம் என்பதால் பெரிய பந்தல் போட்டு, இரண்டு சிகரங்கள் கட்டி, கோயில் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரவு ஆலடி நல்லையாவின் லைற் எஞ்சினுடன், போதாததற்கு நெடியகாட்டிலிருந்து மேலும் ஒரு லைற் எஞ்சினையும் வரவழைத்திருந்தார்கள். தெற்கே, மாவில் வயலிலிருந்து வடக்கே பள்ளிக்கூட முடக்குமட்டும் மின்விளக்குகள் ஜகஜோதியாக எரிந்துகொண்டிருந்தன.

இரவு, அளவெட்டி மற்றும் நாச்சிமார்கோவிலடியிலிருந்து வரவழைக்கப்பட்ட பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் கச்சேரி. அது முடிந்ததும், கலாவிநோதன் சின்னமணியின் வில்லுப்பாட்டு. அதன் பின்னர், ஈழநல்லூர் அருணா இசைக்குழுவினரின் பாட்டுக்கச்சேரி. மேடையில் எமது 'செட்' வெள்ளை வேட்டி சால்வையுடனும் வெறும் மேலுடனும் கம்பீரமாக காட்சியளித்தது. கட்டை ரவி, கைவிரலில் தெற்பை அணிந்தபடி உபயகாரன் என்னும் அந்தஸ்துடன் குணட்டி, அருகே நான் என, உயரத்தின் ஏறுவரிசைப்படி அனைவரும் அணிவகுத்து நின்றோம்.

நின்று பார்க்கும்போது கொன்றை மரத்தடியில் நெருக்கிக்கொண்டிருந்த இளம் பெண்கள் பகுதி, தூண்கள் எதுவும் மறைக்காது, எமக்குச் சரியாக நேரில் இருந்தது பெரும் வசதியாகப் போய்விட்டது. பிறகென்ன, பாட்டுக் கோஷ்டி பாடிய பாடல் ஒவ்வொன்றிலும் புதுப்புது அர்த்தங்கள் தெரிந்தன.

அன்று பாட்டுக் கோஷ்டி பாடிய பாடல்களுடன் எனக்கு இன்னமும் நன்றாக ஞாபகத்தில் இருக்கும் பாட்டு, "கவிதை அரங்கேறும் நேரம்...'' அப்பாடலின்போது நாங்கள் ஒவ்வொருவரும் பாக்கியராஜாக்களாக மாறி, முன்னால் வீற்றிருந்த ஒவ்வொரு அம்பிகாக்களுடனும் விண்ணில் பறந்துகொண்டிருந்தோம். அத்தகு ஏகாந்தவேளை, அதன்பின்னர் எம் வாழ்வில் அமைந்ததாக நினைவில் இல்லை.

பத்து நாள்கள் திருவிழாவும் முடிந்து, அவரவர் தத்தம் பணிகளுக்குத் திரும்பினோம். இனிய நினைவுகளுடன் சரியாக மாதம் ஒன்று கழிந்தது. ஆடி இருபத்தைந்து, ஒரு திங்கள் அதிகாலைப் பொழுதில் நாடு பூராவும் இனக்கலவரம் வெடித்தது. அருந்தப்புத் தப்பி, வெள்ளவத்தை பிள்ளையார் கோவிலில் அகதியாகத் தஞ்சம்புகுந்து பத்து நாட்களின்பின் கப்பலில் பயணித்து காங்கேசன்துறையில் காலடி வைத்தபோதுதான் அந்தப் பேரதிர்ச்சி காத்திருந்தது.

கொழும்பிலிருந்து இன்னொரு கப்பலில் வந்திருந்த யோகலிங்கம்தான், தயங்கித்தயங்கி அதைச் சொன்னான்.

கந்தவேள், குணட்டி, தவராசன் மூவரையும்...

மட்டக்களப்பிலிருந்து தவராசா கல்வித்திணைக்கள அலுவலாக கொழும்பு வந்திருக்கிறான். ஓரிருநாள் தங்குவதற்காக கந்தவேளும் குணட்டியும் ஒன்றாகத் தங்கியிருந்த தெஹிவளை 'றூமு'க்குச் சென்றிருக்கிறான். அன்றிரவுதான் கலவரம் வெடித்திருக்கிறது. முதல் ஐந்து நாட்களும் உயிரைக் கையில் பிடித்தவாறே மூவரும் அறைக்குள்ளேயே முடங்கிப்போய் இருந்து

விட்டு, வெள்ளிக்கிழமை அதிகாலை வெளிக்கிட்டு வெள்ளவத்தை அகதி முகாமைநோக்கி மூவரும் வந்திருக்கி றார்கள்.

இரு பஸ்தரிப்புகளைத் தாண்டியி ருக்கமாட்டார்கள்; கழுத்தை ஜன்ன லுக்கு வெளியே நீட்டிநீட்டி, கண்க ளில் மிரட்சியுடன் அசாதாரண தோற் றத்துடன் பயணித்த மூவரையும் இனங் கண்ட காடையர்கள் பஸ்ஸிலிருந்து அவர்களை இறக்கி இழுத்துவந்து, சேர்ச்சுக்கு முன்னால்வைத்து அடித்து உதைத்து, அருகில் எரிந்துகொண்டி ருந்த டயருக்குள் உயிருடன் தூக்கிப் போட்டனராம். அக்காட்சியைக் கண்ட சிலர் வந்து, தமது முகாமில் தக வல் தந்ததாக யோகலிங்கம் சொன்ன போது...

உரோமக் கையும் காலும் குத்திட, ஒருகணம் முழு உடலிலும் குருதி உறைந்தது எனக்கு.

“பிள்ளையாரே... இதென்னப்பா சோதனை?'' உணர்ச்சிமேலிட உடைந்த குரலில் என்னருகே நின்ற கட்டை ரவி சத்தமாகக் கத்தினான்.

“என்னடாப்பா கனக்க ‘பீல்’ பண் ணிக்கொண்டிருக்கிறாய்? வீட்டு நினைவு வந்திட்டுதோ?'' சிவகுமாரின் குரல் என்னை நினைவுகளிலிருந்து மீட்டது.

“இல்லையடாப்பா... இந்தக் கற் றூண் இருக்கை... கோயில் சூழல் என்னை இருபத்தெட்டு வருடங்கள் பின்னோக்கி இழுத்திட்டுது... எங் கடை....''

“பிரண்ட்சைப்பற்றி கந்தவேள், குணட்டி, ஆக்களைப்பற்றி நினைச்சு பீல் பண்ணுறாய் போலகிடக்கு.''

“தவராசனை மறந்திட்டாயடா...''

“அதுக்குப்பிறகு இயக்கத்திலை சேர்ந்து மாவீரனான தடியனை விட் டுட்டாயே...''

“உண்மையிலை சிவா, நான் இங்கை வெளிக்கிட்டு வாறதுக்கு முதல் நாள் இராத்திரி கனவிலைகூட....'' வார்த்தைகள் வெளிவராது குரல் கம் மிற்று.

பின்னால் தீர்த்த மடத்தடியிலிருந்து சனங்கள் பரபரத்தபடி அன்னதான மடத்தை நோக்கி ஓடிவருவது தெரிந் தது.

“முதல் பந்தி வைக்கப்போறாங்கள்... இதிலை போயிருந்து சாப்பிடுவமா?'' கேட்டவாறே சிவகுமார் என்னை உற் றுப் பார்த்தான்.

“இப்ப... பெரிசா பசியில்லை மச் சான்... சாப்பாட்டுக்கு மனமுமில்லை.''

“முதல் பந்தியிலை சாப்பிட்டுட்டு கெதியிலை வீட்டுக்கு போனமெண் டால் கொஞ்சநேரம் ‘றெஸ்ற்’ எடுத் திட்டு பின்னேரப்பாட்டுக்கு ரவுணுக்கு போயிட்டு வரலாம்'' என்றான் சிவா.

“ஓகே, உன்ரை விருப்பம்'' என்று நானும் கூறவே, அன்னதான மடத்தை நோக்கி சிவா சென்றான். அவனைத் தொடர்ந்து பின்னால் நான் செல்கி றேன்.

பந்தியில் அருகருகே இருவரும் அமர்ந்துகொண்டோம்.

பூங்கொல்லைக் கிணறு எதிரில் தெரிந்தது. கிணற்றுக்கு அருகே பூஞ் சோலை எல்லை மதிலோடு ஒத்தாப்பு இறக்கி அதில் அவியல் நடந்துகொண் டிருந்தது. மூன்று அடுப்பு மூண்டு கொண்டிருந்தது. அருகே, மற்றுமோர் அடுப்பு அணைந்து நீறுபூத்துக்கிடந் தது.

யுத்தகாலத்தில் தான்பட்ட கஷ்டங் களை சிவகுமார் சொல்லிக்கொண்டி ருந்தான். பரந்தன் பாடசாலையொன் றில் தான் அதிபராகவிருந்தபொழுது யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்ததாக வும், உயிரைக் காப்பாற்ற தானும் தனது மனைவியும் ஒரே மகளும் அடைந்த அவலங்களை ஒன்றுமேவிடாது ஒப்பு வித்துக்கொண்டிருந்தான். புதுமாத்த ளனில் இருந்த காலகட்டத்தில் குடிநீ ரின்றி பட்ட துயரம், கண்முன்னா லேயே பல உயிர்கள் பறிக்கப்பட்ட பேரவலங்கள் மத்தியில்... ஷெல் அடி, விமானக் குண்டுத் தாக்குதல்கள் எல்லா வற்றிலும் அருந்தப்பாய்த் தப்பி, தாம் ஊர்வந்து சேர்வதற்கு ‘உண்மையிலை எங்கடை பிள்ளையாற்ரை அருள் தான் காரணம்’ என்றும் சொல்லி முடித்தான்.

அன்னதான மடத்தில் சில இளை ஞர்கள் உற்சாகமாக இயங்கிக்கொண் டிருந்தார்கள்.

‘கௌம்பீட்டம்ல’ என்றுகூறும் வடிவேலுவின் சாயலில், முதன்முத லாய் தோன்றிய இளைஞன் பந்திக்கு வாழை இலைகளை வைக்க, தொடர்ந் துவந்த இரண்டு இளைஞர்கள் ஆவி பறக்கும் சோற்றினை ஓலைப் பெட்டி யில் காவிவந்து இலைகளில் வைத்துச் சென்றனர்.

பருப்பு வாளியுடனும் பெரிய தொந் தியுடனும் வெளிப்பட்டான் மற்று மோர் இளைஞன். சோற்றின் மத்தியில் பருப்பினை ஊற்றிவந்த அவனைக் காட்டியவாறே சிவகுமார் என்னைக் கேட்டான்; “உந்தப் பெடிப்பயல் ஆரெண்டு தெரியுதோ?''

முப்பது வருடங்களாக ஊரை விட்டு அந்நியப்பட்டு, பிறந்து வளர்ந்த இடத்திலேயே வாக்குப் பதிவின்றி இருக்கும் என்னிடம்போய்... இருபத்தி ரண்டு வயதுப் பொடியனை இனங் காட்டச் சொன்னால்...?

“எங்கையோ பார்த்த முகச்சாயல்... ஆனால், ஆள் ஆரெண்டு தெரி யேல்லை...''

“இவர்தான் ராசன்ரை வால்...''

“ராசனெண்டு...''

“என்னடா, மறந்துபோனியே? எங் களோடை படிச்ச சூரன்ரை மேன்...''

“அதுதானே பார்த்தேன், அறிஞ்ச முகச்சாயலாய்க் கிடந்துது... எட தேப் பனைப்போல பொடியனுக்கும் நல்ல தேகக்கட்டு... அதுசரி, இப்ப ராசன் என்ன செய்யிறான்?''

“அவன்தான் இப்ப எங்கட கல்வி வலயத்திலை விஞ்ஞான பாடத்துக்கு உதவிப் பணிப்பாளராக இருக்கிறான்.''

“எட, அவனும் எங்களைப்போல நல்ல நிலைக்கு வந்திட்டான். கேக்க சந் தோஷமாக இருக்கு.''

“உனக்கொரு விஷயம் தெரியுமே?''

‘என்ன...?''

“உவர் பொடிப்பயல்... இந்த முறை எங்கடை பூங்காவனத் திருவிழாவுக்கு தான்தான் தெற்பை போடவேணு மெண்டு ஒற்றைக் காலிலை நிற்கிறா ராம்...''

“ஏன் சிவா, அதிலை என்ன பிரச் சினை? அவனும் எங்கடை ஊர்ப் பெடியன்தானே...''

“என்னடாப்பா, என்ன கதைக்கிற னெண்டு நீ அறிஞ்சுதான் கதைக்கி றியோ...''

“நல்லா அறிஞ்சுதான் கேட்கிறன்... அதிலை என்னடா மச்சான் தப்பு?''

“தப்பு அவையளிலை இல்லைய டாப்பா. அது, நாங்கள் குடுத்த...'' மேற் கொண்டு சிவகுமார் கூறுவதை என் னால் கிரகிக்கமுடியவில்லை.

இலைகளில் சோறும் கறிகளும் பரி மாறப்பட்டிருந்தது. இளைஞர்கள் யாவரும் வலு உற்சாகமாகவே இயங் கிக்கொண்டிருந்தார்கள். சாப்பிடுவ தற்கு சகலரும் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால்...?

எனது பார்வை தற்செயலாக தற் போது பூங்கொல்லைப் பக்கமாக பதி கிறது.

அணைந்து நீறுபூத்தாப்போல் கிடந்த நான்காவது அடுப்பிலிருந்து, நெருப்பு இப்போது சுவாலைவிட்டு எரிந்துகொண்டிருந்தது. ■


Kumaran Silks
since 1955
PANAGAL PARK, CHENNAI - 17
TAMILNADU, INDIA.
CUSTOMER CARE
(044) 4222 0077
2,Nageswaran Road,Panagal Park,T.Nagar,Chennai-17.Ph:(044)-24343544 / 3727 / 375

# வெற்றிக் கோட்டைத் தாண்டிய பந்து ஒரு சாதனைக் கோட்டையும் தாண்டியது

## டெஸ்ட் போட்டிகளில் இந்தியா மீண்டும் எழுச்சிகொள்ளுமா?

அரவிந்தன்

ஆட்டம் முடிவதற்கு இன்னும் 15 பந்துகள் இருக்கும் நிலையில், மகேந்திர சிங் தோனி அடித்த பந்து எல்லைக் கோட்டைத் தாண்டியபோது இந்தியா வெற்றிக் கோட்டைத் தொட்டதுடன், இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முக்கியமானதொரு எல்லையையும் அது கடந்தது. மூன்று டெஸ்ட் போட்டிகளை அடுத்தடுத்து வென்றமை இந்தியாவைப் பொறுத்தவரை மகத்தானதொரு சாதனை. இதற்கு முன்னர் இரண்டு முறைகள் மட்டுமே இப்படிப்பட்ட வெற்றி இந்தியாவுக்கு சாத்தியமாகியிருக்கிறது.

ஆனால், இந்த வெற்றியைவைத்து, இந்திய கிரிக்கெட்டின் நிலைமையைக் கொண்டாட முடியாது. அண்மையில் இந்திய சுற்றுப்பயணம் செய்த இங்கிலாந்து அணியிடம் படுமோசமாக தோல்வியடைந்த இந்தியா, சுதாகரித்துக்கொண்டு எழுவதன் அடையாளமாக மட்டுமே இதனைப் பார்க்கமுடியும். இங்கிலாந்து அணி மிக வலுவானது என்றாலும், உள்ளூரில் அந்த அணி இந்தியாவை 3-1 என்னும் கணக்கில் தோற்கடிக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அதிலும், இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் தோனியின் விருப்பப்படியே சுழல் பந்துக்கு சாதகமான ஆடுகளங்கள் தயாரிக்கப்பட்டநிலையிலும் இந்தியா தோல்வியைச் சந்தித்தது. இந்திய அணியில் மூன்று சுழல் பந்து வீச்சாளர்கள் இருந்தும் இந்தத் தோல்வி. துடுப்பாட்டக்காரர்களின் சறுக்கல், சுழல் பந்து வீச்சாளர்களின் இயலாமை, தலைமையின் வியூக ரீதியிலான தவறுகள் என, பல காரணங்களால் இந்தியா போராட்டமே இல்லாமல் பணிந்தது. முதல் போட்டியில் தோற்ற இங்கிலாந்தோ அதன் பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு, மிகவும் கவனத்துடனும் உறுதியுடனும் ஆடி, அடுத்த மூன்று போட்டிகளையும் வென்றது.

இந்தத் தோல்வி ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பை அவுஸ்திரேலியாவுடனான தொடர் தந்தது. கௌதம் காம்பீரை நீக்கியமைபோன்ற துணிச்சலான மாற்றங்களுடன் தொடரை எதிர்கொண்ட இந்தியா, தொடக்கத்திலிருந்தே புதிய வேகத்துடன் ஆடியது. சுழல் பந்து வீச்சாளர்களின் அணுகுமுறையில் மாற்றம் தெரிந்தது. குறிப்பாக, ரவிச்சந்திரன் அஸ்வின் இங்கிலாந்து தொடரில் வீசியதைவிடவும் சிறப்பாக வீசினார். அவரது உழைப்புக்கு பலன் கிடைத்தது. சென்னை டெஸ்டில் முதல் ஆறு விக்கெட்டுகளையும் அவரே வீழ்த்தினார். இந்தியா துடுப்பாட ஆரம்பித்ததும் தொடக்க ஆட்டக்காரர்கள் முரளி விஜயும், வீரேந்திர சேவாக்கும் விரைவில் ஆட்டமிழந்தார்கள். ஆனால், சச்சின் ரெண்டுல்கரும் சதீஷ்வர் புஜாராவும் இன்னிங்ஸை நிலைப்படுத்தினார்கள். அடுத்து, விராட் கோஹ்லி, பின்னர் புவனேஸ்வர்குமார் ஆகியோரின் துணையுடன் இரட்டைச் சதங்கள் எடுத்த தோனி, இந்தியாவை வெற்றிக்கு அணித்தாக கொண்டுபோய் நிறுத்தினார். மீதி சம்பிரதாயங்களை பந்துவீச்சாளர்கள் பார்த்துக்கொண்டார்கள்.

வெற்றி கிடைத்தது மட்டுமன்றி, அசாத்தியமான ஆதிக்கத்துடன் அந்த வெற்றி கிடைத்தமை இந்தியாவின் மன உறுதியை வெளிப்படுத்தியது. ஹைதராபாத்தில் அவுஸ்திரேலியா மேலும் மோசமாக ஆடியது. வேகப் பந்துவீச்சாளர் குமார் மூன்று விக்கெட்டுகள் எடுத்து ஆஸி. யின் சரிவைத் தொடக்கிவைத்தார். 237 ஓட்டத்துக்கு ஆஸி. அணி ஆட்டமிழந்தது. இந்தியா களம் இறங்கியதும் சேவாக் விரைவிலேயே ஆட்டமிழந்தார். ஆனால், விஜயும் புஜாராவும் மறுநாள் முழுவதும் ஆட்டமிழக்காமல் ஆடி, அவுஸ்திரேலியாவின் வெற்றிவாய்ப்புக்கு குழிதோண்டினார்கள். புஜாரா இரட்டைச் சதம் எடுத்தார் (204). விஜய் 167 ஓட்டங்கள் எடுத்தார். அணியின் ஓட்டங்கள் 503. ஆஸி. இரண்டாவது இன்னிங்ஸில் 131 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமை இந்திய துடுப்பாட்டக்காரர்களுக்கு ஓய்வு கொடுத்தது. சென்னையில் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்த ஆஸி. யால் ஹைதராபாத்தில் தவிர்க்க முடியவில்லை. காரணம், முதல் இன்னிங்ஸின் மோசமான ஆட்டமே.

ஹைதராபாத் வெற்றியின்மூலம் இந்தியா இந்த தொடரை இழக்க வாய்ப்பில்லை என்பது உறுதியாயிற்று. அதிகபட்ச வெற்றியைப்பெற்ற கப்டன் என்ற பெருமையையும் இந்த வெற்றி தோனிக்குப் பெற்றுத்தந்தது.

மூன்றாவது டெஸ்ட் மொஹாலியில் தொடங்குவதற்கு முன்னர் அனை

வரும் எதிர்பார்திருந்த அறிவிப்பு வந்தது. சேவாக் அணியிலிருந்து நீக்கப்பட்டார். கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவின் பல வெற்றிகளுக்கு அடித்தளமாக விளங்கிய காம்பீர் - சேவாக் ஜோடி இல்லாமல் இந்தியா களம் இறங்கியது. ஆஸி. அணி ஒழுங்கு நடவடிக்கை என்னும் பெயரால், அணியின் துணைத்தலைவர் ஷேன் வாட்ஸன் உள்பட நால்வரை வீட்டுக்கு அனுப்பியது. ஏற்கனவே அடிவாங்கிக் கொண்டிருந்த அணிக்கு இது உளவியல் ரீதியாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

மொஹாலியில் முதல் நாள் ஆட்டத்தை மழை எடுத்துக்கொள்ள, இரண்டாம் நாள் 'டாஸ்டை' வென்று ஆடத்தொடங்கிய ஆஸி. அணி சிறப்பாகவே ஆடியது. மூன்றாம் நாள் முதல் பகுதியின் இறுதிவரை விளையாடிய அணி 408 ஓட்டங்களைக் குவித்தது. இன்னும் மூன்றரை நாள்களில் மூன்று இன்னிங்ஸ் ஆடுவது கடினம் என்பதால், இந்தப் போட்டி வெற்றிதோல்வியின்றி முடியும் என்றே பலரும் நினைத்தார்கள்.



ஆனால், மெலிந்த உடல்வாகும் முறுக்கு மீசையும்கொண்டு களம் இறங்கிய புதுமுக வீரர் ஷிகர் தவன் அந்தக் கணக்கை தவிடுபொடியாக்கினார். தொடக்கத்திலிருந்தே மிகவும் வேகமாக ஆடத்தொடங்கினார். சேவாக்கின் இடத்தில் ஆடும் அவர், சேவாக்கின் வேகத்தை நினைவுபடுத்துவதுபோலவே ஆடி, ஆஸி.யின் பந்துவீச்சாளர்களை நேராக அடித்தார். மறுமுனையில், விஜய் உறுதியோடும் நிதானமாகவும் பந்துகளை எதிர்கொண்டு ஆடினார். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 289 ஓட்டங்கள் சேர்த்தார்கள். தவன் முதல் ஆட்டத்திலேயே மிக வேகமாக சதமடித்த இந்திய வீரர் என்னும் சாதனையைப் படைத்தார். 174 பந்துகளில் 187 ஓட்டங்கள் எடுத்து, அவர் ஆட்டமிழந்தார். அடுத்து களம் இறங்கிய புஜாரா தவறான முறையில் வெளியேற்றப்பட, சச்சினும் விஜயும் இன்னிங்ஸைப் பலப்படுத்தினார்கள். அவர்கள் ஆட்டமிழந்தபின்னர் கோஹ்லி அடித்த அரைச் சதத்தால் இந்தியா 91 ஓங்டங்கள் முன்னிலை பெற்றது. வெற்றிதொல்வியின்றி முடியும் என எதிர்பார்க்கப்பட்ட போட்டி, தவனின் புயல்வேக ஆட்டத்தால் தெளிவான முடிவை நோக்கி பயணிப்பதற்கான அறிகுறி தென்பட்டது.

என்றாலும், நான்காம் நாள் மதியம்

ஆகிவிட்ட நிலையில் ஆஸி. அணியை விரைவில் சுருட்டாவிட்டால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவதை தவிர்க்க முடியாது என்னும் நிலை இருந்தது. ஆஸி. 223 ஓட்டங்களுள் சுருண்டது. கிட்டத்தட்ட 35 ஓவர்களில் 133 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்னும் நிலையில் களம் இறங்கிய இந்தியா சற்றே தடுமாறினாலும் வெற்றி இலக்கைப் பத்திரமாக எட்டி, போட்டியையும் தொடரையும் வென்றது. தொடர்ந்து மூன்று போட்டிகளில் வென்ற சாதனையையும் படைத்தது.

உள்ளூரில் இந்திய அணி சூரப்புலி என்பது தெரிந்ததுதான். துடுப்பாட்டத்துக்கும் சுழல் பந்துக்கும் சாதகமான ஆடுகளங்களில் இந்திய துடுப்பாட்டகாரர்களும் சுழல் பந்து வீச்சாளர்களும் பிரகாசிப்பது வழக்கம். துணைக்கண்டத்து துடுப்பாட்ட வீரர்கள் சுழலுக்கு சாதகமான ஆடுகளங்களுக்கு நன்கு பழகியிருப்பதால் அவர்கள் சுழல் பந்தை தாக்குப்பிடித்து ஆடிவிடுவார்கள். எவ்வளவு திறமையான வேகப்பந்து வீச்சாளர்களாக இருந்தாலும் இந்திய ஆடுகளங்கள் அவர்களுக்கு அதிகம் ஒத்துழைக்காது. எனவே, சுழலுக்கு அதிகம் பழகாத துடுப்பாட்டகாரர்கள் சுழல் பந்தில் பெரிய தேர்ச்சியற்ற சுழல் பந்து வீச்சாளர்கள் ஆகியோருடன் இங்கே வரும் மேற்கத்திய அணிகள் திணறுகின்றன. இத்தனை சாதகம் இருந்தும் இந்தியா 3 - 0 என்னும் கணக்கில் ஒரு தொடரில் முன்னிலை பெற்றது மிக அபூர்வமாகவே நடந்திருக்கிறது. அதனாலேயே அவுஸ்திரேலிய அணியைத் தொடர்ந்து மூன்று போட்டிகளில் வென்றமை இந்திய அணியின் மாபெரும் சாதனைகளில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

1968இல் மன்சூர் அலி கான் பட்டோடியின் தலைமையிலான அணி நியூஸிலாந்துக்கு எதிராக தொடர்ந்து மூன்று டெஸ்ட்களை வென்றது. பின்னர், 1993 - 94இல் முகம்மது அசாருதீன் தலைமையிலான இந்திய அணி இலங்கை அணியைத் தொடர்ந்து மூன்று டெஸ்ட்களில் வென்றது. அதன்பின்னர், இப்போதுதான் அப்படி நடக்கிறது. அவுஸ்திரேலிய அணி 1988-89இல் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் மூன்று போட்டிகளில் தொடர்ந்து தோற்றது. அதன்பின்னர் இப்போதுதான் அது அப்படி தோற்றிருக்கிறது.

இதற்கு முன்னரும் ஆஸி. அணி டெஸ்ட் தொடரில் தோற்றிருக்கிறது. இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளிடம் அவ்வப்போது தோற்றிருக்கிறது. ஆனால், ஆஸி. அணியை எதிரணிகள் முழுமையாக ஆதிக்கம் செலுத்தியதில்லை. கடுமையான போட்டிக்கு பின்னரே எதிரணியால் வெல்லமுடிந்திருக்கிறது. சில சமயம் மயிரிழையில்தான் வெற்றி, தோல்வி முடியவாகியிருக்கிறது. 2001இல் கொல்கத்தாவில் இந்திய அணி வென்றது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிதான். ஆனாலும், அந்தப் போட்டியிலும் இந்தியா போராடித்தான் வென்றது. கடைசி இரண்டு நாள்களில் லட்சுமணன், ராகுல் திராவிடின் அபாரமான ஆட்டமும், ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சும் சேர்ந்து இந்தியா வெல்ல உதவின. அதற்கடுத்து, சென்னை டெஸ்டில் இந்தியா வென்றது. அதிலும் இந்தியா போராடித்தான் வென்றது. அவுஸ்திரேலியா தோற்றாலும் எதிரணியால் அதன்மீது முழுமையான ஆதிக்கம் செலுத்தமுடியாது; வெற்றியைச் சுலபமாக பெற்றுவிடமுடியாது. அதனாலேயே, ஆஸி.யைத் தோற்கடிப்பது அனைத்து அணிகளுக்குமே பெரும் திருப்தியைக் கொடுக்கிறது. ஆனால், இம்முறை இந்தியா நன்றாக ஆடியது என்பதோடு, ஆஸி. மோசமாக ஆடியது என்பதையும் சேர்த்துச் சொல்லவேண்டும். மூன்று போட்டிகளிலும் போட்டி என்பது மிகக் குறைவாகவே இருந்தது.

வலுவான இங்கிலாந்து அணியுடன் மோதியபோது இந்தியா எப்படி போராடமலேயே தோற்றதோ அது போலவே ஆஸி. இப்போது தோற்றிருக்கிறது. அண்மைக் காலங்களில் ஆஸி. பெற்ற மிக மோசமான தோல்வி என்று இதைச் சொல்லலாம். இதனால், அணியில் சில தலைகள் உருளலாம். அடுத்து நடக்கவிருக்கும் 'ஆஷஸ்' தொடரில் இதன் தாக்கம் தெரியலாம்.

இந்தியாவுக்கு இந்த வெற்றி பெரிய ஆசுவாசத்தை கொடுத்திருக்கிறது. இந்தத் தொடரிலும் இந்தியா தோற்றிருந்தால், தோனியின் தலைமையும் அணியில் அவரது இடமும் கேள்விக்குரியதாகியிருக்கும். சேவாக், காம்பீரையடுத்து, மேலும் சில தலைகள் உருண்டிருக்கும். இப்போதைக்கு எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சுவிடலாம். அண்மைக் காலத்தில் சரிவைச் சந்தித்திருக்கும் அணியை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கு இந்த வெற்றி தந்த தெம்பு உதவலாம். வீரர்கள், ஐ. பி. எல்.இல் நிம்மதியாக கவனம் செலுத்தலாம். அடுத்த டெஸ்ட் எட்டு மாதங்களுக்குப் பின்னர்தான் என்பதால் இப்போதைக்கு இந்திய அணிக்கு கவலை இல்லை.

அடுத்த தொடர் தென்னாபிரிக்காவில் நடக்கவிருப்பதால் அணித் தேர்வு சுலபமானதாக இருக்கப்போவதில்லை. இப்போது நீக்கப்பட்டிருக்கும் காம்பீரும் சேவாக்கும் தென்னாபிரிக்காவில் ஆடிய அநுபவம் மிக்கவர்கள் என்பதால், அவர்களைப் பரிசீலிக்காமல் இருக்கமுடியாது. சுழல் பந்து வீச்சாளர்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒப்பேற்றிவிட முடியாது. குறைந்தது நான்கு வேகப்பந்து வீச்சாளர்களாவது தயாராக இருக்கவேண்டும். இப்போதைக்கு குமாரைத்தவிர வேறுயாரும் போட்டிக்கு ஏற்ற உடல் திறனும், ஆட்டத் திறனும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. எட்டு மாதங்களுள் உமேஷ் யாதவின் உடல் திறனும் இஷாந் ஷர்மாவின் ஆட்டத் திறனும் வளருமா என்பது ஒரு கேள்விக்குறி. வெளிநாடுகளில் சிறப்பாக பந்து வீசியிருக்கும் ஜாகீர் கான் இனித் தேறுவாரா, மாட்டாரா என்பது இன்னொரு கேள்விக்குறி. முனாப் படேல், பிரவீண் குமார் ஆகியோருக்கு இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பதற்கான கனவு இருக்கிறதா என்பதே தெரியவில்லை.

ரவீந்திர ஜடேஜா உள்ளூர்ப் போட்டிகளில் உதவிகரமாக இருப்பார். வெளிநாடுகளில் ஆறு அல்லது ஏழாவது துடுப்பாட்டக்காரராக களம் இறங்க உண்மையான துடுப்பாளர் ஒருவர் தேவை. அந்த இடத்துக்கு ஏற்ப ஜடேஜா தன்னை வளர்த்துக்கொள்வாரா என்பது இன்னொரு கேள்வி. டெஸ்ட் போட்டிகளில் ஆறாவது துடுப்பாட்டக்காரராக அறிமுகமான சேவாக் மீண்டும் அந்த இடத்தைப் பெறவும் வாய்ப்பு இருக்கிறது.

விமர்சகர்களும் இரசிகர்களும் இவற்றைப்பற்றியெல்லாம் கவலைப் பட்டாலும், இந்திய கிரிக்கெட் வாரியத்தின் கவனம் தற்போது ஐ. பி. எல். போட்டிகளின்மீதே உள்ளது. அடுத்த டெஸ்ட் தொடருக்கு இன்னமும் எட்டு மாதங்கள் இருக்கிறதே, என்ன அவசரம் என்பது வாரியத்தின் அணுகுமுறையாக இருக்கையில், தனிப்பட்ட ஆட்டக்காரர்களின் முனைப்பு மட்டுமே இந்தியாவை டெஸ்ட் அரங்கில் உயரவைக்கும். ■

# MARUTHI
## CASH & CARRY

குறைவான விலையில்
நிறைவான பொருள்கள்

15-17 Queensbury Station Parade
Queensbury
Edgware HA8 5NR

**Tel: 020-8952 6655**

மாருதி எக்ஸ்பிரஸ்

Priority for Quality & Taste

தரமானவை
சுவையானவை

உங்கள் வைபவங்களுக்குத்
தேவையான
அனைத்து
சிற்றுண்டி, உணவு வகைகள்




## Maruthi Express
Take away & Catering

14 Queensbury Station Parade, Queensbury, Edgware HA8 5NR

**Tel: 020-3302 4824**

ஆதி பகவன்

# இயக்குநர் அமீர்தான் படத்தின் வில்லன்!



**அமீர் என்ற இயக்குநருக்கு மசாலா படம் எடுக்க முழு உரிமை இருக்கிறது. ஆனால், வாழ்வியல் சார்ந்தோ, பார்வை சார்ந்தோ, களம் சார்ந்தோ எந்தச் சலனமும் ஏற்படுத்தாத ஒரு படத்துக்காகவா அவர் இரண்டரை ஆண்டுகள் வினைகெட்டார்?**

பிரவீண்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 'பருத்தி வீரன்' வெளிவந்திருந்தபோது, நானும் எனது நண்பனும் அப் படத்தைப் பார்க்கச் சென்றிருந்தோம். எம் இருவருக்கும் திரைப்படங்கள் பற்றிய பெரிய புரிதல்கள் எதுவும் இல்லாத சமயம் அது. படம் முடிந்தவுடன் வெளியே வந்தபோது இருவரும் மௌனமாகவே வந்தோம். "படம் எப்படி?'' என்று நண்பனிடம் கேட்டபோது, "படம் நன்றாகவே இருந்தது; 'கிளைமைக்ஸ்'தான் பிடிக்கல'' என்றான். எனக்கும் அதே உணர்வுதான். அந்தப் படத்தின் கதையை, வாழ்வியலும் பண்பாட்டுக்கூறுகளும் கலந்த சுவாரஷ்யங்களோடு சொல்லியிருந்தமை, எம் இருவருக்கும் திரைப்படங்களைப்பற்றிய பார்வை உருப்பெறுவதற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது என்று சொல்லலாம். ஆனால், பருத்தி வீரன், அவன் சித்தப்பா, மாமா, முத்தழகுபோன்ற கதாபாத்திரங்களை நம் கண்முன் கொண்டுவந்த இயக்குநர், 'ஆதி பகவன்' போன்ற உப்புச்சப்பில்லாத படத்தை எடுத்து, தனது படைப்பாக்கத் திறனைக் குறைத்து மதிப்பிட எம்மைத் தூண்டுவார் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

அமீருடைய இரண்டாவது படமான 'ராமு'ம் அவரது படைப்பாக்கத் திறனைக் காட்டியது. தாய் - மகன் இருவருக்குமான பாசப்பிணைப்பை இந்த படத்தில் அழகாக எடுத்துக் காட்டியிருந்தார் அமீர். தமிழ் திரையுலகில் முக்கியமான திரைப்படங்களில் ராமும் ஒன்று என்றே நம்பப்பட்டது. அமீருடைய அந்தப் படம் வணிக ரீதியாக பெரும் வெற்றியை அடையவில்லை என்றாலும், விருதுகளை அள் ளிய படமாக அமைந்தது. அவரது அடுத்த படமான பருத்திவீரன் வசூலை அள்ளியதோடு, பல விருதுகளையும் குவித்தது. கிராம மக்களின் வாழ்வியலை யதார்த்தமாகப் படம்பிடித்த ஒருசில படங்களில் ஒன்றாக பாராட்டப்படும் படம் அது.

ஆனால், ஆதி பகவன் படத்தில் அவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. இரண்டு 'டான்'களுக்கு இடையிலான கதை. அவர்களில் ஒருவரான ஆதி என்ற டான், தாய்லாந்துக்கு குடும்பத்துடன் பிழைப்புக்காகச் செல்கிறாராம். தாய்லாந்துக்கு யாராவது பிழைப்பு நடத்தப் போவார்களா, என்ன? பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்யும் பாத்திரம். அதனால், பெற்ற தாயே மகனை ஒதுக்குகிறாராம். அதற்குப் பின்னர், அவரைப் பற்றிய சிறு குறிப்புக்கூட இல்லை. ஆதியை ஒரு பெண் காதலிக்கிறாளாம். அவளுக்காக மும்பை வருகிறானாம். அப்போதுதான், தன்னைப்போலவே இருக்கும் பகவான் என்ற டானுக்கு காவல்துறை வீசிய வலையில் தான் சிக்கியிருப்பது தெரியவருகிறது. அதிலிருந்து எப்படி வெளியே வருகிறான் என்பதுதான் கதை. வெளிநாடு ஒன்றில் முக்கிய 'ரவுடி'யாக வாழ்ந்துவருபவன், தன்மீது வைத்திருக்கும் குறியைப்பற்றி ஒன்றும்தெரியாத அப்பாவியாக இருப்பானா? அழகான பெண் என்ன சொன்னாலும் நம்பிவிடுவானா?

படத்தில் தேடித்தேடிப் பார்த்தாலும் கதையோ, திரைக்கதையோ, காட்சியமைப்பில் தொடர்ச்சியோ இல்லை. யார் நாயகன், யார் வில்லன் என்பது



வின் வணிகப் படம்தான். ஆனால், அதில் கமல், ஸ்ரீதேவி நடித்த பாத்திரங்களுக்கான அழுத்தம் இப்போதும் பேசப்படுபவை. மணிரத்தினத்தின் ‘அலைபாயுதே’,‘ஆயுத எழுத்து’ ஆகிய படங்கள் வணிக ரீதியான படங்கள். கதையும் பெரிய அளவில் இல்லை. ஆனால், அலைபாயுதேயில் தெரிந்த புதுவித திருமணங்களும், ஆயுத எழுத்தில்வந்த பாத்திர அமைப்புகளும் சர்ச்சையுடன் பேசப்பட்டவை.


ஏன்; மசாலா படங்களின் இயக்குநர்களும் நல்ல செய்திகளை தமிழ்கூறு நல்லுலகுக்கு வழங்கியுள்ளார்கள். ‘ஜெமினி’, ‘தூள்’, ‘கில்லி’போன்ற படங்கள் முழுநீள மசாலா படங்களே. ஆனால், அவை ஏதாவது ஒரு வகையில் சுவாரஷ்யமானதாகவும் வித்தியாசமானதாகவும் இருந்தன. இத்தகைய விடயங்கள் கலப்பதால் மசாலா படங்களும் பேசப்படுகின்றன. ஆனால், வாழ்வியல் கலந்த படங்களைக் கொடுத்த இயக்குநரான அமீர், ஆதிபகவனில் இவற்றைக் கொண்டுவர மறந்துவிட்டதுதான் சோகம். அமீரிடம் அவரது வாழ்வியல் கலந்த பார்வைக்காகத்தானே மக்கள் வருகிறார்கள். அவர்களுக்கு அமீர் தரும் பதில் என்ன?

இந்த படத்தைப் பார்த்ததும் ஓர் எண்ணம் தோன்றியது. ஆதியோ, பகவானோ அல்லது காதலியாக வரும் நீது சந்திராவோ, இவர்களெல்லோரும் சிறிய வில்லன்கள் மட்டுமே. இதில், பெரிய வில்லன் இயக்குநர் அமீர்தான்!

தெரியவில்லை. பல புதிர்களுக்கு விடைதராமலேயே படம் முடிக்கப்பட்டிருக்கிறது. படத்தில் புதுவிதமான காட்சிகள் என்று எதுவும் காணப்படவில்லை. இவற்றையெல்லாம் தேடிப் பார்த்ததில் தலைவலிதான் மிச்சம்!

அமீர் என்ற இயக்குநருக்கு மசாலா படம் எடுக்க முழு உரிமை இருக்கிறது. ஆனால், வாழ்வியல் சார்ந்தோ, பார்வை சார்ந்தோ, களம் சார்ந்தோ எந்தச் சலனமும் ஏற்படுத்தாத ஒரு படம் இது. இதற்காகவா அமீர் இரண்டரை ஆண்டுகள் வினைகெட்டார்?


உண்மையில், மசாலா படங்களிலும் அழுத்தமான சலனங்களை ஏற்படுத்தமுடியும். குறைந்தபட்சம், அழகான காட்சிகளால் படத்தை சுவாரஷ்யமாகக் கொண்டுசெல்ல முடியும். பல இயக்குநர்கள் அதை செய்திருக்கிறார்கள். ‘சிகப்பு ரோஜாக்கள்’ பாரதிராஜா



# கால நதி

மறைவு

**சு. சபாரத்தினம்**



சோழ நாட்டு பண்பாட்டுடன் கலந்த 'யாழ்ப்பாண பாரம்பரியம்' என்ற ஒன்று, ஆரிய சக்கரவர்த்திகளான யாழ்ப்பாண அரசர் காலத்துக்குப் பின்னர் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும், பின்னர் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலும் எதிர்நீச்சலோடு நிலைத்துச் சிறந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது, ஆறுமுக நாவலர் பேணிக்காத்து அளித்த இப் பாரம்பரியத்தில், பழையன போற்றப்படுதலும், புதியன ஏற்றுக்கொள்ளப்படுதலும், வடமொழியை அணைத்துக்கொள்ளுதலுமான ஒரு சிறப்பு மரபை இலக்கியவாதிகள் தமிழில் பேணினர். வண்ணார்பண்ணை, இந்த கலாசார, மொழி, பண்பாட்டு பாரம்பரியத்தின் ஊற்றாக விளங்கியது.

'யாழ் நூல்' தந்த விபுலாநந்தரைப்போல, 'திராவிட சிற்ப நூல்' தந்த கலைப்புலவர் நவரத்தினத்தின் 'கலாநிலையம்' வெளியிட்ட 'ஞாயிறு' காலாண்டுச் சஞ்சிகை, தமிழில் புதுமை சேர்த்தது.

அங்கு அமைந்த சிவன் கோவில் இப் பாரம்பரியத்தின் கலை மரபை சாற்றியது.

ஆக, இப் பாரம்பரியத்தில், வண்ணார்பண்ணையில் உதயமான செய்திப் பத்திரிகை 'ஈழநாடு'. சிவன்கோவிலுடனும் கலாநிலையத்துடனும் தொடர்புடையதாய் எழுந்தது.

அப்போது, வண்ணார்பண்ணையிலிருந்து 'இந்து சாதனம்' சைவ சமய பத்திரிகையாக வெளியாகிக்கொண்டிருந்தது.

1959இல், கொழும்பு 'வீரகேசரி'யில் பணியாற்றியோர் பலருடனேயே ஆரம்பிக்கப்பட்டாலும், இந்த யாழ்ப்பாண பாரம்பரியத்தில் 'ஈழநாடு' ஒரு பத்திரிகைத் தனித்துவத்தைப் பேணியது. சென்னையில், எஸ். எஸ். வாசன் ஆரம்பித்த 'ஆனந்த விகடன்' ஏற்படுத்திய புதுமையையும் அநுசரித்து, அது தன் தனித்துவத்தை வளப்படுத்தியது. இன்று, தமிழ்ப் பத்திரிகை உலகில் 'ஈழநாடு பத்திரிகைப் பாணி' அத் தனித்துவத்தில் சிறக்கிறது. பத்திரிகைத் துறையோடு இணைந்த, எழுத்தாற்றலையும் கொண்டிணைவது அது.

## 'ஈழநாடு' பத்திரிகைப் பாணி

ஆக, இந்த ஈழநாடு பத்திரிகைப் பாணிக்கு வரப்பிட்டு, வளப்படுத்தியவர்களில் ஒருவர் 'சசிபாரதி' என்கிற சு. சபாரத்தினம்.

சுன்னாகத்திலிருந்து வெளிவந்த 'ஈழகேசரி'யிலிருந்து ஆசிரியராக இணைந்த இராஜ. அரியரத்தினத்தையடுத்து, 'ஈழநாடு' வளப்படுத்திய பத்திரிகைத் துறையில் இலக்கிய, எழுத்து துறையிலுமாக சிறப்பிடம் பெறுபவர் சசிபாரதி. ஞாயிறு வெளியாகும் வாரமலர் ஆசிரியராக திகழ்ந்து, ஈழத்து எழுத்தாளர்களில் சில தலைமுறையினரைச் செப்பனிட்டவர்.

கல்லூரி மாணவனாக இருந்தபோது ஒரு கலை விமர்சன கட்டுரையை எழுதி, 'மானா' என்று பெயரிட்டு, அவரிடம் கொடுத்தேன். ஆசிரிய பீடத்தில், ஒவ்வோரு மேசையின் மூலையிலும் போத்தலில் இருக்கும் நீலநிற மையைத் தொட்டு, நீண்ட விரல்களிடையே பேனாவை அழகாகப் பிடித்து, 'மானா' என்பதற்கு மேலாக குறுக்கே ஒரு கோடிட்டு அதனை 'வெட்டிவிட்டு', புதிய தாள் ஒன்றில் கட்டுரைக்கு தலைப்பு, உப தலைப்பு இட்டு, 'மாலி' என்று எழுதி, அத் தாளை கட்டுரையுடன் வைத்து நீளமாக மடித்து, அச்சு கோப்பதற்காக கீழ்மாடிக்கு கொடுத்தனுப்பினார்.

என்னிடம் அவர் எதுவும் பேசவில்லை; கேட்கவில்லை.

இந்த உரிமையும் அரவணைப்பும் 'சபா'வினுடையது.

அதன் பின்னர், பத்திரிகை, எழுத்து துறையில் நான் 'மாலி'.

வண்ணார்பண்ணையில், யாழ்ப்பாணத்துக்கு ஓர் அடையாள அழகுசேர்த்தது 'ஈழநாடு' அலுவலக கட்டடம். அப்படியே அடையாளமாகும் ஒரு 'பண்பும்', அந்நியோன்யமும் கூடவே அதற்கு இருந்தது. இது, அங்கு பணிபுரிந்தவர்களோடு அந்நியோன்யத்துடன் பழகியவர்களுக்கு புரியும்; அவர்களுக்கு மட்டுமே புரியும். இந்த 'பண்பிலும்' சபா சிறந்தவர்.

'ஐயாறன்' என்ற புனைபெயருடன், தஞ்சாவூர் திருவையாற்றைச் சேர்ந்த கே. பி. ஹரன் ஆசிரியராகவிருந்து ஓய்வுபெற்றபின்னர், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அதிபராகவிருந்து ஓய்வுபெற்ற யாழ்ப்பாணத்து கல்விமான் என். சபாரத்தினம் 'ஈழநாடு' ஆசிரியராக விளங்கினார். 'சபாரத்தினம் மாஸ்ரர்' என்றே அழைக்கப்பட்ட அவரால் உண்மையில் 'ஈழநாடு' பெருமைபெற்றது. ஆனால், 'ஈழநாடு சபாரத்தினம்' என்று பெயர்பெற்று நிலைப்பவர் 'சசிபாரதி'.

இலங்கையில் ஏற்பட்ட நிலைமைகளில் நிர்ப்பந்தங்களுக்குள்ளான ஏராளமானவர்களுடன் ஒருவராக சபாவும் இந்தியாவில், திருச்சியில் சில ஆண்டுகள் வாழ்ந்து, 83ஆவது வயதில் அண்மையில் காலமானார்.

வெள்ளை வேட்டி, 'நாஷனல்'; உயர்ந்த தோற்றம். அப்படியே அந்த உள்ளம்; அவர் பண்பு.

**- மாலி**

"Make Your Dream Home Come True"



**PARAM GNANASWARAN**
REAL ESTATE BROKER
Direct: 416-230-1107

RESIDENTIAL, COMMERCIAL & INVESTMENTS

**RIGHT AT HOME REALTY INC., BROKERAGE**

HOME OFFICE:
**401-7045 EDWARDS BLVD,**
**MISSISSAUGA, ONT.L5S 1X2**
**PH# 905-565-9200**

MAIN OFFICE:
**202 DON MILLS ROAD**
**TORONTO, ONT.M3C 1W3**
**PH# 416-391-3232**



# Lycamobile

**Call the world for less**



# Sri Lanka Favourite

Get **1500** minutes

To call your favourite Hutch Number

or

Get **1000** minutes

To call your favourite Sri Lankan Number (Landline or Mobile)

Just **£15**

Valid for 30 Days

To activate : Dial *139*7515*<SL number with country code># e.g. *139*7515*0094789555666#
Text 7515 <SL number with country code> to 3535 e.g. 7515 0094789555666 to 3535

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile Sri Lanka Favourite Number bundle ("the offer") inclusive allowances are for calls for up to three subscribed Lycamobile numbers in the UK to one standard Sri Lankan landline or mobile number only. Other usage and usage in excess of your allowance will be charged at standard rates. The offer is valid for 30 days from the date of purchase. A customer may have up to three offers on their account at any one time. Any remaining allowance after the validity period will not be carried over into the next period should the customer renew their bundle. Customers will be charged for each sharers per 30 days. Lycamobile reserves the right to replace or amend the offer or these terms and conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle or adding or changing sharers. The offer is for non-commercial, private, personal use only. Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that the offer is being used for non-commercial purposes. Promotional period: the offer is valid from 1st April 2013 until 30 April 2013.

Lyca mobile
Call the world for less